ம. சிங்காரவேலரின்

# பொதுவுடைமை

## விளக்கம்

ம. சிங்காரவேலு

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட்.,
6. நல்லதம்பி செட்டி தெரு, சென்னை-2.

முதல் பதிப்பு : ஜூலை, 1974
உரிமைப் பதிவு:

விலை : ரூ. 5-00

அச்சிட்டோர்:
நியூ செஞ்சுரி பிரிண்டர்ஸ்,
சென்னை-58

# பதிப்புரை

தோழர் ம. சிங்காரவேலு அவர்கள் "பொதுவுடைமை விளக்கம்" எனும் இந்நூலில் தரப்பட்டுள்ள கட்டுரைகளைச் சிறு நூல் வடிவில் அச்சிட்டு வெளியிடத் திட்டமிட்டிருந்தார். இதில் ஒரு பகுதி 1924/28 அளவில் எழுதப்பட்டவை என்று தோன்றுகிறது. மற்றொன்று பொதுவுடைமை என்றால் சோஷலிஸம் என்று துவங்கும் பகுதி 1931/2 அளவில் எழுதப் பட்டது. ஏனெனில் அதில் கராச்சி காங்கிரஸின் திட்டமும் விமர்சிக்கப்படுகின்றது.

தோழர் ம. சிங்காரவேலு அவர்கள் இந்தியக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் ஆரம்ப காலத்தில்—காந்திஜியின் ஒத்துழையாமை இயக்கக் காலமாகிய—1920 இலிருந்து ஆரம்ப காலத்தில் கம்யூனிஸ்டு கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு, லெனினது தலைமையில் ஒரு சோஷலிஸ்டு புரட்சி நடந்து புது உலகம் உருவாகி வருவதைக்கண்டு, பாட்டாளிகளுடைய விடுதலைப் பாதையைக் கண்டு, அன்று அவருக்குப் புலப்பட்ட வகையில், அதனைத் தைரியமாகக் காங்கிரஸிலும் எடுத்துக் கூறியவர். தோழர் எஸ். ஏ. டாங்கே, முஜபர் அகமத் ஆகியோருடன் கான்பூர் கம்யூனிஸ்டு சதி வழக்கில் கைது செய்யப்பட்டவர். பின்னர் சென்னையிலும், கரக்பூரிலும், தென்னிந்திய ரயில்வே தொழிலாளர்களிடையிலும் பணியாற்றி அவர்களது போராட்டங்களில் பெரும் பங்கினை ஆற்றியவர். சுயமரியாதை இயக்கத் தலைவர்களுடன்

சேர்ந்து சமதர்ம சோஷலிஸத் திட்டத்தைத் தயாரித்து அவர்களிடம் முன்வைத்து விளக்கியவர். அவரது விளக்கத்திஞல் வெளிச்சம் பெற்று, வழிகாட்டுதலால் ஊக்கம் பெற்று முறையான, முன்பின் முரணற்ற, சமயசந்தர்ப்பவாதமற்ற விஞ்ஞான சோஷலிஸ்டு வழியைக் கண்டு கம்யூனிஸ்டு இயக்கத்தில் வந்து சேர்ந்த சுயமரியாதை இயக்கத் தொண்டர்கள் பலர்.

தோழர்கள் ப. ஜீவானந்தம், ஆர். கிஸன், கே. முருகேசன் ஆகியோர் தமிழ் நாட்டில் கம்யூனிஸ்டு இயக்கத்தைக் கட்டி வளர்ப்பதில் பெரும் பங்காற்றியவர்கள். 1937க்குப் பிறகு அவருடைய வயோதிகப் பருவத்திஞல் சுறுசுறுப்பான பணி புரிய முடியாவிட்டாலும், தொழிலாளர் சங்கப்பணிகளுக்கு அவர் யோசனை கூறியதுடன் 1946ல் அவர் மறையும் வரை தோழர்கள் ஏ. எஸ். கே, ஜீவா, கே. முருகேசன் ஆகியோருடன் தொடர்பு கொண்டிருந்தார்.

இந்தியாவில் கம்யூனிஸ்டு இயக்கத்திலும், தமிழ் நாட்டின் கம்யூனிஸ்டு இயக்க வரலாற்றிலும் ஆதிமுதலி லிருந்து நீண்ட காலம் பணியாற்றிய தோழர் ம. சிங்கார வேலுவின் உரைகள், கட்டுரைகள் ஆகியவை அனைத்தையும் திரட்டி வெளியிடும் நோக்கத்துடன் தோழர் முருகேசன் பல விஷயங்களைச் சில ஆண்டுகளாகச் சேகரித்து வந்துள்ளார். அவ்வாறு சேகரிக்கப்பட்டுள்ளவற்றைச் சம்பந்தப்பட்ட விஷயங்களைச் சேர்ந்த உரைகள் கட்டுரைகளைச் சேர்த்து சிறு நூல்களாக வெளியிடும் உத்தேசத்துடன் இந்த முதல் நூல் வெளியிடப்படுகின்றது. 'விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு' என்ற நூலிலே திரு. ம. பொ. சி. அவர்கள் தோழர் சிங்காரவேலர் பற்றி எழுதியுள்ள ஒரு பகுதியில் சோஷலிஸக் கருத்துகளைத் தமிழில் பரப்புவதற்கு அவர் எடுத்த முயற்சிகளைப் பற்றி குறிப்பிட்டு, "இன்னும், தோழர் சிங்காரவேல் அவர்கள் தமிழ் எழுத்தோவியங்கள் பலவற்றை கையெழுத்து பிரதியளவிலேயே வைத்துவிட்டு மறைந் தாரென்றும், அவை பாதுகாக்கப்படாமல் மறைந் தொழிந்தனவென்றும் அறிகிரேம்" என்று எழுதியிருக்

கின்றூர். மறைந்து ஒழியாமல் அகப்பட்டு, கைப்பிரதிகள் கிடைத்து அக்கைப்பிரதிகளை அப்படியே எடுத்தளிக்கும் முயற்சி இது.

இந்த நூலில் பொதுவுடைமை பற்றிய 2 தனிப் பகுதிகள் தோழர் ம. சிங்காரவேலு அவர்கள் கையெழுத்துப் பிரதி களிலிருந்து சரி பார்க்கப்பட்டு எடுக்கப்பட்டவை. இந்தக் கைப்பிரதிகள் சுமார் 40, 45 வருஷங்களுக்கு முன்னால் எழுதப்பட்டவை. அவைகளைப் பார்த்து 'டைப்' செய்து கொடுத்த தோழர்கள் ஆர். வேலு, ஆர். கே. ராமமூர்த்தி ஆகிய இருவரும் அரும்பாடுபட்டு உதவியுள்ளனர்.

கைப்பிரதி பழையது என்பதினாலும், அதில் சில பக்கங்கள் கிடைக்காமற் போயிருப்பதாலும் ஓரிரு இடங்களில் என்ன விஷயம் கூறப்பட்டிருக்கக்கூடும் என்று குறிப்பு எழுதப்பட்டுள்ளது. அது மட்டுமின்றி 40 அல்லது 50 ஆண்டுகளுக்கு முன்னர் அந்நிய ஆட்சியின் கீழ் நம் நாடு இருந்த நிலையில் சோஷலிஸ்டு, கம்யூனிஸ்டு நூல்கள் சரிவரக் கிடைக்கப் பெறுமலிருந்த நிலையில் தோழர் ம. சிங்காரவேலு தனக்குக் கிடைத்த நூல்கள் மூலம் அன்று இருந்த அரசியல் பொருளாதார நிலைக்கு உகந்தபடி, தனக்குப் புலப்பட்ட கருத்துகளை எழுதியுள்ளார் என்பதை நாம் மனத்திற் கொள்ள வேண்டும். பொதுவுடைமையை தமிழ் மக்களுக்கு எடுத்துரைத்த வரலாற்றில் தானறிந்த கருத்துகளை எளிய தமிழில் எடுத்துரைக்க முயன்ற முயற்சி இது என்றும் நாம் கவனத்தில் வைத்து இந்நூலைப் படிக்க வேண்டும்.


தோழர் சிங்காரவேலரின் இக்கையெழுத்துப் பிரதிகளை மிகவும் விழிப்புணர்வுடன் பாதுகாத்து அச்சிட உதவி புரிந்த தோழர் கே. முருகேசன் அவர்கட்கும், வாசகப் பெருமக்கள் படிப்பதற்கு உதவியாக இக்கையெழுத்துப் பிரதியை முறையாகவும் கோவையாகவும் செப்பனிட்டுத் தந்து தொகுத்தளித்த தோழர் ஸி. எஸ். சுப்பிரமணியம் அவர்கட்கும் எமது நன்றி உரியதாகுக!

—பதிப்பகத்தார்.

5-FEB 1976
MADRAS

# பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| கான்பூர் பொதுவுடைமை மாநாட்டுச் சொற்பொழிவு ... | 1 |
| பொதுவுடைமை விளக்கம் (அறிமுகம்) ... | 22 |
| பூமியும் பொருளாதாரமும் ... | 43 |
| பொதுவுடைமை விளக்கம் (பொதுவுடைமை) ... | 57 |
| பாங்கிகளும் அதன் கேடும் ... | 80 |
| பொதுவுடைமையும் வேலை இல்லாமையும் ... | 92 |
| பொதுவுடைமையும்—யுத்தங்களும், யுத்த ஆயுதங்களும் ... | 96 |
| பொதுவுடைமையும் போகப்பொருள்களும் ... | 100 |
| பொதுவுடைமையும், நீதியும், நீதிஸ்தலங்களும் ... | 106 |
| பொதுவுடைமையும், மதமும், ஜாதியும். ... | 111 |
| பொதுவுடைமையும் பெண்களும் ... | 123 |
| சமுதாயமும் வர்த்தகமும் ... | 135 |
| பொதுவுடைமையும், கூலியும், சம்பளமும். ... | 140 |
| பொதுவுடைமையும் கல்வியும் ... | 146 |
| தேசியமும் அகில தேசியமும் ... | 167 |
| விவசாயத் தொழில் ... | 175 |



ம. சிங்காரவேலு

# 1

# கான்பூர் பொதுவுடைமை மாநாட்டுச் சொற்பொழிவு

*இந்தியப் பொதுவுடைமையாளர் மாநாடு கான் பூரில் 26-27 டிசம்பர் 1925இல் நடைபெற்ற, அ. இ. பொதுவுடைமையாளர் முதலாவது மாநாட்டில் தலைமை வகித்து, சென்னை தோழர், ம. சிங்காரவேலர் ஆற்றிய தலைமை உரை.*

**தோழர்களே!** பொதுவுடைமைக் கொள்கையின் விரோதிகள் நமது ஜீவகாருண்ய இயக்கத்தை நசுக்கிப போட முயனறு கொண்டிருககும் இக் காலததில் நாம் இங்கு இந்தப் பாரதநாட்டின் அரசியல, பொருள் நிலைமைகளை ஆராய்ந்து இந் நாட்டாரின சுக வாழ்வுக்கான வழிகளைத் தேடும் பொருட்டுக் கூடியுளளோம. இந்த மாநாட்டின் பயனுக நமது சமாதான இயக்கததின் கருத்தை நம்மை ஆள்வோரும் நமது நாடடாரும் நனகு அறிநது கொளளவார்கள எனறும், பொது ஜனஙகள் நமது வேலைக்கு அதிக ஆதரவு அளிப்பார்கள் என்றும நமபுகிறேன்.

இந் நாட்டிலும் பிற நாடுகளிலும் நமது தோழர்கள் எவ்வளவு தூரம துன்புறுத்தப்பட்டிருக்கிறார்கள் என்று எண்ணும்போது ஆளும் இனத்தார் நம்மை முழுதும பிறழ உணர்ந்திருக்கிறார்கள் என்பது வெள்ளிடைமலைபோல் விளங்குகின்றது. அவர்களுக்கு நாம் அளிக்கக்கூடிய பதில் ஒன்றே ஒன்றுதான. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கல்வாரியில் மானிட வர்க்கத்தின் மகாபுருஷர்களில் ஒருவர் தம்மைத் துன்புறுத்தியவர்களைப் பார்த்து "அந்தோ நீங்கள் செய்வதென்னவென்று நீங்களே அறியீர்கள்" என்று கூறிய பதிலையே நாமும இப்போது கூற வேண்டியவர்களாகியிருக்கிறோம். இவ்வுலகில் சமுதாயம, அரசியல், பொருளாதிலை, விஞ்ஞானம, தத்துவம முதலிய எந்தத் துறையிலும சீர்திருத்தம செய்ய முதன் முதலில் முனவருவோர் மகத்தான கஷ்டங்களுக்கு உட்படுத்தப்படுவது வழக்கமாக இருந்து வருகிறது. ஆனால் காலச் சக்கரத்தின் சுழலிலே இவர்கள் கஷ்டங்கள் மற்றவர்களுக்கு இன்னும் அதிகக் கஷ்டங்கள் அனுபவிக்கத் துணிவூட்டுகின்றன. கடைசியில், இவ்வுலகம் பூராவும் அவர்களைப் போற்றத் தொடங்குகின்றது. ஆதிகாலம் தொட்டு மனித வர்க்கத்தின சரித்திரம் இதுவே யாகும. இன்று தங்கள் சகோதரருக்குத் தொண்டு செய்யும முயற்சியில் மகத்தான கஷ்டங்களை அனுபவிக்கும் பொதுவுடைமைக் கட்சியின் சரித்திரமும் இவ்வாறே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

தியாக மூர்த்திகளின் நினைவு இன்றளவும் சிறையில் கிடந்து துன்புறும் அருமைத் தோழர்கள் மூவரின் ஞாபகம முதன் முதலில் வருகிறது.

இந் நாட்டுச் சட்டம் அவர்கள் குற்றவாளிகள என்று தீர்ப்புக் கூறிவிட்டது. அவர்களுக்கு நமது மனமார்ந்த அனுதாபத்தைச் செலுததுகிறோம். அரசாங்கத்தார் பெருந்தன்மையுடன் அவர்களை விடுதலை செய்வார்சள் என நம்புவோமாக! அடுத்தாற் போல் கிரேட் பிரிட்டனில நடைபெறும் பொது வுடைமைக் கட்சி வேட்டையில் துனபுறும் தோழர் களுக்கும், இனனும் தங்கள நாட்டின விடுதலைக் காகவும துன்புறும அனபர்கள் அனைவருக்கும நமது அனுதாபததைச் செலுத்துவோம. சுதந்திரத் தேவி யின பக்தர்கள தண்டிககப் படுவதற்குப பதிலாக விரும்பி வரவேற்கபபடும் காலம் இவ்வுலகில விரை வில தோனறுமென எதிர்பார்ப்போமாக.

நம்மைப் பிரிந்து விண்ணுலகேகிய உத்தமர்களை நினைவு கூர்வதும நமது கடனுகும. சமீப காலத்தில் கொடுமைககிரையாகி மாணடவர்களில ரோசாலக் சம்பர்க் எனற ஜெர்மன பெணமணியை முதன் முதலில் குறிப்பிடவேண்டும். பெர்லின நகரில் ஜனக் கூட்டத்தைச் சமாதானம் செய்ய இவர் முயனறு கொணடிருக்கும்போது குரூரமாகக் கொல்லப்பட்டு அவர் இறந்தார் கார்ல்லீபணட் என்பவரும இவ் வாறே தொழிலாளருக்கு ஊழியம செய்து கொண டிருககையில் கொலலபபட்டார். பிரஞ்சுககாரர் களில் ஜாரஸ் என்பவரை முக்கியமாகக குறிபபிட

வேண்டும். இவர்களுடைய மரணமும கான்பூர்; சென்னை முதலிய பல நகரங்களில் இறந்துபட்ட பல தொழிலாளரின் மரணமும் நம்மைத துயர்க்கடலில் ஆழ்த்தியிருககின்றன. ஆனுல் இவற்றையெல லாமவிடத் தொழிலாளர் உலகததுககு மகததான நஷடம் நிக்கலோய் லெனின மரணமாகும. இவ ருடைய மரணததால தொழிலாளா உலகமே துயரத்தில் மூழ்கி விட்டது. உலகில் தீனர்களின் நலததையன்றி பிறிதெதையும் கனவினும் கருதாதவர் இவர். ரஷ்யாவில் ஏற்பட்டிருககும தொழிலாளர் இராஜ்யம அவருடைய உதவியைப் பெரிதும வேண்டி நிறகும காலததில் அவர் காலனுல் கொண்டு போகபபட்டார். ருஷ்யாவில் இநத மகானுல ஆரமபிககப்பட்ட வேலே வருங்காலததில் மானிட வர்ககத்தின் சுகவாழ்விற்கு ஆதாரமாயிருக் கும எனபதில் சிறிதும் ஐயமிலலே. நமது இந்திய நாட்டில அவரவர் மனச்சான்றுகள் வழி நின்று பல வகைகளிலும தஙகள் சகோதரர்களுக்காக உழைதத மகானகள் மரணததிற்காகவும நாம வருந்துகினறேம். இவர்களுள் திலகர், தேசபந்து தாஸ், சுப்பிரமணியசிவா இவர்களுடைய நஷ் டததை முக்கியமாகக குறிப்பிடவேணடும. இனனும் நமக்குத் தெரிநதும் தெரியாமலும மன்பதையின் முன்னேற்றத்திறகாகவும தேசவிடுதலேககாகவும் உயிர் துறநத அனேவருக்கும் நாம கண்ணீர் பெருக்குகிறேம.

## நாட்டின் நிலே

நம்மை விட்டுப் பிரிந்தவர்களேப் பற்றி இதுவரை பேசினேம். நமமுடனிருக்கும் சகோதரர்களேப்

பற்றி இனிமேல் ஆராய்வோம். /உலகிலே மானிட வர்க்கத்தில் இந்நாட்டவரைப் போல் துயரக்கடலில் மூழ்கியிருப்போர் எவருமில்லை எனக்கூறலாம். வாழ்வுக்கு அவசியமான உணவு, குடியிருப்பு வசதிகள், நமக்கு இல்லை. உயர்ந்த அறிவு வாழ்வுக்குத் அவசிய மான சுதந்திரம், சமத்துவம், கல்வி இல்லை. நம்மில் பெரும்பானமையோர் உலகிலுள்ள மற்ற தேசத் துக்கு எலலா வகையிலும் கீழ் பட்டிருக்கிறோம். 30 கோடி ஜனங்களில் 4 கோடி ஜனங்கள் அரை வயிறு உண்டு அரை ஆடை உடுத்து துன்புற்றிருக் கின்றனர். 15 கோடி பேர் தகுந்த குடியிருப்பு வசதியினறி மனிதர்கள் வசிக்கத்தகாத இடங் களில் வசிக்கின்றனர். நூற்றுக்கு எண்பது பேருக்கு மேல் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். 30 கோடியில் கால் பகுதிக்கு மேல் தீண்டத தகாதவர்கள். இவர்களுக்கு மற்ற வகுப்பாருக்கு ஊழியம் செய்வதைத் தவிர வேறு வகைச் சம்பந்தமும் கிடையாது. அவாகள் கோயிலுக்கும் போகக்கூடாது. குளங்களில் குளிக்கக் கூடாது. சில இடங்களில் பொதுச் சாலைகளில் நடக்கவும் கூடாது. சுமார் 10 அல்லது 20லட்சம் அறிஞர்கள் இருக்கிறார்கள். இவர்களும் வெளி நாட்டிலிருந்து வந்து நம்மை ஆள்வோராயுள்ளவர்கள் காட்டும வழி பற்றிதான தங்கள் ஏழைகளுக்கு ஏதாவது ஊழியம் செய்யலாம. நமது தாய் நாட்டில் நமது சகோதரர்கள படும் துன்பங்களை நீக்கும் பொருட்டு கிளர்ச்சி செய்வது ஆட்சேபிக்கப்படுகிறது. சில சமயங்களில் குற்றமாகவும் கருதப்படுகிறது. வரி

விகிதம் தாங்க முடியாததாகி விடுகிறது. இத்துடன் அரசாங்கத்தின் செலவு முக்கியமாக ராணுவச் செலவு பெருகி விடுகிறது. இல்லாத பகைவர்கள் இருப்பதாக எண்ணிக கொணடு பெரிய சைன்ய மொன்று வைத்து 60 கோடி செலவு செய்யபபடு கிறது. அளவுக்கு மீறிய உத்தியோகஸ்தர்களும் அவர்களுக்கு அளவுக்கு மீறிய சமபளம் தருவதனல் தேச முன்னேற்றத்துக்கு அவசியமான துறை களுக்குப் பணமில்லை. லட்சக்கணக்கான மககள் தடுக்கக கூடிய நோய்களுக்கு இரையாகி மாள் கிறார்கள். ஆயுள்வலிமை நாகரிக வாழ்வின் அறிகுறியாகக் கருதலாமென்ருல் இந்திய நகரங் களே உலகில் தாழ்ந்த நிலையில உள்ளன. செல்வர்கள்தாம் உயர் கல்வி பெறககூடும். கல்வி யின் விலை அவ்வளவு அதிகமாகி விட்டது. நாட்டில் பிறநத மக்கள் தங்கள் வீடுவாயில்களைக் காப் பாற்றிக் கொள்ள ஆயுதப் பயிற்சிக்கு வழி யிலலாமல் இருக்கிருர்கள். இந்தத் துரதிருஷ்டம் பிடிதத நாட்டின் துயரங்களையெல்லாம் சொல்ல இந்த முனனுரை இடம் தராதென விடுகின்றேன். சில பணக்காரர்கள் மட்டும் பொது நலததை மறந்து தங்களின் சொந்த சுகபோகங்களைப் பெருக்கிக் கொள்வதில் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றனர்.

**ஏழைத் தொழிலாளர்:**

மொத்த ஜனத்தொகையில் " $\frac{2}{3}$ பேரான குடியானவர்கள்தாம் எல்லோரிலும் அதிகமாகக் கஷ்டப்படுகிருர்கள். கிராமங்களில் அவர்கள் வாழவு பயங்கரமாக உள்ளது. பஞ்சமும், பிணியும் அவர்களைப் பிடுங்கித் தின்கின்றன. வறுமை

யின் பயங்கர விளைவிலும் பிரஜா உற்பத்தி மிகுதியினால் அவர்கள் அழிந்து போகாமல் இருந்து வருகிறார்கள். எல்லோருக்கும் உணவளிக்கும் விவசாயத் தொழிலாளி தன உழைப்பின் பயனைச் சிறிதும் அனுபவிக்க இயலாதவனாயிருக்கிறான். அவன் உற்பத்தி செய்வது ஏராளம். ஆனால் அவனுக்குக் கால வயிறு உணவுகூட கிடைப்பதில்லை. / நகரங்களிலுள்ள ஆலைத் தொழிலாளர்கள் வாழ்க்கை நடத்துவதே கஷ்டமாய்க் காலங் கழிக்கிறார்கள.) எல்லா நாடுகளும உயிர் வாழ்க்கைக்குப் போதுமான சம்பளம் கொடுக்கப்படவேண்டுமென போராடிக் கொண்டிருக்கையில் இந்தியா மட்டும் பேசாமலிருந்து கொண்டிருக்கிறது. நமது அரசியல் பொருளாதார நிலைமைகளின் சாரம் இதுதான். பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் மனித வர்க்கத்தின் $\frac{1}{5}$ பகுதியாகிய நாம இங்கிலையில் வாழ்ந்து வருகிறோம். அருமைத் தோழர்களே! இந் நிலைமையைச் சீர்திருத்த நீங்கள் யாது செய்யப் போகிறீர்கள்? துனபம நிறைந்த இல்வாழ்க்கையை இனபவாழ்வாக மாற்றுவதற்குப் பொதுவுடைமைக் கட்சியினராகிய நாம் எமமுறையை அனுசரிக்கப் போகிறோம என்பதை இமமாநாட்டில் தெளிவாகக் கூறிவிட வேண்டும். இதைப்பற்றியே நான் இனி மேல் இங்கு விவரிக்கப போகிறேன. நீங்கள் வேண்டிய திருத்தங்கள் செய்து அங்கீகரிப்பீர்களாக.

**சுயராஜ்யம்**

தேசத்தில் இப்போது நடைபெறும் சுயராஜ்யப் போராட்டத்தில் பொதுவுடைமைக்கட்சியினராகிய நாம் முன்னணியில் நிறக வேண்டும். நாம் இப்போது மிகச்சிறு தொகையினராகவே

இருக்கிறோம. ஆனால் வருங்காலத்தில் இநதியாவில ஏற்படப் போகிற தொழிலாளர் இராஜ்யதிற்குத் வழிகோலுவோர் நாமே. சமீபததில் அரசியல் அமைப்பல் எததகைய மாறுதல் ஏற்பட்டாலும தொழிலாளர் உரிமைகள் புதிய அமைப்பில் இடம் பெறுமாறு நாம பார்த்துக்கொள்ள வேண்டும

## காங்கிரஸ்

இந்தத் தேசிய அமைப்பைப் பறறி நமது நோக்கம் என்னவென்று தெரிவித்து விட வேண்டும். இந்த அமைப்பு நன்மை செய்யும் எண்ணம் உடையதாயிருந்தது. ஒரு காலத்தில் அது தேசத்திலேயே வலிமையிற் சிறந்த அமைப் பாய் விளங்கியது.

பணக்காரர்களின் செலவாக்கே மேலோங்கி நிற்கும் ஸ்தாபனமாயினும் தேசத்தின் அரசியலில் உள்ள குறைகள் அது ஒனறுதான் இடைவிடாது எடுத்துக்கூறி வந்திருக்கிறது. மகாத்மா காந்தியின் கீழ் ஓராண்டிற்கு அதன் சக்தி இணையற்றதாயி ருந்தது.

ஒத்துழையாமை இயக்கத்தின் போது அது மகோன்னத நிலை பெற்றிருந்தது. சுயராஜ்யம் என்பது என்னவென்று விவரியாமலேயே அது சுய ராஜ்யத்துக்குப் போராடியது. ஜனங்களின் பெய ரால் அது காரியம் செய்தது. அதிகார வர்க்கத்தை எதிர்த்து அகிம்சா யுத்தம் புரியும்படி மகாத்மா காந்தி கூவியழைத்த போது ஆயிரக்கணக்கான ஜனங்கள் தங்கள் உடல, பொருள் ஆவியை அர்ப்பணம செய்ய முன் வந்தனர். ஆனால் அவ்வியக்கம் வழி

துறையின்றி எல்லாப் பக்கங்களிலும் சென்று மோதியது. அதிகார வர்க்கத்தை ஒருமுகமாக எதிர்த்து நின்று அதைப் பலவீனப் படுத்த முயலாமல் அரசியல், சமூக, பொருள்நிலை, சமயம முதலிய எல்லாத் துறைகளிலும் முயன்று ஒன்றுக்கொன்று முரணான பல காரியங்களைச் செய்தது. காங்கிரஸ் சுயராஜ்யம் ஒன்றையே குறியாகக் கொண்டு இதற்கான போராட்டத்தில் தொழிலாளர் உதவியை நாடிப் பெற்றிருந்ததால் அது வெற்றியடைந்திருக்கும். அவ்வாறின்றி தர்ம சாஸ்திரம் முதல் எல்லா வகை விஷயங்களிலும் ஈடுபட்டபடியால், ஒத்துழையாமை இயக்கம் தன் சொந்த கனமே தாங்காமல் முறிந்து விழுந்தது. பர்தோலியில் இயக்கம் பின்னடையவே அவ்வியககத்தின் பெரும் தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். அதிகார வர்க்கம வெற்றியடைந்தது. தலைவர்கள் தாழ்ந்தனர். அதன் பின் ஏற்பட்ட குழப்பத்தில தலைவர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட ஆரம்பித்துப் பற்பலக் கட்சிகளாகப் பிரிந்தனா. பர்தோலிக்குப் பின் எஞ்சி நின்ற காங்கிரஸ்காரர்களில் பெரும்பாலோர் சுயராஜ்யக்கட்சி என்ற பெயருடன் ஒரு தனிக்கட்சியை அமைத்துக்கொண்டு சட்டசபைகளைக் கைப்பற்றி உள்ளிருந்து அதிகார வர்க்கத்துடன் போர்த் தொடுக்க ஆரம்பித்தனர். ஆனல் இங்கும் பணக்காரர்களின் மனப்பான்மையே மேலோங்க தேச பந்துவின தலைமையில் தீவிரமாகப் போராடிய இக்கட்சியார் இப்போது உத்தியோகங்களுக்காகப் போராட ஆரமபித்துவிட்டனர். காங்கிரஸ் கட்சியின் இந்நிலையிலிருந்து நமக்குத் தெளிவாக விளங்குவது

யாதெனில் பணக்கார வகுப்பினரால் மட்டுமே இந்நாட்டுக்குச் சுயராஜ்யம் வாங்கிக் கொடுத்து விட முடியாது என்பதே. தொழிலாளர்களின உதவி யின்றி இந்நாட்டுககுச் சுயராஜ்யம கிடைப்பதரிது. காங்கிரஸ் தலைவர்கள் பொதுவாக நாட்டின் தொழிலாளரின் முன்னேறறத்தில் உண்மையான கவலை காட்டவில்லை என்று குறிபபிடுவது போதுமானது. /கிராமத் தொழிலாளர்களையும் நகரத் தொழிலாளர்களையும ஒழுங்காக அமைதது அவர்களுககுக கலவி புகடடவும மற்ற வழிகளில் உதவி செய்யவும் போவதாகப் பல கட்சியினர் அவ்வப்போது சொல்கிறார்கள். ஆனால் இவர்களுடைய நலமும் தொழிலாளர்களின் நலமும முரண்படுவதால இவர்கள் பேச்சளவிலின்றிக் காரியததில ஒன்றும் செய்ய முடியாது. எனவே பாமர ஜனங்களை ஒழுங்கு படுததி சுயராஜ்யம் பெறுவதற்கு முயல்வது பொதுவுடைமைக் கட்சியின் கடமையாகும்./

## சுயராஜ்யக்கட்சி

அதிகார வர்ககம் வெற்றி மேல் வெற்றி கொண்டு முன்னேறுவதைத் தடுத்து நிறுத்திய பெருமை சுயராஜ்யக் கட்சியினருக்கே உரியது. இதன் பயனாய் உலகத்தின் முன்னிலையில் அதிகார வர்க்கம் சிறுமைப் பட்டுப் போயிற்று. ஆனால் அதிகார வர்ககத்தினர் மிகவும் தந்திர சாலிகள் பலசாலிகளும்கூட. அவர்களை அவ்வளவு எளிதில் முழுதும் தோற்கடித்துவிட முடியாது. வேறு உதவியின்றித் தாங்களும் பிரிந்து நின்ற இந்த அதிகார வர்க்கததின மீது வெற்றி கொளளலாம் என்று சுயராஜ்யக்கட்சியினர் நினைத்தால் அவர்கள்

ஏமாந்து போவார்கள். அதிகாரவர்க்க ஆட்சி இயந்திரத்தைச் சிறிதும் அசையாமற் செய்தாலன்றி அவ்வர்க்கத்தினர் நமக்குச் செவி கொடுக்க மாட்டார்கள். ஒழுங்குபட்ட தொழிலாளர் அமைப்பின் உதவியின்றி எந்தக் கட்சியும் இதைச் சாதிக்கவே முடியாது. மற்றக் கட்சியாரின் தோல்வியிலிருந்து பொதுவுடைமைக் கட்சி தெரிந்து கொள்ள வேண்டிய பாடம் யாதெனில் தொழிலாளரின் முன்னேற்றமும் தேச முன்னேற்றமும் தொழிலாளரை ஒழுங்குபெற அமைப்பதையே பொருத்திருக்கிறது என்பதாகும். சட்டசபைகளின் தொழிலாளருக்கு நேரான பிரதிநிதித்துவத்திற்காக நாம் கிளர்ச்சி செய்ய வேண்டுமா என்பதைப் பற்றியும் நீங்கள் யோசித்து முடிவு செய்ய வேண்டும். (15-1-26)

## தீண்டப்படாத மக்கள்

மற்ற அரசியல் கட்சி அமைப்புகளுடன் நமது சம்பந்தம் எத்தகையது என்பதைப் பற்றி இதுவரையில் ஆராய்ந்தோம். இனி காங்கிரஸ் சுயராஜ்யப் போராட்டத்தின் அம்சங்களாகக் கொண்டிருக்கும் இரண்டு திட்டங்களைக் கவனிப்போம். முதலில் தீண்டாமை விலக்கு விஷயமாகப் பொதுவுடைமைக் கட்சியின் நிலையைப்பற்றி என் அபிப்ராயத்தைப் பற்றி கூறுகிறேன். நமது கட்சிக் கொள்கையைப் பார்க்குங்கால் தீண்டாமை விஷயம் முற்றிலும் பொருளாதார நிலைமையைப் பொருத்ததொன்று. இவ்வகுப்பார் கோயில்களுக்குள்ளும், வீதிகளிலும் விடுபடுவதற்கும், சுயராஜ்ய முயற்சிக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. சுயராஜ்யம் வரும்போது சமூக விஷயத்திலும் மத

விஷயத்திலும் உள்ள ஏற்றத்தாழ்வுகள் தாமாக மறைந்து விடும். பொதுவுடைமைக் கட்சியாருக்கு ஜாதி, சமயக் கோட்பாடுகள் கிடையா. இந்துக்களும், முஸ்லீம்களும், கிறிஸ்துவர்களும் மேற்சொன்ன விஷயங்களில் அவரவர் சொந்த அப்பிராயங்களைக் கொண்டிருக்கலாம். தீண்டாமை என்பது கோடிக் கணக்கான இவ்வகுப்பாரின் வறுமைநிலையே ஆதார மாகக் கொண்டிருக்கிறது. கோயில் குளம் சாலை களில் இவர்கள் பிரவேசிக்கும் உரிமைப் பெற்று விட்டால் மட்டும சமூகத்தில் அவர்கள் உயர்ந்து விட முடியாது. பூஸ்திதி, மிராசு விஷயங்களில் ஏற்றத்தாழ்வு நீங்கும் வரையில் தீண்டாமை விலக்கு வெறும் பேச்சாக நிற்கும். நமது சகோதரர்களைத் தீணடப்படாதவராகப் பாவிப்பதைப் பற்றி ஆத்தி ரப்பட்டுப பேசுவதால் அவர்கள் பசிப்பிணி பற்றி வாய் திறப்பதில்லை. இந்தியாவில் சீர்திருத்தக் காரர்கள் பெரிதும் பணக்காரரின் மனப்பான்மை கொண்டவர்கள எனபதற்கு இது ஓா உதாரணம். சமூகததின் இழிவான நிலையிலிருந்து அவர்களைக் உயர்த்தவேணடுமானல் முதலில் அவர்கள் பொருள் நிலையில மற்றவர்களுககுச் சமமாகவேண்டும எனவே பொதுவுடைமைக் கட்சியார் இவ்வழியில் கவனம் செலுததி தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கு உயிர் வாழ்வதற்கு அவசியமான கூலியேனும் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

காங்கிரஸின் மற்ருெரு திட்டம் கதர் ஒத்துழை யாமை இயக்கம் ஓங்கிவளர்ந்த காலத்தில் கதரினல என்னென்ன நன்மைகள் உண்டாகுமென எதிர்

பாாக்கப் பட்டதோ அவைகள் ஏற்படவில்லை. இந்தியத் தொழிலாளிக்கு ராட்டையினுல் அதிக நனமை உணடாகும என்று சொல்ல முடியாது. ஆனுல சுயராஜ்யப போரில ஈடுபடட வீரர்களுக்கு ஒரு விசேஷ அணியாகக கதரைப பயன்படுத்திக் கொளளலாம். சர்க்காா சங்கத்தார் இதைச் செயது குழப்பத்தில் வெற்றிபெறுவார்கள் என நமபுகிறேன். பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்தவர்கள் எலலாச சமயங்களிலும கட்டாயமாகக கதரையே அணிந்து கொள்ள வேண்டுமெனபதை நீங்கள் முடிவு செய்யவேண்டும. இனி நமது கட்சியின கொள்கைகளைப் பறறியும் நாம் உடனே செய்ய வேண்டிய வேலைகளைப் பற்றியும சொலகிறேன.

## பொதுவுடமைக் கொள்கை என்பது யாது?

பொதுவுடைமைக் கொளகையைப் பறறிப் பல வகை தப்பபிப்ராயங்கள் பரவி இருககின றன. சிலர் பொதுவுடைமைக் கொள்கையும போலஷிவிசமும் ஒன்றுதான என று எண்ணுகிருர்கள. இதனுல குழப் பங்கள பல நேரிடுகின றன. அரசியல வாதிகளில ஒரு வகுப்பார் விஷயததை ஆராயந்து அறிந்து கொளள ஆற்றல அறறவர்களாய இருககிருாகள. மற்றும் சொத்துரிமைக்காரர்கள் இருளில் ஒவ்வொரு புதரையும பிசாசென எணணி மருளகின றனர். இத்தகைய பிழைபட்ட கருததுகளைப போககுவது நமது முதல் கடனுகும். பொதுவுடைமைக் கொள்கையாவது யாது? மனித வர்ககம் தறபோது உள்ளாயிருககும் எல்லாத தீஙகுகளையும ஒருங்கே போக்குவதான கொள்கைதான் அது. அது சொல்

வதாவது இவ்வுலகம் முழுதிலும் உள்ள மனிதர்கள் யாவரும தாராளமாய் உண்டு, உடுத்து, வீடுகளில் வாழ்வதற்கு வேண்டிய பொருள்களை உலகிலுள்ள தொழிலாளர்கள் உற்பததி செய்கின்றனர். இவர்களுடைய உழைப்பின் பயனுய் மனிதர் யாவரும் உயரிய வாழ்வு நடத்துவதற்கு அவசியமான பொருள்கள் நிரம்பக் கிடைககின்றன. ஆனல் பொருள் உற்பத்திக்கான சாதனங்கள் சில மனிதர்களின் ஏகபோக உரிமையாய் இப்போது இருக்கிறபடியால உணமையில் உற்பத்தி செய்வோர் பட்டினி கிடந்து துன்புறுகினறனர். எனவே பொருள் உறபத்தி செயவோர் ஒவ்வொருவரும் உற்பததியான பொருளில் நியாயமான பகுதியைப் பெற வேண்டுமாலை பொருள் உற்பத்துச் சாதனங்கள் உறபததி செயவோருககே சொந்தமாய் ஆக வேண்டும். பொதுவுடைமைக கொள்கை என்பது இதுதான.

### காரல் மார்க்ஸ்

இம்முறை அனுஷ்டானத்திற்கு வந்தால் இப்போது உலகில் சிலர் எலலாப் பொருள்களையும் பெற்றுச் சுகபோக வாழ்வு நடத்துவதும், பலர் ஏதும் பெருது பட்டினி கிடந்து தவிப்பதுமாய் இருக்கும் நிலைமை மாறி எலலோரும் சமமான நனமை அடையக கூடும. உலகில் சமூக நிலையிலும் அரசியலிலும உள்ள மிககேடான குறைகளை நீககுவதற்கு இஃது ஒன்றே சாலச்சிறந்த வழி. மனிதர்களின வாழக்கையை மேமபடுத்தச் செய்வதற்கான இதுகாறும அனுஷ்டிககப்பட்ட மற்றமுறைகள் எலலாம வீணுயின. பணககாரன ஒருவன தானே

மனம் மாறவோ, வேறு கட்டுப்பாடுகளுக்கு இணங்க வோ தனனுடைய பொருள்களை மறறவர்களுடன் பங்கிட்டுக கொண்டு அனுபவித்தல ஒருகாலும் நடவாத காரியம். ஆனல் பணககாரனும் ஏழையும் சேர்நது தங்களது உழைப்பை ஒன்றுபடுததித் தங்கள் கூட்டுழைபபினுல் கிடைக்கும லாபததைச சம மாகப் பங்கிட்டுக கொள்ளும்படி செய்தல் இயலும். மனித வர்ககததின பொதுநலததிற்காக இதைச் செய்து முடிததலே பொதுவுடைமைக் கொளகை யின் இலட்சியம். இதை இநதியாவில் எல்லா வகுப்பாருக்குப் பயன்படும்வணணம் நடத்தி வைப்பது பொதுஉடைமைக கட்சியாரின் வேலையாகும. பொதுவுடைமைக் கொள்கை புதியதன்று. |சரித்திர ஆரம்பத்திலிருநதே இககொள்கை இருநது வருகிறது. புததரால இக கொளகை போதிககபபட்டு அவர் சீடர்களால் அனுஷடிககப்பபட்டது. ஏசுநாதரும் இக்கொளகை உடையவரே. பிளாடோ, மூர், மாரிஸ் முதலயோர் மானிடரின உயா வாழவுக்காகப் போடட திட்டங் களிலெல்லாம் பொதுவுடைமைக் குறிப்பு அடங்கி யுள்ளது. ஆனல இசகொளகையை அனுஷ்டா னததல கொணடு வரும் வண்ணம ஒரு திடடமாக வகுதத பெருமை கார்ல மார்கஸ் எனபவருககே உரியது.|

காரல் மார்ச்ஸ் என்ன திட்டத்தைப் போதித்தார் என்பதை இநதியாவிலுளள பொதுவுடைமைககட்சி யைச சாாநத ஒவ்வொருவரும அறிநதுகொளவது அத்தியாவசியமாகும. பொதுவாகச சொன்னல் இவ்

வுலகிலுள்ள மனிதர்களைச் சொத்துக்காரர்கள், சொத்திலலாதவர்கள் என்ற இருவகுப்பினாகளாகப் பிரிக்கலாம். இவ்விரு வகுபபாரிடையே எப்போதும் போராட்டம் இருந்து வருகிறது. சொத்துக்காரர் களிடம் மூலதனம் முழுதும அகப்பட்டுக்கொண் டிருக்கிறது. சொத்து இல்லாதவர்களிடம் உழைப்பு இருக்கிறது. முதலாளி இன்னென்ன நிபந்தனை களின் மீதுதான மற்றவர்கள் உழைப்பைப் பெற்றுக் கொள்வேன் என்று சொல்கிறுன். அவன் சொலகிற நிபந்தனைக்கு இணங்கித் தொழிலாளர் தங்கள் உழைப்பை விற்கவேண்டியவர்களாய் இருக் கிறாகள். விவசாயத தொழிலாளரும் சரி, வேறு தொழிலாளரும் சரி பசிப்பிணியினுல் பீடிக்கப பட்டிருப்பதால முதலாளி சொல்வதைக் கேட் கிறுர்கள். பொருள உற்பத்தி அதிகமாகிறது. உற் பததியான பொருளைச் செலவழிகக புதிய புதிய மாாககெட்டுகள் ஏற்படுகின்றன. இவ்வாருக முத லாளி உலக முழுதுமுளள பொருள் உற்பத்திச் சாதனஙகளைத் தனவயப் படுத்திககொள்கிறுன். தொழிலாளிகள் சிறிது சிறிதாகப் பொருள் உற்பத் திச் சாதனங்களல எலலா உரிமையையும் இழந்து கூலிசகு வேலை செய்யும அடிமைகளாகினறனர். தொழிலாளிககுச் சொத்து சுதந்திரமிலலை. வீடு வாசல் இல்லை. குடும்ப வாழ்ககையின் கட்டு தளர் கிறது. தானும தன குடும்பமும் பிழைப்பது முதலாளியின தயவைப் பொருததுதாகிறது.

ஆதிகாலம் தொட்டு உலக நாகரிகம் இவ்வாறு தான் இருந்திருக்கிறது. ஆனல் இயந்திரத தொழில

வலுத்த பின்னர் தொழிலாளியின் நிலைமை இன்னும் கேடாகிவிட்டது. இப்பொழுது தொழிலாளி தன் திக்கற்ற நிலைமையை உணர்ந்து தற்காப்பு சங்கங்களை நாட்ட ஆரம்பிக்கிறர்கள். நாளுக்கு நாள் வலுவடையும் முதலாளியின் கொடுமையை எதிர்த்துத் தனது உரிமைகளுக்காகப் போராடத் தொழிலாளிக்கு இச் சங்கத்தை யன்றி வேறு சாதனம் கிடையாது. இவ்வாருக முதலாளிகள் ஒரு புறத்திலும் தொழிலாளிகள் மற்ருெரு புறத்திலும் சேர்ந்து போராட்டத்திற்குச் சித்தமாயுள்ளனர். உலகிலுள்ள பொருள் உற்பத்திச் சாதனங்களைக் கைப்பற்றிக் கொள்ளும் பொருட்டு இப்போராட்டம் நடைபெறுகிறது. இப்போராட்டத்தை ஒழிப்பதற்கு ஒரு வழிதான் உண்டு. உலகில் உயிர் வாழ்வதற்கு அவசியமான பொருள் தனிப்பட்டவர்களின் சொந்த சொத்தாக இல்லாமல் செய்து எல்லோருக்கும் சமமாகப் பயன்படுமாறு செய்ய வேண்டும். காரல் மார்க்ஸ் எடுத்துக் கூறிய பொதுவுடைமைக் கட்சியின் தத்துவம் இதுவேயாகும்.

**பொதுவுடைமை என்பது உலகக் கூட்டுறவு**

மேல் சொன்னதிலிருந்து உலகத்தில் உள்ள தீமைகள் பலவற்றிற்கும் காரணமாயுள்ள சாபக்கேடு சொத்துரிமையின் ஏற்றத்தாழ்வே என்பது விளங்குகிறது, தனிப்பட்டவர்கள் விஷயத்தில் மட்டுமன்றி நாடுகள் விஷயத்திலும் செல்வநிலையில் ஏற்றத்தாழ்வு இருப்பது காரணமாகவே யுத்தங்கள் படையெடுப்பு, மெலிந்த தேசத்தாரை வலிய நாட்டார் ஆக்கிரமித்தல் அதன் பயனுய் கொள்ளை, இரத்த வெள்ளம் முதலியவை நிகழ்கின்றன. மனிதர்களி

டையேயும் தேசங்களிடையேயும் போட்டியினுல் மனிதவர்ககம் முனனேறும் என்னும் கொள்கை புரட்டானது. ஒரு மனிதனை மறருெருரு மனிதனும் ஒரு தேசத்தை மற்றொரு தேசமும அடககியாள வதற்கே இந்தப் போட்டிக கொள்கையினுல் மனித வர்ககம் இதுகாறும முன்னேறவில்லை. இதறகு நேர்மாறுன தத்துவமாகிய கூட்டுறவு முறையினுல் தான் மானிடர் இவ்வளவேனும் உயரிய வாழ்க்கை எயதியிருக்கின்றனர். ருஷ்ய மகான்களில ஒருவரான கிருபாட்கின் கூட்டுறவினுலும் பரஸ்பர நலலெண்ணத்தாலுமே மானிட ஜாதி இனனும் அழிந்து மண்ணுகமல் இருந்து வருகிறதென அழகாகக் கூறியுள்ளார்.

தற்போது துரதிஷ்டவசமாக அரசியலிலும் சமூகத்திலும் பொருளமுயற்சியிலும எத்துறையைப பார்க்கினும் போட்டியே பலதது நிற்கிறது. வியாபாரத்தில, கைத்தொழிலில் இராஜ்யத்தில் எங்கும் போட்டிக் கொள்கையையே அரசு செலுத்துகிறது. இராஜ்யங்களின் அந்நிய நாட்டுக கொளகை இதை ஒட்டியே ஏற்பட்டிருக்கிறது. பொருள் உற்பத்தி வினியோகத்திலும் போட்டிக் கொள்கைதான். லாபமே இப்போட்டிப் பிசாசின் முக்கிய நோக்கம். உபயோகததைப் பற்றி அதற்குக் கவலையிலலை. இந்தப் பிசாசின் கையிலிருநது தப்பித்துக் கொளள ஒரு வழிதான் உண்டு. அவ்வழி அதை அழித்து விடுவதேயாகும். போட்டிப் பிசாசு வீற்றிருநத இடத்தில் கூட்டுறவுத் தெய்வம் வீற்றிருககச் செய்யவேண்டும். இது பொதுவுடைமைக் கொளகை

யால்தான் முடியும. பொதுவுடைமைக் கொள்கை யாவது உலகக் கூட்டுறவேயன்றி வேறில்லை. இந்தியாவில இத்தகைய கொள்கையை நாம பிரச்சாரம் செய்யத தலைப்பட்டுள்ளோம்.

## போல்ஷ்விசம்

இந்தியப் பொதவுடமைக் கொள்கை போல்ஷ்விசக் கொள்கை அன்று. போல்ஷ்விசம் என்பது ருஷ்யர்கள் கைக்கொண்டுளள பொது உடைமைக் கொள்கையில் ஒரு முறையேயாகும். நாம் ருஷ்ய போல்ஷ்விக்கர்கள் அலல. போல்ஷ்விசம் இந்தியாவுக்கு அவசியமே இல்லாமல் போகலாம். போல்ஷ்விசம் என்னும் மொழிகுப் பெரும்பான்மைத்துவம் என்பதே பொருள். தற்போது ருஷ்யாவில் பெரும்பான்மையோராயுள்ள அரசியல் கட்சியினர் போல்ஷ்விக்குகள். ருஷ்யாவில் தற போது அரசாங்கம் இவர்கள் கையில இருக்கிறது. இவர்கள் தங்களுக்கென்று தனியாக ஆட்சிமுறை நிர்வாக முறை, பிரசார முறை இவைகளை வகுத்துக் கொண்டுள்ளனர். இவர்களுக்கு எதிர் கட்சியினர் மென்ஷ்விக்குகள் (சிறுபான்மையோர்) இவர்கள் இப்போது அதிகாரத்திலில்லை. உலகெங்கிலுமுள்ள பொதவுடைமைக் கட்சியாருடன் நாம் ஒன்று பட்டுள்ளோம். ஆனல் ருஷ்ப போல்ஷ்விக்கருடன் நமக்குச சிறப்பான சமபநதம் ஏதுமில்லை. நமது நிலையைச் சரியாகச் சொல்லி விட்டேன. நமது கட்சியின் இலடசியங்களையும் முறைகளையும் பற்றிய தப்பு அபிப்பிராயங்கள் இனி நீஙகிவிடுமென நமபுகிறேன்.

## முடிவான இலட்சியமும் தற்போதய நோக்கங்களும்

மூலதனத்தின் ஆதிக்கத்தை ஒழிப்பதும், யுத்தங்கள் நடைபெருமல் செய்வதும், இராஜயங்களின் எல்லைகளை நீக்கி எல்லா இராஜ்யங்களையும் ஒன்று சேர்த்து ஒரு ஜனநாயக் கூட்டுறவாக்குவதும், உண்மைச் சுதந்திரத்தையும் சகோதர பாவத்தையும் நிலைநாட்டுவதும் நமது முடிவான லட்சியமாகும். இதுதான் பொதுவுடைமையினர் காணும் கனவு.

நமது தற்போதைய நோக்கம் இந்தியாவின் பாமர ஜனங்களுக்குச் சுயராஜ்யம் பெறுவதும், தொழிலாளர்களும் குடியானவர்களும், ஒடுக்கப்படுவதைத் தடுக்கத் தகுந்த, சட்டங்களை இயற்றுவதும் தொழிலாளிக்கு அவனும் அவனுடைய குழந்தைகளும் உயிர் வாழ்வதற்குப் போதுமான கூலி கிடைக்கச் செய்வதும், அரசியலிலும் பொருள்முயற்சியிலும் சாதி சமயங்களை ஆதாரமாகக் கொண்ட எல்லா வேற்றுமைகளை ஒழிப்பதுமாகும்.

### நமது முறை

இந்த நோக்கங்களைத் தொழிலாளர் குடியானவா சங்கங்களை அமைத்தும். / பிரச்சாரத்திஞலும், அவசியமான போது மற்ற கட்சிகளுடன் ஒத்துழைததும் நிறைவேற்றலாமென நாம் நம்பியிருககிறோம். | தொழிலாளரின் உரிமைகளை நிலைநாட்ட நாம எல்லாக் கட்சியாரின் ஒத்துழைப்பையும் நாடுகிறோம்.\ இந்தியர்களுக்கு இவவுரிமைகளைச் சம்பாதித்து கொடுககும் முயற்சியில வெற்றிபெறுவோமென்று நாம் உறுதியாக நம்புவதால எல்லா

அறிஞர்களையும் தொண்டர்களையும் நமது கட்சியில் சேரும்படி கூவி அழைக்கின்றோம்.

## தொழிலாளருக்கு வேண்டுகோள்

இந்தியத் தொழிலாளரை நாம் வேண்டிக் கொள்வதாவது: உங்கள் சங்கங்களைப் பலப்படுத்திக் கொள்ளுங்கள், சங்க பலத்தைத் தவிர உங்களுக்கு வேறு ஆதாரமில்லை. அற்ப விஷயங்களுக்கெல்லாம் வேலை நிறுத்தம் செய்து உங்கள் சகதியை வீணடிக்க வேண்டாம்.

# 2

# பொதுவுடைமை விளக்கம்

## 1. அறிமுகம்

பொதுவுடைமையை, "கம்யூனிஸம்" (Communism) என்று, ஆங்கில பாஷையில் வழங்குவார்கள். இதனைப் பொதுப்பொருள் உடைமையென்றும் வழங்குவதும் பொருந்தும். பொதுவுடைமை என்பது உலகிலுள்ள பொருள்களைக் கையாளும் ஒருவகை. உலகப் பொருள்களைப் பல வகையில கையாண்டு வருகின்றோம். சிலவற்றைப் பொதுவாகக் கைக்கொள்கின்றோம். கடல், ஏரி, மண், காடு முதலிய உலகப் பொருள்களைப் பொது உபயோகமானவை என்று நினைத்து வருகிறோம். நகரங்களில், வழி, ரோடு, வாராவதி முதலிய ஸ்தாபனங்கள் சகலருக்கும் பொது உபயோகத்திற்கு ஏற்பட்டுள்ளனவெனக் கருதப்படுகின்றன. மற்றப் பொருள்கள் யாவும் தனி உபயோகத்திற்கே ஆண்டுவரப்படுகினறன. நிலம், சுரங்கம், ரெயில்வே, கப்பல் தொழிற்சாலை, முதலிய ஸ்தாபனங்களைச் சிற்சிலரே ஆண்டு அனுபவித்து வருகின்றனர். உலகப் பொருள்களைக்

கையாண்டுவரும் விதங்களில், பொதுவுடைமை என்பது ஒன்று.

பொருள்களை உபயோகிக்கும் வகைகளில், பொதுவுடைமை, புராதன வழி என்று சொல்லலாம் மனித சரித்திரம் ஏற்படுவதற்கு முந்தியே உலகப் பொருள்களை மக்கள் பொதுவாகவே உபயோகித்து வந்திருக்க வேண்டும். எப்படியெனில், மனிதனுக்கு நெருங்கிய பாத்தியதையுள்ள மிருக ராசிகள, அதனதன் ராசிக்குள்ளே, தனித்து வாழுவதைக் காணேம். தற்போதுள்ள காட்டுமிராண்டிகள் ஒன்று சேர்ந்து வேட்டையாடுவதும், அதன் பயனைச் சகலரும் கலந்தே அனுபவிப்பதும் காட்சியாகக் காணலாம்.

பட்சிகளிடையே, பொதுவுடைமை வழங்கி வருவதைச் சாதாரணமாகப் பார்க்கலாம். காக்கை, பல காகைகளுடன் கலந்துண்ணுவது வழக்கம். கூடிவாழும் இயல்புள்ள பிராணிகள் யாவும், தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களைப் பொதுவாகவே அனுபவிக்கின்றன. மனிதனும் ஒரு காலத்தில் பொதுவுடைமையாகவே சகலத்தையும் பாவித்து வந்ததாகத் தெரிகிறது. ருஷ்ய தேசத்தில் 19 ஆம் நூற்றுண்டுவரை, சில நிலங்களைப் பொது வாகவே பயிரிட்டு, அதன் பயனாக வரும் மகசூலைச் சமபாகமாகப் பங்கிட்டுக் கொண்டு பல கோடி சிருஷ்டிகளும் வாழ்ந்து வந்ததாகத் தெரிகின்றன. பாஞ்சாலத்தை ஆங்கிலேயர்கள் பிடிக்குங்காலை, அவ்வூர் குடிகள நிலங்களைப் பொதுவாகவே சாகுபடி

செய்து வந்ததாகத் தெரிகிறது. ஜெர்மனியிலும் நிலங்களைப் பொதுவுடைமையாகப் பாவித்து வந்த காலம் பல காலமெனலாம். மற்ற தேசங்களில் ஒரு காலத்தில் அந்தந்தத் தேசப் பொருள்களை முக்கியமாக, நிலங்களைப் பொதுவுடைமையாகப் பாவித்து வந்த அடையாளங்களை இன்னும உலகில் பல இடங்களில் காணலாம். இந்திய தேசத்திலும், குளக்கரை, ஆற்றங்கரை ஆகியவை பொது வுடைமைகளாகப் பாவிக்கப்படுவதைக காணலாம். ஒரு காலததில் தீயும், நீர் முதலிய பொருள்கள் பலவும் பொதுவுடைமையாகப் பாவிக்கப்பட்டிருந்த தாகத தெரிகின்றது.

நமது காலத்திலும், பல பொருள்கள் பொது வுடைமையாகப் பாவிக்கப்படுதலும் சாதாரண காட்சியாகும். காடுகளை அரசாங்கத்தார், பொது வாக வைத்திருக்கின்றார்கள். அரசாங்கத்திற்கு வேண்டிய கட்டடங்களும் பொதுச்சொத்துக்களே. பொதுப்பள்ளிக் கூடங்களுடையனவும், கலாசாலை களுடையனவுமாகிய கட்டடங்கள் பொதுவே. நகர முனிசிபாலிடிகளும், தாலுக்கா போர்டுகளும் பல சொத்துகளைப் பொதுவாகக் கொண்டிருக்கின்றன. மேற்கூறிய எல்லைக்குள், நகர ரயில்கள், டிராம்கள், புத்தகசாலைகள் என்ற வகைகள், காட்சிச் சாலைகள் முதலிய ஸ்தாபனங்கள் பலவும் பொதுவாகவே கருதப்பட்டு வருகின்றன. இத்தியாதி பொருள்களை நடைமுறையில் பொதுவுடைமையாகக் கருதும் காட்சியைச் சாதாரணமாக உலகமெங்கும் தற் காலத்தில் பார்க்கலாம். வருஷா வருஷம் சிற்சில

ஊர்களில் பல காலமாகத் தனிவுடைமையாக இருந்து வந்த பொருள்கள், பொதுவுடைமையாக மாறுவதை நமது கண்ணுக்கு முன்பே காணலாம். தந்தி, தபால்கள் ஒரு காலத்தில் தனித்தனி ஆட்சிக் குட்பட்டு இருந்து வந்தன. சரித்திரக் காட்சி தற்போது இவ்விரண்டு ஸ்தாபனங்களும் பொதுவாக அமைந்திருக்கின்றன. இதன் லாப நஷ்டங்களும் பொது. லாப நஷ்டங்களாகவே எண்ணப் படுகின்றன. ஒரு காலத்தில் வாராவதிகளைத் தனிப் பொருளாக மதித்து அதன் மேல் நடப்பவர்களிடம் ஒருவித வரி வாங்கிவந்தார்கள். தற்போது தனி உபயோகத்துக்குட்பட்ட வாராவதியைக் காணுவது அபூர்வம். பண்டைக் காலத்தில், செனல் (கால்வாய்) களைத் தனிவுடைமையாகவே பங்கிட்டு வந்தார்கள். தற்போது உலகில் பொதுவுடைமைக்குட்படுத்தாத கெனல்களில்லை. இவ்விதமாக ஒரு காலத்தில் தனிவுடைமையாகப் பாவிக்கப்பட்டு வந்த பல பொருள்கள் பொதுவுடைமையாக உபயோகப்பட்டு வருகின்றன. ஆனால், இன்னும் பல பெருத்த ஸ்தாபனங்கள் தனிவுடைமையாகவே இருந்து வருகின்றன. நிலம், நீர், வீடு, மனை, ரயில், சுரங்கம், தொழிற்சாலை, பாங்கி முதலிய பலமான ஸ்தாபனங்கள் தனிவுடைமையாகவே இருந்து வருகின்றமையால், அவைகளும் பொதுவுடைமையாக வேண்டுமென்று முயற்சி செய்து வருவோரைப் பொதுவுடைமைக் கட்சியோரென்றும், போல்ஷ் விக்குகள் என்றும் பெயரிட்டு அழைக்கின்றார்கள். இந்தப் பொதுவுடைமை உலகிற்கு நன்மையைத்

தருமா, இல்லையா என்பதை விசாரித்தறிய வேண்டியது புருஷரின் கடமைகளில் சிறந்த மாகும்.

ஆதலால் இதனைக் கவனிப்பது சிறந்த புருஷார்த்தமாகும் முதலில் இந்தக் கட்சியாரின் பூர்வ சரித்திரத்தைக் கவனித்தறிவோம்.

## 2. காரல் மார்க்ஸ்

பொதுவுடைமைச் சித்தாந்தத்திற்கு ஆதி குரு ஜெர்மன் தேசத்துப் பெரியோனாகிய காரல் மார்கஸ் என்று சொல்லுவார்கள். இவரைப் பொது வுடைமையை, மெஞ்ஞானத்திற்குப் பொருந்த சித்தாந்தப்படுத்திக் காட்டியவரென்றும் சொல்வ துண்டு. இவருக்கு முன், சில பொருளாதார ஞானிகள் பொதுவுடைமை விஷயமாக வெவ்வேறு அபிப்பிராயங்களை வெளியிட்டிருந்தனர். பொருளா தார ஞானத்தை மெஞ்ஞான வழிக்குட்படுத்தி சிறந்ததொரு செய்யுளை வெளிப்படுததியுள்ளார் என்று சொல்லப்படுகின்றது. இவருடைய செய்யுளைத தொழிலாளர் வேதமென்றும கூறுவர். இவர் செய்துள்ள அரிய நூலைச சுருக்கமாக இங்கு வரைவதற்கு முந்தி, இவரது சரித்திரத்தைச் சுருககமாக இவ்விடம் எடுததுரைபபோம்.

"பொதுவுடைமைச் சித்தாந்த சரித்திரத்தில், காரல் மார்கஸ் விசேஷ பிரக்கியாதி பெற்றவர்.

கோடான கோடித் தொழிலாளர் உள்ளத்தில் ஒரு சிறந்த பெரியோராக நன்கு மதிக்கத் தகுந்தவர். இவரும் இவருக்கு ஆபத்துணைவராயிருந்த எங்கல்ஸும் பொதுவுடைமைக் கட்சிக்கு ஒப்பறற தலைவர்களெனலாம். நாகரிகம் படைத்த உலகமெங்கும் இவர்களுடைய சீடர்கள் இல்லாமலில்லை. உலகமெங்கும இவ்விருவருடைய சிததாந்தம் பரவியுள்ளது. இந்தச் சித்தாந்தம மிக்க வலிமையுடையது. இதனை வெல்லுவது எளிதன்று. உலகமனைத்தும் சிந்திக்கத் தக்கது" இவ்விதமாக ஒரு பொதுவுடைமைச் சரித்திரவாதி சொல்லுகின்றார். காரல் மார்ச்ஸ், யூதர்கள வம்சத்தில் பிறந்தார். இவர் பிறந்த வருஷம் 1818. இவருடைய தாய் தந்தையர் இருவரும் கல்வி கேள்வியில் மிகுந்த ஞானம் பெற்றவர்கள். செல்வத்தில் வளர்ந்தவராதலால் அந்தக் காலத்து ஜெர்மனியில் எவ்வளவு கல்வி கேள்வி நிரமபப் பெற முடியுமோ அவ்வளவையும் சிறுவயதிலேயே பெற்றிருந்தார். தந்தையின் கருத்திற்கிணங்க, நீதி, சட்டங்களைப் படித்து வந்தார். ஆனால் இவருடைய இயற்கைப்படி சரித்திரத்திலும், தத்துவ ஆராய்ச்சியிலும தமது மனம் நாட்டங் கொண்டமையால், அதில் மிகவும் ஊககங் கொண்டார். 1841இல் கலாசாலையில் கல்வி முடிந்த பிறகு தத்துவ வித்துவானாக எண்ணிக் கொண்டிருந்த போதிலும, தமது தாய்நாட்டின் நிலைமை அதற்கு இடம கொடாமையால், அவ்வழியில செல்லச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அநதக் காலத்தில், தமது நோக்கப்படி புரட்சி சம்பந்தமான இபக்கததில் சேர முடியாமல் இருந்தபோதிலும், ராஜாங்க எதிர்கட்சித் தரபபில்

சேர்ந்து வேலை செய்ய "ரினிஷ்செஸ்ட்" என்ற பத்திரிகையில் சேர்ந்து, அதற்குப் பத்திராதிராக இருந்தார். அந்தப் பத்திரிகை சம்பந்தமாக அவர் எழுதி வருகையில், ஜெர்மன் அரசாங்க பிற்போக்கு நிலைமையைப், பலயாகக் கண்டித்து வந்த நிமித்தமாக அந்த அரசாங்கத்தார் அந்தப் பததிரிக்கையை அடக்குமுறைக்கு உள்ளாக்கினதால், அதனை விட்டுவிட நேரிட்டது.

காரல்மார்க்ஸ், 1840ஆம் வருஷம் செல்வாக்குள்ள குடும்பத்தில் ஜென்னி என்ற மாதை மணம் புரிந்தார். இருவரும், நீண்ட வாழ்நாள் முழுதும் இன்பத்திலும், துன்பத்திலும் மனம் வொத்துழைத்து வந்தார்சள். மார்ச்ஸினுடைய புரட்சிப் போக்கில் காலமெல்லாம் அவர் தம் மனைவி கூட இருந்து அவருச்கு நேர்ந்த வறுமையிலும், கஷ்டங்களிலும் மனோதைரியத் துடனும், விடாமுயற்சியுடனும் இடைவிடாது இல்லறத்தை நடத்தி வந்தனர்.

பிரான்சு தேசத்து முக்கிய பட்டணமாகிய பாரிஸ் நகரில் வசிககின்ற போத', ஆங்கு தமது குருவாகிய எகல் (Hegel) என்ற பிரச்கியாதி பெற்ற தத்துவ ஞானியின் சித்தாந்தங்களைக் கண்டிக்கத் துவங்கினர். ஒரு ஜெர்மன் பத்திரிகையில் பல வியாசங்கள் எழுதினர். இவ்வித முயற்சியில் ஆழ்ந்த கருத்துக் கொண்டு பத்திரிக்கைகளுக்கு எழுதி வருகையிலும், ஜெர்மன் அரசியலைக் கண்டித்தும் வந்தார். கண்டனத்தைத் தங்கள் நன்மைக்கெனக் கருதாது, அரசாங்கத்தார் வெகுண்டு, மார்கசை பிற தேசத்திற்கு விரட்டி விட்டார்கள். தமது தந்தையா

நாட்டைவிட்டு, பெல்ஜிய தேசப் பிரதான நகராகிய பிரஸல்லில் சென்று அங்குத் தமது குடும்பத்துடன் வசித்து வந்தார். அவ்விடத்தில 1846ஆம் வருஷத்தில் "சுதந்தர வர்த்தகத்தைப் பற்றியும்" "தத்துவ ஞானததின் பெருமைகள் பற்றியும்" என்று இரண்டு நூல்களை இயற்றினார்.

நூல் இயற்றுதல் மாத்திரம் போதாது, அரசியல் விவகாரத்திலும் புகத் தலைப்பட்டார். பிரஸல்ஸ் பட்டணத்தில தொழிலாளர்கள் கவுன்ஸிலை ஸ்தாபித்தார். பிறகு, பொதுவுடைமைச் சங்கத்திலும் அங்கத்தினராகி, அதிலும ஊக்கத்துடன் உழைதது வந்தார். இநதச் சங்கம் முதலில் ரகசியமாக சதியாலோசனையை அனுசரிதது வந்ததாகத் தெரிகிறது. எங்கெங்கு ஜெர்மனியில் தொழிலாளர்கள் சங்கங்கள் உண்டாயினவோ, அங்கெலலாம் பொதுவுடைமைச் சித்தாந்தம் பரவ ஆரம்பித்தது. இந்தப் பொதுவுடைமைச் சங்கத்தில், இங்கிலாந்து, பெல்ஜியம், பிரான்ஸ், ஸ்விட்ஸாலாந்து முதலிய பிரதேசங்களிலுள்ள தொழிலாளர் சங்கங்கள் கலந்து வேலை செயதுவந்தன. இந்தப் பொதுவுடைமைக் கூட்டம, ஜெர்மன தேசத்துத் தொழிலாளர் இயக்கத்திற்குப் பெருதத ஆதராவாக இருந்து வந்தது. ஆதிமுதலில, இநதப பொதுவுடைமைக கூட்டாதான், அகில தொழிலாளர் சபபந்ததை வற்புறுத்தியது. இது தான் இங்கிலீஷ்காரரையும, பெலஜிய தேசத்தவர், அங்கேரியர், போலந்துககாரர் முதலிய தொழிலாளரை அகிலத் தொழில சங்க அமைபபில சிரததை எடுககச் செயதது. முதலில, இந்தச் சங்கமொன்று

தான் அகிலத் தொழிலாளர் சங்கமொன்றை லண்டன் பட்டணத்தில் முதல் முதல் கூடச்செய்தது.

இந்தப் பொதுவுடைமைக் கூட்டத்தின் ஆதரவில் கூடிய இரண்டு காங்கிரஸில், இந்தக் கூட்டத்தின் சித்தாந்தங்களை ஒழுங்குபடுத்தப்பட்டு, பிரக்கியாதி பெற்ற "பொதுவுடைமை விளம்பர"த்தைத் (Communist Manifesto) தயாரிக்கப்பட்டது. இதுதான் நாளைக்கும் சிறப்புற்றோங்கும் தொழிலாளர் வேதமென்று வழங்கும் "பொதுவுடைமை விளம்பரம்." இந்தச் சிறந்த நூல் வாயிலாகத்தான், மார்க்சும், அவர் தோழராகிய எங்கல்சும் கலந்து விடுத்த விளம்பரம். இந்த விளம்பரம், உலகிலுள்ள பல பாஷைகளிலும், மொழி பெயர்த்துள்ளது. அகில தொழிலாளர்களுக்குரிய சுதந்தரத்தை செவ்வனே தெரிவிக்கும் நூல் இதுவே.

பெல்ஜியத்தின் பிரதான நகரில் ஒரு பத்திரிகையில் வெளிவந்த சில விவரங்களில் ஜெர்மனி அரசியல் நடவடிக்கைகள், முக்கியமாகப் போலீஸார் அட்டூழியங்களைக் கண்டிக்கப்பட்டன. முக்கியமாக மார்க்சுதான் இந்த வாசகங்களுக்கு அதிகாரி. இதை உணர்ந்த ஜெர்மன் கெவர்ன்மெண்டார், பெல்ஜியம் அரசாங்கத்தார், மார்க்சை அந்த ஊரை விட்டு துரத்தும்படி தூண்டுகோலிட்டனர். ஆனால், அந்த ஊரிலேயே, புரட்சி ஒன்று தோன்ற நெருங்கியபடியால, பெல்ஜிபக கவர்னமெண்டாரே,

---

Communist Manifesto - பொதுவுடைமை விளம்பரம். (கம்யூனிஸ்ட் அறிக்கை)

மார்க்ஸை ஊரை விட்டுத் துரத்தி விட்டார்கள். அந்தச் சமயத்தில், பாரிஸ் பட்டணத்தில் எழுந்த தொழிலாளர் கழுப்பத்தால், இவருக்குப் பாரிஸுக்குப் போக இடங்கொடுத்தது. அந்தவூர் புரட்சிக்காரர், மார்க்ஸைத் தங்களிடம் வரவழைத்துக் கொண்டார்கள்.

பாரிஸ் பட்டணத்தில், அந்தக் காலத்தில் ஜெர்மன்காரர்கள் தங்கள் ஊரைக் குடியரசாக்க வேண்டுமென்று சதியாலோசனை செய்துவந்தார்கள். அந்தச் சமயத்தில் அவர்கள் செய்துவந்த சதியாலோசனையின் பிரயோசனமின்மையும், பிரெஞ்சு நாட்டின் ஊரிலிருந்து ஜெர்மனியில் புரட்சி உண்டாக்குவது பயித்தியகாரத்தனம் போன்றது. புரட்சி செய்ய வேண்டுமானால், ஜெர்மெனியிலேயே செய்யவேண்டுமென்றும், அப்படிச் செய்யாமல் பிரான்சு நாட்டிலிருந்து ஜெர்மனியில் புரட்சி செய்யும் பட்சத்தில், அந்தச் சமயத்தில் உண்டாகும் அவசர அரசு தங்களை அழித்து விடுமென்றும் குறிப்பிட்டு வந்தார்.

மார்ச்சு மாதம புரட்சிக்குப் பிறகு, ஜெர்மன் நாட்டின் முக்கியப் பட்டணங்களில் ஒன்றாகிய கொலோனுக்குச் சென்றார். அவ்விடத்தில புதிய பத்திரிகை ஒன்றை ஸ்தாபித்தார். இதன் பெயர் "புதிய ரையின் பத்திரிக்கை." இது 1848ஆம் வருஷம் ஜூன் மாதம் முதல் தேதி வெளிவந்தது. அந்தக் காலத்தில தொழிலாளர்களைக் குறித்து ஜனநாயக சம்பந்தமாகப்பேசவல்ல பத்திரிகை இதுவொன்றே இந்தப் பத்திரிக்கையின் தகிர்யமே தகிர்யம்! இந்தப்

பத்திரிக்கை முக்கியமாக 1848ஆம் வருஷம் பாரிஸில் நடநத புரட்சியை ஆதரித்துப பேசியது. இதன் கொள்கைகளைப் பத்திரிகைகைச் சொந்தக்காரர்கள் கண்டித்துவந்தும், அரசன்முதல் சேவகன்வரையிலுள்ள அரசியல் உத்தியோகஸ்தர்களைக் கண்டித்துக்கொண்டே இருந்தது. அந்த நகரமோ, 8,000 போர் வீரர்களால் காபந்து செய்யப்பட்டது. அருகிலுள்ள மிதவாதக் கடசியினர் வீணே இதனை ஆட்சேபித்தனர். கலோனிலுள்ள அதிகாரிகளும், வீணே இநத ஆரண்ய காபநதினில் வைத்தார்கள். அநேக நாளாக இந்தப பத்திரிகையை நிறுத்தியும் வைத்தார்கள். அடுத்த நகர அதிகாரிகள் கவர்ன்மெணடு நியாய அதிகாரிகளைக்கொண்டு இந்தப் பத்திரிகைகளின் பேரில் வழககை நடத்தவும் கட்டளையிட்டார்கள். இப்படி எலலாம் இருந்தும், இந்தப் பத்திரிகை விடாது வெளிவந்து கொண்டே இருந்தது. கவர்னமெணடாரையும், முதலாளிகளையும், கண்டிககக் கண்டிக்க அதனைப் படிக்கின்றவர்கள் அதிகமாகிக் கொண்டே வந்தார்கள். 1848ஆம் வருஷம் நவம்பர் மாதத்தில ஜெர்மனியில் புரட்சி உண்டாகியபோது வரி கொடாதிருக்கும்படியும், பலவந்தத்திற்கும பலவந்தத்தை உபயோகப் படுத்தும்படியும் ஊராரைத் தூண்டுதல் செய்து வந்தது. 1849ஆம் வருஷம, இருமுறை இதனைப் பிராஸிகூஷன் செய்தார்கள. இநத இருமுறையிலும், ஜூரிகள் குறறமில்லை என்று தள்ளிவிடடார்கள். கடைசியில, ஜெரமன் புரட்சி அடககப்பட்டதும், அங்கிருந்த போர் வீரர்களால் காபந்து செய்யப்

பட்டதும், ராசாங்கம் தைரியம் கொண்டு இந்தப் பத்திரிகையை நிறுத்திவிட்டது. இதன் கடைசிப் பிரசுரம சிகப்பு மையில் அச்சிட்டு வெளிவந்தது.

மார்க்ஸ் திரும்பவும் பாரிஸ் நகருக்கு வந்தார். வந்த இரண்டொரு வாரத்திற்கெல்லாம் 1849ஆம் வருஷம ஜூன 13ஆம் தேதி ஒரு புரட்சி நடந்தது- உடனே, பிரஞ்சு கவர்ன்மெண்டார் ஊரைவிடடுப் போகும்படி திட்டம் செய்யவும, மார்க்சு பிரான்சை விட்டு லண்டன் பட்டணத்தில் வந்து சேர்ந்தார். அதுமுதல், தமது அந்தம வரையில் அங்கே வசித்து வந்தார். 1850 ஆம் வருஷத்தில் தாம ஸ்தாபிதத "புது ரையின் பததிரிகை" ஆமபர்க் பட்டணத்தில் பிரசுரம் செய்ய எத்தனிக்கையில், பிற்போக்கடைந்த அரசாங்கத்தார் அமுலால் அது கைவிடப்பட்டது. 1851ஆம் வருஷத்தில இரண்டு சிறு புத்தகங்களை மார்கசு வெளியிட்டார். இதில் முககியமானது பிரஞ்சு தேசத்தில் 1851ஆம வருஷம் நிகழ்ந்த அரசியல் புரட்சியைப் பற்றியது. இநதப் பிரபல நூலில் மார்க்ஸின் தம் சித்தாந்தத்தை முதலில விளக்கிக் காட்டியுள்ளார். இந்தப் புதகத்தின் கருத்தைய பிறகு எழுதிய உலகப் பிரசிதபெற்ற "முதற் பொருள்" (Capital) என்ற நூலில் விவரித்துக் காட்டியுள்ளார்.

இதன் பிறகு, 10 வருஷம் வரை ஆங்கில நாட்டின் பிரதான லண்டன் பட்டணத்தில் உள்ள காட்சிச் சாலையில் அமைத்துள்ள புததகசாலையில் பொருளாதார விஷயமாக நிறைநதுள்ள நூல்களை

இடைவிடாது படித்து வந்தார். அதன் பயனுசத் தான் தொழிலாளர்க்கு வந்த பிரபல நூலாகிய "முதற்பொரு"ளென்ற (மூலதனம், Das Kapital) என்று குறிப்பிடப்படுகின்றது) இது மூன்று பாகங் களாக அமைந்துள்ளது. முதல் பாகம் 1867இல் வெளி வந்தது.

இதன் மததியில், விவகார வேலையிலும் இவர் ஊக்கத்துடன் உழைத்து வந்தார். இவருடைய நூல் களின் கருத்து தொழிலாளர் மனத்தில் நுழைய ஆரம்பித்தது. எங்கும தொழிலாளருடைய இயக்கம் பரவிவரத தலைப்பட்டது. தொழிலாளர்பால் தாம வைத்துள்ள எண்ணம் நிறைவேறும சந்தர்ப்பம் நேரிட்டது. முதன்முதல் அகில உலகத தொழி லாளர் சங்கமொன்று ஸ்தாபித்தார். இந்த அகிலத் தொழிலாளா முதற்சங்கம் பிறந்தது முதல், முற் போககுள்ள தேசங்கள் யாவும் தொழிலாளர்க்கு உரிய உரிமையும் அவ்வுரிமைகளைப் பெருவணணம் எதிர்தது வரும் முதலாளிகளின் மனப்பான்மை யையும், தெரிய வநதது. இந்தச் சங்கத்தில் மார்க்சு அதிக சிரத்தையுடன் உழைத்து வந்தார். முக்கிய தீாமானங்கள் யாவும் அவரால் எழுதப் பட்டன. இதனுல் அவருடைய திருநாமம் உலகத் தொழிலாளர் சரித்திரத்தில் இன்னும என்றைககும் நிலை பெற்றுள்ளது.

முதல் அகிலத் தொழிலாளர் சங்கம் ஸ்தாபித்த பிறகு, பல இடங்களில் சிறுசிறு கலகங்கள ஏற் பட்டன. இதன்றியும், இது புதிய போர்க்களமாத லால், பல அமைதேயப் பேர்விழிகள் இநதச

சங்கத்தின் நோக்கங்களைத் தெரிந்து கொள்ளாமலே, தங்களுடைய சுய நலத்திற்காக இந்தச் சங்கத்தில் சேர்ந்து கொண்டு கிளர்ச்சி செய்யத் துவங்கினர். கடைசியாக இதற்கு ஆதரவாயிருந்த பாரிஸ் பட்டணத்தில ஏற்பட்ட தொழிலாளர்களுடைய பொதுவுடைமை ஆட்சியும் நிலையற்றுப் போய்விட்டது. இவ்விதக் காரணங்களால், முதல் அகிலத் தொழிலாளர் சங்கம் கலைக்கப்பட்டது. தொழிலாளர்களுக்குப் பக்குவமின்மையால, இந்த முதல் சங்கம் கலைக்கப்பட்டது என்று சொல்லலாம். ஆனால், பல தேசத்தில் தோன்றிய தொழிலாளர் சங்கங்கள் ஒன்றுக்கொன்று சம்பந்தம் கொண்டாடி வருகின்றன.

தொழிலாளர் உலகில பல விஷயங்களில் மார்க்ஸ் பெரியாரால் நன்மை பெற்றுள்ளது. அவைகளில, இரண்டொன்றை மாத்திரம் இங்குக் கொடுத்துவிடலாம்.

பொருளாதாரக் கோட்பாட்டை மெஞ்ஞான வழியில் கொண்டு வந்தவர்களில் மார்க்சு முதன்மையானவரென்று கொள்ளலாம். இவருடைய அகண்ட கல்வி கேள்வித திறமையால, தாறுமாருகக் கிடந்த தொழிலாளர் இயக்கத்தை உலகில் மதிககச் செய்தவர் இவரே. இவருடைய பொருளாதாரச் சித்தாந்தமே, தற்கால ரஷ்ய தேசத்து அரசியலுக்கு ஆதாரமாகக் கொள்ளப்பட்டுள்ளது. இவருடைய பொருளாதாரச் சித்தாந்தங்களைப் பற்றி பல அறிஞர்கள் ஆயிரக்கணக்கான நூல்களை இயற்றி வந்திருக்கின்றனர். உலகில்

இவருடைய சித்தாந்தம் ஓர் அரிய சக்தியைப் பெற்றுள்ளது. அகிலதத் தொழிலாளர்களுக்கு இவர் இயற்றியுள்ள "முதற் பொருள்" உலகப் பிரசித்தி பெற்ற நூல்; தொழிலாளர் வேதமெனக் கருதப் படுகின்றது.

உலகிற்கு இவர் அருளிய ஞானமென்னவெனில், மக்கள், உலகில் தோன்றி "பொருளை"ச் சேர்க்க ஆரம்பித்த முதல், மக்கள் இருவகைப் பட்டார்கள். "உடையவன்" "இல்லாதவன்" என்ற இருவகைப்பட்ட இனத்தார் தோன்றினர்கள். இவ்விருவகையாரும் ஒருவருக்கொருவர் எதிர்த்தே வருகின்றனர். இவர்களுக்குள் ஏற்பட்ட பொருளாதார வித்தியாசங்களே, ஆதிகாலந் தொடங்கி மனித சரித்திரத்திற்கு ஆதாரமாகி நின்றுள்ளன. உலகில் பரவிவந்திருக்கும் மதக்கோட்பாடுகளும் தத்துவஞானக் கோட்பாடுகளும், ஓர் இனத்தார் மேப்படவும், மற்றோர் இனத்தார் தாழ்வடையவும் உண்டாக்கப்பட்டவை. அரசியல் மார்க்கத்திலும் ஓர் இனத்தாரின் கொள்கைகளே மேப்பட்டுள்ளன. பலகோடி மாந்தர் தாழ்த்தப்பட்டிருப்பதும் இந்த இன வித்தியாசங்களால்தான்.

பல ஆயிர வருஷங்களாக மனிதருடைய சேர்க்கைகள், மனிதர் எண்ணத்தினுல் உண்டாகி வந்ததென நினைக்கப்பட்டு வந்தன. ஆனால், மனிதர் எண்ணங்களுக்கு ஆதாரமாயுள்ள பொருளாதார நிலைமையைச் சிந்தித்தாரில்லை. மார்க்சு அவர்களின் பிறபல நூல் வெளிவந்த பிறகுதான், மனிதா

எண்ணங்களுக்கும், அவைகளால் எழும் செய்கை களுக்கும், ஆதாரம் பொருளாதார நிலைமையெனக் கண்டு தெரிந்தோம்.

[மனிதவாழ்விற்கு அத்தியாவசியமாய் உள்ளது உணவு. நாம் படும் பாடுகள் அனைத்தும் இந்த உணவின் நிமித்தமே. எவரிடம் இந்த உணவு அதிகப்பட்டதோ, அவர்களே அரசர்களாகவும், மந்திரிகளாகவும், வர்த்தகர்களாகவும், நிலச்சுவான் தார்களாகவும, பெரும் பொருள் உடையோர்களாக வும் ஆனார்கள். இந்த இனத்தவரே அப்பொருள்கள் தங்களிடம நிலைத்திருக்க, வேண்டிய சட்ட திட்டங் களும், மதக் கோட்பாடுகளும், தத்துவக் கோட்பாடு களும், மாந்திர தந்திரங்களும செய்து கொண்டிருந் தார்கள். இதற்குத் தகுந்த கல்வி கேள்விகளும், இராமயண, பாரதங்களும், புராண இதிகாசங்களும் தேர்த்திருவிழாக்களும், தருமகாரியைகளும், மோட்ச நரகங்களும், கோவில் குளங்களும் உண்டாக்கிக் கொண்டார்கள். பொருளைக் கைப்பற்றுகவர்கள் பலரும், அறியாமையால், பொருளுடையோர் கட்சிக்கு உள்பட்டு அவர்கள் செய்துள்ள ஆட்சி களுக்குப் பயந்து தாழ்த்தப்பட்டவர்களானார்கள். உலக சரித்திரத்தை நன்றாகப் படிக்குங்கால். இவ் விரு இனத்தாருடைய போராட்டங்கள் அனைத்தும் பொருளையே ஆதாரமாகக் கொண்டிருத்தல் நன்கு விளங்கும்.]

இவர் கூறியுள்ள விஷயங்களில் இன்னொரு விசேஷ விஷயமுண்டு. [முதலாளிகளுக்கும், தொழி லாளிகளுக்குமுள்ள சம்பந்தா சம்பந்தத்தை நன்றாக

விளக்கிக் காட்டியுள்ளார். பல காலமாக, முதலாளி அனுபவிக்கவும், தொழிலாளி பாடுபடவும், நேரிட்ட காரணங்களைத் தலைவிதியே என்று எண்ணி வந்தார்கள். ஆனால், இவர் நெடுங்காலமாகச் செய்து ஆராய்ச்சியால் இவ்விரு இனத்தாருக்கு ஏற்பட்டுள்ள வித்தியாசங்கள் பொருளாதார வித்தியாசத்தால் நேர்ந்துள்ளனவெனத் தெரிய வந்தது. உயிர் வாழ்வுக்கு வேண்டிய பண்டங்கள் உண்டாகும் வித்தியாசங்களாலும், அப்பொருள்கள் மாறும் விதங்களாலும், முதலாளிக்கும், தொழிலாளிக்கும் உள்ள வித்தியாசங்கள், ஏற்பட்டுள்ளனவெனக் கண்டு தெரிவித்தார். இந்தப் பண்டைக்காலப் பொருளாதார திட்டங்கள் மாற்றினால்தான், உலகில் அவர்களுக்குள் ஏற்பட்டுள்ள போராட்டங்கள் ஒழியுமெனவும் காட்டினார்.

மூன்றாவதாகச் தொழில்தான் சகலவிதச் செல்வத்திற்கும் ஆதாரமென எடுத்துரைத்தார். வாழ்வுக்கு வேண்டிய பண்டங்கள் யாவும் தொழிலால் உண்டானவை. தொழிலின்றி பண்டங்கள் உண்டாகா. இந்தத் தொழிலுக்குக் காரணகர்த்தா தொழிலாளியாவான். ஆதலின் தொழிலாளியால் உலகப் பண்டங்கள் உண்டாக்கப்படுகின்றன. எவ்வளவு தொழில் செலவிடப்படுகின்றதோ அவ்வளவு பண்டங்கள் உண்டாகின்றன. ஆதலின், பண்டங்கள் விலை அனைத்தும, தொழிலின் விலையாயிற்று. எதார்த்தத்தில, பண்டங்களின் விலை தொழிலின் விலையே. இந்தத் தொழிலின் விலைக்குப் பூரண அதிகாரி தொழிலாளி ஆவான். சுருங்க

உரைக்கின், பண்டங்களின் விலை அதைச் செய்த தொழிலாளியைச் சேர்ந்தது. இந்த வெளியான ரகசியத்தை உணராது, இது எனதென்றும், அது உனதென்றும் உலகம் வாதாடி வந்தது. மார்க்சினுடைய விசாரணையில் இந்த வாதங்கள் பயனற்றவை என்று விளக்கியதோடு பண்டங்களின் உண்மையான சொந்தக்காரர் இன்னவர்கள் (தொழிலாளர்) என்பதும் விளக்கமுற்றது.

பண்டங்களின் முழு விலையும், அதற்கு உரிய வணங்கிய தொழிலாளி அடையாமல் போவதினால், உலகிலுள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வுண்டாயின என்றும் காட்டினார். உலகில் செய்யப்பட்ட எந்தப் பொருள்வொன்றை எடுத்துக் கொள்வோம். அதன் மேல் தொழிலாளியின் கைபடுவதற்கு முந்தி விலையற்றப் பொருளாய் இருந்தது. அவன் கைப்பட்ட மாத்திரத்தில் அதற்கு விலை மதிப்பு உண்டாகிறது. அவனின கை படப்பட அதன் விலையும் அதிகரித்து வருகிறது. அது முடிந்த பிறகு, அதன் முடிந்த விலையும் ஏற்படுகின்றது. அந்த முடிந்த விலையை அதனைச் செய்தோன் அடைகின்றானா? இல்லை? முதலாளி என்ற ஒருவன் தோன்றுகிறான். விலை இல்லாத பொருளைத் தனது என்று சொல்லிக் கொண்டு, தொழிலாளிகளைக் கொண்டு, அப்பொருளுக்கு விலையை உண்டாக்கி, அந்த விலையில் பெரும்பான்மை தனக்கென்றும், கிஞ்சிறதே தொழிலாளிக்கென்றும் பங்கிடுகின்றான். இந்தப் பிரச்சினையின் விளக்கம் பண்டைக்கால முதல யாருக்கும் விளங்காமலே இருந்தது. இதனை மார்க்சு விளக்கமுறச்

செய்தார். தற்போது உலகில் இருவகைப்பட்ட இனத்தவர் இருந்து வருகின்றார்கள். இவர்களின முதலாளி ஒருவர், தொழிலாளி மற்றொருவர். முதலாளி, சகலத்தையும் கைக்கொண்டிருப்பவன். தொழிலாளி தன்னுடைய தொழிலைத் தவிர மற்ற எவையுமில்லாதவன். எவையுமில்லாதவனுகையால், தொழிலாளி தன்னுடைய தொழிலை வேண்டியவனுக்கு விற்கிறான். இந்தத் தொழிலைக் கொண்டு, முதலாளி, அவனுக்கு வேண்டிய பண்டத்தைச் செய்து முடித்துக் கொள்கிறான். அந்தப் பண்டம் ஆறுமணி நேரததில் செய்து முடிந்ததாக வைத்துக் கொள்வோம். இந்த ஆறு மணி நேரத்தில் தொழிலாளி எவ்வளவு வேலை செய்து அப்பண்டத்தை முடிக்கின்றானே, அவ்வளவு தொழிலே முடிந்த பொருளின் விலையாகும். இந்த விலை, ஞாயமாக, அதனை உண்டாக்கிய தொழிலாளியைச் சேர்ந்ததாகும். இந்த விலையைத் தொழிலாளி, முதலாளியிடமிருந்து பெறுகின்றான் என்று வைததுக்கொள்வோம். ஆறுமணி நேரத்தில் செய்த பொருளின் விலையைத் தொழிலாளி பெறுகின்றவனுகின்றான். இவ்விதம் தொழிலாளிதான் செலவு செய்யத் தொழிலின் முழு விலையைப் பெறுவது ஞாயமே. இவ்விதம நடைபெறுமாயின், முதலாளி வெறுங்கையாகப் போக வேண்டும். ஆனல், முதலாளி அவ்விதம் நடப்பதில்லை; அவனுககுத் தக்கவாறு ஒரு வசதி உண்டாக்கிக் கொள்கிறான். அதாவது, தொழிலாளியின் வேலையை ஆறுமணி நேரத்திற்கு மாத்திரம் வாங்க

வில்லையாம், ஒருநாள் முழுவதும் அவன் கொடுக்கும் கூலிக்கு வேலை செய்ய வேண்டுமென்று; 7, 8, 9, 10, 11, 12 மணி நேரம் செய்த வேலையின் பயன் அதாவது, அதன் விலையைத்தான் கைக்கொள்ளு கின்றான். இந்த அதிக வேலையின் விலையைத் தொழி லாளி அடைவதில்லை. முதலாளி, தான் யாதொரு வேலையும் செய்யாமலே, இந்த அதிக வேலையின விலையை அடைகின்றான். இதைத்தான் முதலாளி யின் லாபமென்று கூறுவது. இந்த லாபத்திற்கு, உண்மையில், தொழிலாளிதான் பாத்திர முடைய வன். ஆனால், இனுசரு இந்த லாபத்தில் யாதொன் றும் கிடைப்பதில்லை. இந்த லாபத்தை முதலாளி கள் தங்களுக்குள்ளேயே பங்கிட்டுக்கொண்டு வீடுவாசல, மனை, மாளிகை முதலிய செல்வங்களை உண்டாக்கிக் கொண்டு சுகபுருஷர்களாக வாழ்ந்து வருகின்றார்கள் இந்தச் செல்வங்களை உண்மையில் உண்டாக்கிய தொழிலாளி, வயிறறுக்குப் போதாத கூலியைப் பெற்றுக் கொண்டு மிகவும பட்டினியா யிருந்து வருகின்றான். இதுதான் நமது உலக மடைந்துள்ள இழி நிலைமை.)

ஆதலின், உலகில் இருக்கும் செல்வமனைத்தும் பெரும்பான்மையோருடைய வேலையின் பயனாகும். இந்தப் பயன் முழுமையும் சிலரே அடைகின்றனர். வாஸ்தவத்தில் இந்தப் பயனைப் பெரும்பான்மையோர் அடையவேண்டியதே ஞாயமாகும். உலகம இவ்வித அநியாய நிலைமையில் நிற்க, உலகில் நீதியும் ஞாயமும், யாவருக்கும் கிடைக்கின்றதென்று முத

லாளிகள் வழங்கும் சொல், பொய்யெனப் படுமன்றோ? இவ்விதமாக, மார்க்சு பெரியார், உலகம் சிறுபான்மையோரைப் பெரும்பான்மையோர் வஞ்சிக்கப்படுவதை எடுத்துக் காட்டி, இதற்குப் பரிகாரமும் இன்னதெனவும் விளக்கி, 1883ஆம் வருஷம் மார்சசு மாதம், 14ஆம் தேதி தமது வாழ்வை முடித்தார்.

# 3. பூமியும் பொருளாதாரமும்

உலகில் தோன்றிய நாகரிகங்களும், கல்வி கேள்வியும், உண்பண்டம் தின்பண்டப் பொருள்களும், சகல வஸ்துக்களும் பூமிவளத்தைப் பொருந்தியவை. பூமி வளத்திற்குத் தக்கபடியே, மனிதர் தொழில்களும் நடைஉடை பாவனைகளும் பொருந்தியுள்ளன. பூமி வளப்பம் மாறுதலை அடையுங்காலை மனிதர் நடவடிக்கைகளும் மாறுகின்றன. பூமி வளப்பத்தை நாடியே, ஒரு நாட்டில் உள்ளவர்கள் வேறுநாடுகளுக்குச் செல்வதும், பிரதேசங்களைக் கைப்பற்றுவதுமாகும். பூமியின் மேலும், கீழும் உள்ள பொருள்களுக்காகவே வல்லரசுகள் போர் புரிவதும், ஒருவனை ஒருவன் தாழ்த்துவதும், முதலாளி என்றும் தொழிலாளி என்றும் வேற்றுமை உண்டாவதுமாகும். வல்லரசுகளின் ஏக சக்கிராதிபத்திய முயற்சிகளும் பூமிவளப்பங்களை யொட்டியேயாம். சிறுப்பான்மையோர் பெருபான்மையோரின் வாழ்வை ஆளுவதும், பூமியிலுள்ள பொருள்களைக் கைப்பற்றுவதற்கே. ஆதலின், உலகில் தோன்றிய உயர்வு. தாழ்வு பொருளுடையவை, பொருள

இல்லாதவை, மிகுதி, வருவாய், முதலிய நிலைமைகள் பலவும் உலகப் பொருள்களின் சம்பந்தத்தை ஒட்டியே தோன்றுகின்றன.

மனிதன் மண்மேல் பிறந்தவன். மண்மேல் வளர்கின்றவன். மண்மேல் சாகின்றவன். பூமியே இவனைப் போஷிக்கின்றது. இவனுடைய செயல்களையும், எண்ணங்களையும், நடவடிக்கைகளையும் பூமியே தூண்டுகோல் செய்கின்றது. இவனுக்கும், இவன் தங்கும் இடத்திற்கும், இவன் போகும் வழிகளுக்கும், இவன் உழும் நிலத்திற்கும், இவன் போகும் வழிகளுக்கும், இவன் யாத்திரை செய்யும் கடலுக்குமுள்ள சம்பந்தங்களைத் தெரிந்து கொள்ளாமல், இவனுடைய செய்கைகளையும், நடவடிக்கைகளையும் உணர்தல் முடியாது. இந்தச் சம்பந்தங்களை அறிந்தால் ஒழிய, உலகில் அந்தந்தக் காலங்களில் தோன்றி பல்வேறு ஸ்தாபனங்களின் பொருள் விளங்கும்.

தற்கால ஏகாதிபத்திய எண்ணங்கள் யாவும், உலகப் பொருள் மீது வைத்துள்ள அவா காரணமாகக் கொண்டுள்ளபடியால், உலகப் பொருளாதார நிலைமையைக் கண்டு தெளிதல் மிக்க அவசியமாகும். தற்காலம் உலகில் தோன்றியுள்ள முதலாளியின் மனப்பான்மை, உலகிலுள்ள பொன், வெள்ளி, கரி, இரும்பு, முதலிய பொருள்கள் மீது நாட்டம் வைத்திருப்பதாலும், அவைகளைப் பெற, அவர்கள் உண்டாகும் தேசங்களைக் கைப்பற்ற வேண்டி இருந்ததாலும், தேசங்களைக் கைப்பற்றுவதோடு அத்தேசங்களின் தொழிலாளிகளையும்

குறைந்த கூலிக்கு வேலை வாங்கிவர வேண்டி வருவ தாலும் நமது தேசத்து நீர் நிலவளப்பம் எவ்வித மாக அந்தந்தக் காலத்துப் பொருளாதாரத்திற்கு ஏதுவாக இருந்து வந்தன என்பதைச் சிறிது விசாரிப்போம்:

சிந்து, கங்கை, காவேரி இம்மூன்று நதிகள் ஓடும் ஊர்களில், செழிப்பான நாடுகளும், நகரங் களும், அரசும அதிகாரமும் செழித்தோங்கி வந் திருத்தலைக் கவனித்தல் வேண்டும். பாரத நாட்டின் முக்கிய நாகரிகங்கள் இம்மூன்று நதிக்கரையோரங் களில் தோன்றின; கல்வியும் கேளவியும் நிறைவுற் றிருந்தன; பூராண இதிகாசங்களும், தோன்றின; வேதங்கள் முழங்கின; காலாகாலஙகளால் கொடிய போர்களும் விளைந்தன. பல்லாயிரங்கோடி மனிதர் மாண்டனர், பஞ்சமும், வறுமையும் கோடான கோடித் தொழிலாளரை வதைத்தன. அன்றும் இன்றும் பலகோடி எளியோரைப் பல நோய்கள் பீடித்து வருகின்றன. ஏழு வருஷ பஞ்சத்தால் பாரத மக்கள் வதைந்து வந்ததாக மகா பாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிறதாக விவேகாநந்தர் சொல்லு கின்றார். தாது ஈஸ்வர வருஷங்களில் (1877-78) தென னிந்தியாவில் ஒரு கோடி ஏழை மக்கள் மாண்டனர். 1897-98 வருஷங்களில் மகாமாரி நோய் 7 கோடி இந்தியரைக் கொள்ளை கொண்டது. 1920ஆம் வருஷத்திய குளிர் சுரத்தால் 2 கோடி ஏழைகள் மாண்டனர். அக்காலம் முதல் இக்காலம் வரை உலகமெங்கும் நிலநீர் வளப்பமுளள இடங்களில் சிலர் சகல சம்பத்துடன் செழிதது வாழ்வதும்,

பலர் இல்லாமையால் துன்புற்று மடிவதுமான காட்சியைக் காணலாம்.) இவ்விதமாகச சமூக வாழ்வில் தாரதனமியம இருந்துவருவது, பொருளாதாரக் குறைவாலென்று ஏற்படுகின்றதன்றோ? இந்தப் பொருளாதாரக் குறைவு உலகிலுள்ள பொருள்கள பலருக்குக் கிட்டாமையாலும், அவைகள் விநியோகம தாறுமாருய் இருந்ததாலுமெனக் காண்க. ஆதலின், உலகபொருள்களின் உற்பத்தி வரலாற்றையும், அதனை உலகில் பங்கிடப்பட்டுவரும் விதங்களையும் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

இவ்விதமே, உலகமெங்கும் காலாகாலமாகப் பொருளாதார நிலைமைக்கு ஆதாரமாயுள்ள நீர், நில வளப்பங்களைச் சிலரே கைப்பற்றி வந்ததால், பலருடைய அந்தஸ்து தாழ்த்தப்பட்டு வந்திருப்பதைத் காணலாம்.

பண்டைக்கால நாகரிகங்களில், ஈஜிப்ட் தேசத்தில் ஓடும் நைல் நதிக்கரை ஓரங்களில் உண்டான நாகரிகமே முதனமை என்று சொல்லலாம். இது 5,000 வருஷத்திற்கு முந்தித் தோன்றிய நாகரிகமாகும். இநத நாகரிகம் உண்டாவதற்கு முகாந்திரமாய் இருந்தது நைல் நதியின் பிரவாகமே. ஆனுல், வெறுமபிரவாகத்தால், செழிப்பும் செல்வமும் உணடாகா. அந்தப் பிரவாகங்களை வாய்க்கால்கள் மூலமாகப் உபயோகப் படுததிய கோடான கோடி அடிமையாள்களால், ஈஜிபட் தேசத்து செலவர்களுக்கு செழிபபும் ஏறபட்டது. இதனைச சிலரே கைக்

கொண்டார்கள். ஆனல், பலரோ அடிமைகளாகவே இருந்து வந்தார்கள்.

இரண்டாவது நாகரிகமாகிய பாபலோனியா நாகரிகத்தைப் பற்றி விவிலிய நூலாகிய பைபிலில் பார்க்கலாம். இந்தப் பழைய நாகரிகம், டைக்ரிஸ் யூப்ரடீஸ் நதிகளால் உண்டானது. இவ்விரண்டு நதிகள் பக்கங்களில் அழகிய நகரங்கள் தோன்றின. செல்வாக்கும் செழிப்பும தழைத்தோங்கின. இதனை அன்று "அண்டகின மதத்தார்" ஆண்டு வந்தனர். அவிரியன்ஸ், கால்டியனஸ், பாரஸிகர் குழுவில் அண்டை நாட்டார் இவ்வூரைக் காலம் காலமாய் ஒருவருக்கொருவர் பின்னல வளப்பமுள்ள தேசத்திலும பலபேர் அடிமைகளாக இருந்தும் வந்தனர். இவர்களே போர்க்காலததில் மாண்டனர். ஊர்களில் ஆடுமாடுகளைப் போல் விற்கப்பட்டனர். சிலருக்கே குடியானவர்கள் தொண்டு புரிந்து பசியும் பட்டினியுமாய் இருந்து வந்தனர்.

மூன்ருவது, சீன தேசத்திலும, பழமையான நாகரிகம் நாளைக்கும் தழைத்து வருகின்றது. இதன் வளப்பம், ஓயாங்ஹோ, யாங்டிஸிகியாங் என்ற இரண்டு மகாநதிகளில் உண்டானது. சீன தேசத் திலும் இன்றைக்கும் கோடான கோடி சீனர் மிக ஏழைகளாகவும் மாண்டரீன்ஸா என்ற நிலசசுவான் களே, கொடுங்கோல், அதிகாரிகளாவர். இநதச் சீனததில் எவ்வளவு விளைவு விளைந்தாலும், ஒரு பஞ்சத்தால் தாங்க முடியா. அடிக்கடி பஞ்சங்கள் கோடான கோடி எளியோரை வதைத்து வரு கின்றன. ஆனல், சீனர்களில் பிரஜை விருத்தி

அதிகமாதலாலும், மிகச் சுறுசுறுப்பாகவும், எறும்பு களைப் போல் உழைதது வருவதாலும சீன நாகரிகம் இன்னும் ஒருவாருகத தபபிய பிழைத்து வருகிறது.

இவ்விதமாகப் பண்டைக் காலங்களில் பல தேசங்களில் பற்பல நாகரிகங்கள் தோன்றுவதற்கு நதிகள காரணமாய் இருந்து வந்தன.

கடலோரங்களில் யாத்திரை செய்யவும் தூர தேசததுப் பொருளகள் வரவும் சமுத்திரங்கள் காரணமாய் இருந்தன. இந்திய தேசத்தில பழங்கால முதல் கனனியாகுமரி வரையிலுளள கடற்கரைப் பொருள்களிலும், மலையாள பகசங்களிலும, பஞ்ச சீலம், லடசததீவு முதலிய தீவுகளிலும போக்கு வரத்தால், கடலோர நாகரிகமும உண்டாயின. கடலோரங்களில், துறைமுகங்கலுண்டாவதாலும், பெரியபெரிய கப்பல்கள் கட்டவும தூண்டுகோல் இருந்தன. கடலோரங்களில் பல்லாயிரம் பேர்கள் சீவிக்கவும் இடங்கொடுத்தது. வரவர இங்கும் சிலரே கப்பல்களைச் சொந்தமாக்கிக் கொண்டும், சிலரே வர்த்தகர்களாய், பலரைக் கப்பல் ஓட்டவும, சாமான் களை ஏற்றுமதி செய்யவும், இறககுமதி செய்யவும் ஆளாக்கிககொண்டபடியால், துறைமுகங்களில் பலபேர் எளியவர்களாகவும், சிலரே பிரபல வர்த்த கர்களாயினர்.

துறைமுகங்களில் இன்றைக்கும் இந்தப் பொரு ளாதார வேற்றுமையைக் காணலாம். கடலோரங் களிலும்,மகாசமுத்திரங்களிலும், ஐரோப்பியருடைய

நாகரிகத்திற்கு அடிப்படையாக ஆதிமுதல் இருந்து வருவதைக் காணலாம்.

ஆதிகாலத்தில் ஐரோப்பியக் கிரீட் நாகரிகம் அக்கம பக்கங்களில பரவிவந்தது. அதன் செழிப்பு கடற்கரை யாத்திரையை உண்டாககினதாகும். இது சுமார் 5,000 வருஷத்திற்கு முன்பு இந்த ஊரி லிருந்து கீழ்க்கரை ஊர்களுக்கும இவ்வூர் வர்த்தகம் எட்டியது.

இவர்களுக்குப் பிறகு பிளிஷ்யனஸ் என்ற ஒரு கூட்டத்தார் மத்திய தரைக்கடல்களில் தங்களுடைய கப்பல்களை ஓட்டி வந்தனர். சுமார் 3,000 வருஷத் திற்கு முன்பு, இந்தக் கூட்டத்தாரால், இரும்பு கண்டு பிடிக்கப்பட்டது. அதுமுதல், கைத்தொழில் அபிவிருத்தி அடைந்து வந்தது. இவர்களையும் "காட்டுமிராண்டிகள்" என்று வழங்கி வந்த ஒரு மனித வகுப்பார் மத்திய தரைக்கடல் பக்கங்களில் ஏற்பட்டிருந்த நாகரிகங்களைத் தோல்வியுறச் செய்து அந்த ஊர்களைக் கைபபற்றி பல ஆயிரம் பேரை சிறை கொண்டு தங்களுக்கு அடிமைத் தொழில் புரியச் செய்து கொண்டனர். ஆதியில் யாதவத் தொழில் புரிந்து வந்த யவனர், கடலோர ஊர்களைக் கைபபற்றித் தங்களுடைய யவன நாகரிகத்தைப் பரவச்செய்தனர். ஆதிகால நாகரிகங்களில யவன நாகரிகம் மிகச் சிறபபுள்ளது. கி. மு. 335-323 ஆம் ஆண்டுகளில் அலெக்ஸாண்டர் என்ற போர் வீரன் தோன்றி பார்ஸுகரைத் தோறகடித்து, மத்திய ஆசியா முழுமையும் கைப்பற்றி, இந்திய தேசத்தையும் வடபுறத்தில் வெற்றி கொண்டு,

யவன நாகரிகத்தை மத்தியதரைக் கடல் கீழ்பாகம் முதல், இந்திய தேசம்வரை பரவச் செய்தனன்.

அலெக்ஸாண்டர் இறந்த பிறகு இவன் ஸ்தாபித்த ஏகாதிபத்தியம பிளவுற்று, இட்டாலி தேசத்தில் தோன்றிய ரோமர்களுக்குக் கீழ்ப்பட்டது. ரோமர்கள், தங்களுடைய வெற்றியை மத்தியத் தரைகடல் முழுமையும் பரவச் செய்து கொண்டு எங்கும் தொழிலாளிகளை அடிமைகளாக்கிக் கொண்டு தங்கள் அடிமை நாகரிகத்தை மத்திய தரைக்கடல் முழுமையும் பரவச் செய்ததோடு ஆங்கில தேசத்தையும் கைப்பற்றி ஏறக்குறைய 500 வருஷம் வரை ஆண்டு வந்தார்கள்.

ஆனால், இந்த அடிமை ராஜ்யம் வெகுகாலம் நீடிக்க முடியாமற் போயிற்று. உலகத்தை வென்று திரளான பணத்தைக் கைக்கொண்டு ஏழைகள் அதிகரிக்கத் தங்கள் செங்கோலைச் செலுத்தி வந்த படியால், அரசு புரிந்தோர் சோம்பல் கொண்டு, சிற்றின்பவேட்கையில் மூழ்கிக்கிடந்தார்கள். இந்தச் சமயத்தில், மத்தியதரைக் கடலைச் சுற்றியிருந்த காத்ஸ், வண்டாலஸ் ஊனர், ஜெர்மனியர், பரங்கிகள் படையெடுத்து ரோமாபுரி ஏகாதிபத்தியத்தைத் தோற்கடித்து, அரசாங்கம் இரண்டு பிளவாக்கி, அவர்களுக்கு அடிப்படை ஊர்களைக் கைப்பற்றி தற்காலததில் வழங்கும, பிரஞ்சு, ஜெர்மனியும, ருஷ்யர்களுக்கும் ஆதி மூதாதைகளானார்கள். மத்திய தரைக்கடல் சூழ்ந்த ஏகாதிபத்தியம் துருக்கியர்களால் தாக்கப்பட்டு நாசமுற வேணடி வந்தது.

துருக்கர், இத்தாலி, ஸ்பெயின், ஈஜிப்ட் முதலிய ஊர்களைக் கைப்பற்றி, அவ்விடங்களில் துருக்கிய நாகரிகத்தைப் பரவச் செய்தனர்.

ரோமராஜ்யம் செல்வாக்கு அடைந்ததற்குக் காரணம், அதன் சேனைகள் போவதற்கு ரோடுகள் போட்டதே விசேஷமாகும். ரோம் சாம்ராஜ்ஜியத்தில், ஆங்காங்கு பட்டணங்களும், மாடமாளிகைகளும், தண்ணீர்க் குழாய்களும கட்டி வைத்ததே, அதன் சிறப்பாகும். ஆனால் எளியோர் மிகுதியாக வளர்ந்து வந்தபடியால் அந்த ராஜ்யம் நிலையாய் இருக்காமல் போயிற்று. இவர்களுககுப்பின் வந்த துருக்கி நாகரிகம் உலகிற்கு நன்மை உண்டாகும், சிற்சில ஸதாபனஙகளைப் புதுமையாக உண்டாக்கியது. இந்தத் துருக்கியர் நாகரிகத்தால் ஐரோப்பியர்களுக்கு அவர்கள மூலமாக உலகிற்கு,கணிதம், விஞ்ஞானம், வைத்தியம் முதலிய முக்கிய வெற்றி உதவியாகும்படி நேரிட்டது. துருக்கர்களுக்கு வெற்றி அனுகூலமாய் இருந்தது குதிரைகள் என்று சொல்லலாம். விரைவில்போகக் குதிரைகள் துருக்கியர்களுக்குப் பேருதவியாய் இருந்தபடியால், அந்தக் காலத்து உலகையே அவாகள் குடைநிழற்குள் கொண்டு வந்தனர். அந்தச் சக்தி இடையில நமது இந்தியாவையும் கைப்பற்றி, சுமார் 1,000 வருஷம், நம்மை ஆளவும இடங் கொடுத்தது.

இவ்விதமாக, ஆதிகாலந் தொடங்கி, உலகம் பற்பல நாகரிகங்களைவுடைத்ததாய் தற்கால நாகரிகத்தை அடைந்து வருகிறது. தற்கால நாக

ரிகத்தின் முககிய மகிமை என்னவெனில், வர்த்தகம் விசேஷ அபிவிருத்தி அடைந்து உலகில் செல்வம் அதிகமாக விளைந்து, சிற்சிலர்க்கே கையாண்டு வரும் காட்சி என்று சொல்லலாம். இந்தத் தற்கால காட்சிக்கு ஆதாரமாக இருந்தது பெருங்கடல் யாத்திரை என்னலாம்.

### பெருங்கடல் யாத்திரை

ஆதியில் ஓடைகளையும், குட்டைகளையும் சிறு ஓடங்களில் தாண்ட மனிதர் சக்தி படைத்தனர். அதன் பின்பு, நதிகளைத் தாண்ட சக்தி பெற்றனர். நதிகள் மூலம் கடல்களையும் தாண்ட முயன்றனர். சுமார் 1,000 வருஷத்திறகு முன்பு சிறு கடல்களில் யாத்திரை செய்து வந்தனர். அமெரிக்கா தேசம் கண்டுபிடிககப்பட்ட பிறகும, கீழ்த்திசை நாடுகளாகிய இந்தியா முதலிய நாடுகளைக் கண்டபிறகு தான், மகாகடல் யாத்திரை சாத்தியப்பட்டது. இந்த யாத்திரை மூலமாக, மேல்நாடு கீழ்நாடு நாகரிகங்கள் சந்திக்கவும் நேர்நதது. இந்த யாத்திரைகளை மிகுதியாக ஐரோப்பியர்கள் செய்து வந்தபடியால், அமெரிக்கா தேசத்தைக் கைப்பற்றவும், பண்டைக் காலக் குடிகள்வாழ்ந்து வந்த பிரதேசங்களில் ஐரோப்பியர்களே குடியேறவும் வலுவைப் பெற்றனர்.

நீராவிக்கப்பல்களும், ரெயில்களும் உண்டாகவும், கைப்பற்றியிருந்த கடல்களும், நாடுகளும் ஐரோப்பியர் அமெரிக்கர்களால் கைப்பற்றப்பட்டன. இது முதல், கைத்தொழிலுக்குப பதிலாக, எந்திரங்கள் ஏற்பட்டன, எந்திரங்களுக்குக கரியும், இரும்பும்

வேண்டிஇருந்தமையால், எங்கெந்த ஊர்களில் கரியும் இரும்பும் அதிகமாகக் கிடைக்கப்பெற்றனவோ, அந்த ஊர்கள் யாவும் பரிந்து வந்தன. எந்த ஊர்களில் கரியும், இரும்பும் கிடைக்கப் பெற்றனவோ, அவ்வூர்கள் யாவும வல்லரசுகளால் கைப்பற்றப் பட்டன. ஆதலின் உலக விளைவுப் பொருள் நிமித்த மாகவே தற்கால உலகப் பொருளாதார நிலைமை ஏற்பட்டுள்ளது. ஐரோப்பியர்கள இந்தியா, சைனு ஆப்பிரிக்கா முதலிய கீழ்நாட்டு அரசுகளை அடக்கித் தங்கள் ஏகாதிபத்தியத்தை வளரச் செய்வதும் இந்த விளைபொருள்களைக் கைப்பற்றுவதற்கென அறிக.| அமெரிக்கர்கள், சீனுவையும் ஜப்பானையும் அடக்கி ஆளமுயன்று வருவதும் இந்த விளைபொருள் நிமித்தமெனவும் அறிக. ஜப்பானியர் கொரியாவையும் மஞ்சூரியாவையும் தங்கள் செல்வாக்கில் கொண்டுவர முயன்று வருவதும் இந்த விளைபொருள்களுக்காகவே. அமெரிக்கரும், ஐரோப்பியருக்கு ஒருவிதமான கடன்கொடுத்திருப்பதும், வல்லரசுகள் சிறிய நாட்டுக்குக் கடன கொடுப்பதும் விளை பொருள்மேல் வைத்துள்ள ஆசையினுலேயே.

ஆதியில், ஆறுகளின் மூலமாக மனித நாகரிகம் ஆங்காங்குப் பரவி வந்தது. ஆற்றங்கரையோரங்களில் சிற்சில • பட்டணங்களில் தோன்றி சிற்சில அரசுகளும் தழைத்து வந்தன. அஸ்தினுபுரம், காசி, கயா, டில்லி முதலிய பண்டைய நகரங்களும், அதனதன் அரசும் நதிகள் மூலமாகச் சிறப்புற்று வந்தன. அதுபோலவே, மேல்நாடுகளிலும், ரோம்

கார்த்தேஜ் முதலிய ஆதி ஊர்கள், நதிவளப்பத்தை ஆதாரமாகக் கொண்டன.

கடல்யாத்திரை விசேஷப்பட்டதும், கடலோரங்களிலுள்ள தேசங்களில் செல்வாக்கை அடைய ஆரம்பித்தன. ஆதியில் மத்தியத் தரைக்கடல் பாகமெல்லாம் நாகரிகம் பரவி வந்தது. துறைமுகங்கள் ஏற்பட்டன. நமது இந்தியாவிலும், சென்னைப் பட்டினமென்றும், பாம்பே என்றும், கல்கத்தாவென்றும் பெரும்பெரும் பட்டினங்கள் கடலோரங்களில் தோன்றி விரிந்த கடல் மார்க்கமாகப் போக்குவரத்துக்கு இடம் கொடுத்து வந்தன. கப்பல் யாத்திரையால் உலக முழுதும் போய்வரும் செல்வாக்கை மனிதக் கூட்டம் பெற்றிருக்கிறது.

கடைசியாக ரெயில்வேக்களால், மனிதனுக்கு எட்டாதிருந்த உலகநாடுகளும் வசதியாக்கப்பட்டன. பாலைவனமாயிருந்த ஆப்பிரிக்கா தேசம் ஐரோப்பியர்களுக்கு வசப்பட்டதும இந்த ரெயில்வேககளாலென அறிக. இருண்டிருநத ஜெர்மன் ஏகாதிப்பத்தியத்தை வெனறதும், எட்டாத ருஷ்யா நாகரிகத்திற்குக் கொண்டுவரப் பெறறதும் இந்த ரயிலாலென அறிக. அமெரிக்காவில் ஐக்கிய மாகாணம் சிறப்புற்றதும் இந்த ரயில் மார்க்கங்களில்தான். நமது பழைய டெல்லி, இந்தியாவுக்கு நேற்று இராஜதானியானதும் ரயிலாலெனவறிக. இவ்விதமாக, உலகமெங்கும் ரயில் ரோடுகள் மூலமாக ஐக்கியமடைந்து வருங்காட்சி உலகிற்கு ஒரு காலத்தில் நன்மை விளைக்குமென்பது திண்ணம்.

கருங்கடல் யாத்திரையாலும், ரயில்வேக்களாலும், உலகிலுள்ள தூரதேசங்கள் யாவும் நெருக்கமுற்று வருகின்றன. இவ்வித நெருக்கம் பெருகப் பெருகப் பொருளாதார நிலைமையும் ஐககியமடைந்து வருகின்றன. உலக முழுதும் ஒரு தேசத்திற்கு ஒரு தேசம் பொருளாதார சம்பந்தமேற்பட்டு வருகின்றது. ஆனால், உலகில் அரசியல் ஐக்கிய சம்பந்தம் ஒன்றுதான் ஏற்படவில்லை. அது ஏற்படும் காலம் எககாலமோ! இதனைத் தொழிலாளர் தாம் கொண்டுவர வேண்டுமென உலகப் பொருளாதார நூலாசிரியர் ஒருவர் எழுதுகின்றார்.

## பூர்வகாலத்துப் பொருளாதாரம்

"பணம் படைத்தவன் பாக்கியவான்" என்ற முதுமொழி ஒன்றுண்டு. இந்தப் பழமொழியின் ஆதரவில்தான், முற்காலப் பொருளுடைமையும், தற்காலப் பொருளுடைமையும் தழைத்து வளர்ந்து வந்தன. பூர்வ காலத்தில் நிலம், நீர், ஆடு, மாடுகள் இவைகளே முக்கியமான செலவங்களாக மதிக்கப்பட்டு இருந்தன. மகாபாரதத்தில் மாடுபிடிச் சண்டை நடந்ததும், இவ்விதச் செல்வங்களை ஒட்டியே. அக்காலங்களில் மனிதர் நான்கு வகைப்பட்டு பொருளாதாரத்தைக் கையாண்டு வந்ததாகத் தெரிகிறது. அரசன், வணிகன், வேளாளன், அடிமை என நான்கு இனங்களாகப் பொருளாதாரப் பிரிவினைக்குட்பட்டிருநதார்கள். முதல் மூன்று இனங்களும் பொருளாதார நிலைமையில் உயர்ந்திருந்தார்கள். நான்காவது இனத்தார் இட்ட வேலையைச்

செய்வது ஆடு மாடுகளைப் போல் வாழ்ந்து வந்த தாகத் தெரிகிறது. இவர்கள் இருந்து வந்த இடத்தில்தான் தற்காலத் தொழிலாளர் இருந்து வருவது. ஆதியில் பொருளுடையவன் ஓர் இனம்; பொருளில்லாத அடிமை மற்றோர் இனம்; அடிமைக்கு யாதொரு சுதந்திரமும் கிடையாது; சொத்து படைத்தவன் எஜமானன். இல்லாதவன் பண்ணையாள். பண்ணையாளனுக்குச் சொத்து கிடையாது. இவனுக்கு எஜமானன் இட்டதுதான பிச்சை.

## 3

# பொதுவுடைமை விளக்கம்

### பொதுவுடைமை

பொதுவுடைமையைச் சோசலிஸம் (Socialism) என்று இங்கிலிஷ் பாஷையில் வழங்குவார்கள். பொதுப்பொருளுடைமை எனவும் வழங்கும். உலகில் உயிர் முளைத்த முதல், உலகிலுள்ள பல பொருள்களை, ஆன்மாக்கள், ஆண், பெண் மக்கள், பொதுவாகக் கொண்டு வாழ்ந்து வந்தன. உலகப் பொருள்களைப் பொதுவாகப் பாவிக்கும் பான்மை புராதனப்பான்மையாகும். நமது இந்தியாவிலும், ஐரோப்பாவிலும், மெக்ஸிகோ, பெரு முதலிய அமெரிக்கா தேசங்களிலும், பொதுப்பொருளுடைமை பல காலம் கையாண்டு வரப்பட்டது. ஆனால், அடிக்கடி உலகில் வலியோர் தோன்றி எளியோரை வஞ்சித்து வந்தபடியாலும், அடுத்துப் போர் புரிந்து தோல்வியுற்றோரை அடிமைகளாக்கிக் கொண்டபடியாலும், பொதுவுடைமை நசிக்க நேரிட்டது. இதுவுமன்றி, பொதுஜன ஆட்சிக்குப் பதிலாக, வல்லரசுகள் தோன்றி உலகைக் கைப்பற்றிக்

கொண்டதாலும், பொதுவுடைமை மறைந்து விட்டது. பண்டைக்காலத்துப் பொதுவுடைமை மறைவு அடைந்ததற்கு இன்னொரு காரணமும் உண்டு. அதாவது, சாமான்யப் பொதுமக்கள் வலியோர் செய்து வந்த ஆட்சிகளுக்குப் உட்பட்டு, சுயஞானங்கெட்டு, அந்தந்தக் காலத்துப் பொருளாதாரத்தைத் தங்கள் உபயோகத்திற்கு மாற்றிக் கொள்ள சக்தி இழந்து வந்தபடியால், பொதுவுடைமை நிலைக்காமல் போயிற்று. இதனால் பலர், அறியாமையிலும், இல்லாமையிலும் ஆழ்ந்து கிடக்கின்றனர். இந்த நிலைமை பரிதாபகரமானது. இதற்குப் பரிகாரம் என்னவெனில் தற்கால ஞானத்தைக் கொண்டு நமது பொருளாதார வாழ்கையை மாற்றிக் கொள்ளல் வேண்டும். இதைச் செய்யாமலிருக்கும் வரை உலகில் போரும், சண்டையும், பிணியும் வறுமையும் அகால மரணமும் நிகழ்ந்தே வரும்.

(தற்கால உலக துர்ப்பாக்கியமென்னவெனில், பலர் அறியாமையைக் கொண்டு சிலர் உலக இன்பங்களைக் கைப்பற்றிய விஷயமே.) இதற்கும் காரணம் தற்கால ஞானத்தைக் கொண்டு நமது ஜன சமூக வாழ்க்கையைத் திருத்திக் கொள்ளாத அறியாமையே. சயின்ஸ் என்ற மெஞ்ஞானத்தால் உலகம் பிணி, மூப்பு, சாக்காட்டிலின்று விடுபட்டு, சுகித்து வாழ வேண்டிய பொருள்கள் கிடைக்கப் பெற்றுள்ளோம். அவைகளை நல்விநியோகப் படுத்திக்கொண்டு, சகலரும் சுகித்து வாழ முயற்சிக்காத தோஷத்தால், உலகில் பெருங்குறையாக இருக்கின்றது. இந்தக் குறையை நிவர்த்திக்கொள்ள

ஒரே வழிதான் இருக்கின்றது. அது என்னவெனில் உலகப் பொருள்களைப் பொதுவாக நல் விநியோகப் படுத்திக் கொள்வதுதான். நமது தற்கால ஞானத்தை இந்த விஷயமாக உபயோகப்படுத்திக் கொள்வோமேயாகில், உலகில் துன்பம் குறைந்து இன்பமும் பெருகும். இனி வரும் சிறந்ததோர் நவீன நாகரிகத்திற்கு இடம் தரும்.

பொதுப் பொருளுடைமையைக் கையாள்வது மிகக் கஷ்டமென்று சிலர் கூறுகின்றார்கள். இந்தக் கொள்கை மிகத்தவறு. உலகில் தற்போது சில பொருள்களையாவது பொதுவுடைமையாக ஆக்காத தேசம் வொன்றேனுமில்லை. தந்தி, தபால், ரயில், பாதை, வழி, கல்வி, கெனல், ஏரி, குளம், கடல் முதலிய பொருள்களும், ஸ்தாபனங்களும் சகலருடைய பொது உபயோகத்திற்கே, உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. காலம் போகப் போகப் பல்வேறு பொருள்களும், ஸதாபனங்களும் பொதுவுடைமையாக்கிக் கொணடே வருகினறன. உயிருக்குத் துணையாக நிற்கும இன்னும் பல பெரிய பொருள்களும, ஸ்தாபனங்களும் தனிப்பொருளாக இருந்து வருகினறபடியால், அவைகளையும் பொதுப் பொருள்களாக்க வேண்டிய அவசரத்தைப் பொது உடைமை வற்புறுத்துகின்றது. இந்தப் பொது உடைமை ஞானத்தைப் பெருக்குவதறகே இந்தச் சிறிய நூல் இயற்றப் பெற்றுளளது.

இந்த ஞானத்தைப் பொதுமக்கள் அடைந்தாலொழிய, பொதுவுடைமையைக் குறித்த மனப்பான்மை உலகில் உண்டாகா. இந்த மனப்

பான்மையை உலகம் அடைந்தாலொழிய, உலகம் சுகம் பெருது. இதற்கு முக்கியவழி என்னவெனில் யாவரும் இதனை அறிய பிரச்சாரம் செய்வதுதான். கலகம், குழப்பம் முதலிய அஸாந்த வழிகளால் உலகம் சுகமுறுமோவென்று கேட்பார்கள். உலகம் துக்கத்திலிருந்து மீளவேண்டுமானல், துக்கமேற் படும் காரணங்களைத் தெரிந்துகொள்ளல் அவசிய மாகும். இந்தத் துக்க நிவாரண மார்க்கத்தை யாவரும் தெரிந்து கொண்ட மாத்திரத்தாலேயே, வெகுவாகக் குழப்பங்கள் வேண்டாமற் போகும். ஆனல், பொருளுடையோர் லேசில் தாங்கள் கைப் பற்றியுள்ள பொருள்களைக் கைவிடச் சம்மதியார். இதற்கு என்ன வழி? ஒரு பகுதியார் தனி உடைமை களின் பேரில் அதிக வரி சுமத்தி, மெது மெதுவாய் அவைகளைப் பொதுவுடைமையாக்கிக் கொள்ள வேண்டும் என்கின்றனர்கள். அப்பொருள்களை விலைமதித்து, பொருளுடையோருக்கு விலைகொடுத்து வாங்கி, பொதுவுடைமை ஆக்கிக் கொள்ளலாம் என்று மற்றோர் பகுதியார் சொல்கின்றனர்கள். இது மிதவாதிகளுடைய அபிப்ராயம். ஆனல் இதற்குப் பொருளுடையோர் சம்மதம் வேண்டுமே, அதனை அவர்கள் கொடாவிடில் என்னவழி என்று அமித வாதிகள் கேட்கின்றனர்கள். தற்போது உலகிலுள்ள அரசாங்கங்கள் முழுமையும் சில பொருளுடையோர் ஆதிக்கத்தில் இருப்பதால், இந்த ஆதிக்கம், பலர் கையில் வரும்வரை என்ன செய்வது? அதுவரை பொதுவுடைமை ஞாலத்தை யாவரும் நன்கு தெரிந்துக் கொள்ளல் அவசிய மென்றே ஏறபடும். பழக்கத்தில் கொண்டு வரு

வதற்கு முன்பு அதன் சித்தாந்தங்களையும், கோட்பாடுகளையும் அதன் அனுஷ்டான பலனையும் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த ஞானத்தைப் பொது ஜனங்கள் பெறுவதற்கே இச்சிறு நூலை இயற்றியுள்ளோம். இதற்கு ஆதாரமாகிய நூல்களைக் கடையில் வரைந்துள்ளோம். இதற்குமேல் தெரிந்து கொள்ள வேண்டியவர்கள் பெரியோரைக் கொண்டு அந்நூலகளை மொழிபெயர்ககச்செய்து விஷய ஞானமடைவார்கள் என்று கோருகின்ருேம்.

## 2 பொதுவுடைமையும் தனிவுடைமையும்

நிலம், நீர், வீடு, மனை, பொன், வெள்ளி, கரி இரும்பு, மண்ணெண்ணெய், தொழிற்சாலை, ரயில், வியாபாரம, பாங்க் முதலிய பெரும பொருள்களும், ஸ்தாபனங்களும, தனிவுடைமையாகப் பாவிக்கப் பட்டு வருகின்றன. இவைகளை உலகில் சிறுபான்மையோர கைப்பற்றி ஆண்டு வருகின்றனர். ஆனல், இவைகளைப் பெரும்பான்யோரா செய் பொருளாக்கி வருகின்றனர். இவைகளைச் செய் பொருள்களாக்காவிடில், இவை எந்த உபயோகத் திற்கும் உதவா. இதுதான் தனிவுடைமையினுடைய முக்கிய லட்சணம.

## 3. பொதுவுடைமையும் பொதுஸ்தாபனங்களும்

தந்தி, தபால், புத்தகசாலை, நந்தவனம், கண் காட்சிச் சாலைகள், பொதுக் கட்டடங்கள், கல்விச் சாலைகள் முதலிய பொருள்களும், ஸ்தாபனங்களும் பொதுவுடைமைகளாகப் பாவிக்கப்பட்டு, சகலருக்கும் உபயோகமாகி வருகிறது. பலரும் அனு

பவிக்கத் தகுந்த குணத்தை வகித்துவருவதே பொது வுடைமையில் முக்கிய லட்சணமாகும்.

## 4. பொதுவுடைமையும், செல்வமும்

இவ்விரண்டு விதப்பொருள்களே செல்வமெனக் கருதபபடும். ஓர் ஊரிலுள்ள செல்வமானது இவ் விரண்டுவகைப் பொருள்களும் சேர்ந்தனவே. சிலருக்குச் சொந்தமென்று பொருள் மாத்திரம் செல்வமாகா. செல்வமென்றல் யாவருக்கும் பொது வானப் பொருள்கள். வாஸ்தவததில் எல்லா விளை பொருளும் செய்பொருளும் பொதுவுடைமை பொருளகளே. ஆனல், பல காரணங்களால் பல தனிப்பொருள்களாகவும், மற்றவை தனிப் பொருள்களாகவும், மதிக்கப்படடு வருகின்றன.

## 5. பொதுவுடைமையும் விளைபொருள்களும்

விளை பொருள் நிலத்தில் விளையும் தான்யம், நிலத்தில் வெட்டி எடுக்கும் உலோகம் முதலியவை விளைபொருள்கள எனப்படும். இந்தப் பொருள்களை விளைவிக்கும வரை, வெட்டியெடுக்கும் வரை இவை களுக்கு விலை இல்லை. மனிதன் கைப்பட்டாலொழிய இததியாதி பொருள்களுககு எந்த மதிப்பும் கிடையா. ஆதிமுதல இபபொருள்களைக் கோடானகோடி தொழிலாளிகள விளைவித்து, வெட்டி எடுத்தமை யால்தான் அவைகளுக்கு விலைமதிப்பு உண்டா யிற்று. உலகிலுள்ள இயற்கைப் பொருள்கள் யாவும, தொழிலாளிகளால், விளைபொருள்களாகவும் செயலபொருள்களாகவும உண்டாககப்பட்டு வரு

கின்றன. இவைகளுக்கு விலைமதிப்பு உண்டானதும் அந்தந்தத் தொழிலாளிகளாலேயே. ஆதலின் ஒரு தேசத்துச் செல்வம் யாவும், அத்தேசத்துத் தொழிலாளிகளின் கைகளாலும், மனத்தாலும் செய்யப் பட்ட பொருளாதலால் "சகல செல்வத்தையும் படைத்தவன் தொழிலாளி" என்று வழங்குகின்றார்கள்.)

## 6. பொதுவுடைமையும், முதலும், முதலாளியும்

"முதல்" என்றால் மூலாதாரப் பொருளெனப் படும். உலக செல்வத்தில் முதல் என்று கூறும் பொருளகள் ஒருவகைத்து. இந்த முதலைக்கொண்டு இன்னும் பல முதற்பொருள்களைச் செய்வதுண்டு. இவைகள் யாவும் "முதல்" என்று வழங்கப்படும். இவைகளாவன, கைஆயுதங்கள், தொழிற்சாலைகள், பல ஊர்களுக்குக் கொண்டு போகும கருவிகள், மற்றும பல பொருள்கள் முதலியன. செல்வத்தைக் கொண்டு போய் விநியோகப் படுத்தும கருவிகளாகிய கப்பல், சாமான்களைக் கொண்டு போகும் ரயில், பாங்கு முதலியவை; இப்பொருள்களைப் படைதது நடத்தும தொழிலாளிகள் இனிது வாழ வேணடின் வீடுகள், டிராமகள், பஸ்கள், வணடிகள், பிரயாணிகளைக கொண்டு போகும் ரயில்கள், கூத்து காட்சி ஸ்தாபனங்கள் முதலியவை; சகலருக்கும் கொடுக்கவேண்டிய பணம சம்பளம், கூலி முதலியன இத்தியாதி பொருள்கள் யாவும் முதலெனப்படும். இமமுதலைத் தற்போது சிலரே மிகுதியும் ஆண்டு அனுபவித்து வருகின்றனர். இச்சிலரே 'முதலாளி'

எனப்படுவர். இவர்கள், முதலைப்படைத்தவர்களாகா இவர்கள், முதலுக்குச் சொந்தக்காரர்களெனப்படு வர். இவர்களுககு ஓர் உரிமையுண்டு. அதாவது, முதலைச் சொந்தப்படுததிய நிமித்தமாக முதலமூலம் விளையும் லாபத்தையும், வட்டியையும் அடைகின்ற னர். உண்மையில இந்த லாபமும, வட்டியும் முதலைப் படைத்தவர்களாகிய, தொழிலாளர்களுக்குச் சேர வேண்டும். தற்கால பொருளாதார நிலைமையில் அவைகளைப் படைத்தவர்களாகிய தொழிலாளிகள் அனுபவிக்காமல் சொந்தக்காரர்களெனச் சொல்லித் திரியும முதலாளிகளால் ஆண்டு அனுபவித்து வரப்பட்டுள்ளன.

## முதலும் வாழ்க்கையும்

நல்வாழக்கைக்கு ஆதாரம் முதல். முதலின்றி, சமுக வாழக்கை நடவாது. முதலைக் கொணடு பல உபயோகமுள்ள பொருள்களை உண்டாக்கிக் கொள்ளலாம். நல்ல மாதிரியாக முதலை உபயோகப் படுத்துவோமாகில், நமது வாழ்க்கை யாவும் இனிது முடியும. ஆனல், முதலாளிகள் தங்களுக்கு ஆதாயம் கொடுக்கத்தக்க பொருள்களை மாத்திரம செய்து கொள்கின்றனர். எநதப் பொருளால் தனக்கு அதிக லாபம் வருமோ அந்தப் பொருள் களையே செய்து முடிததுக் கொள்கின்றனர். பலருக்கும் வேண்டிய பொருளகளைச் செய்வதில்லை. அப்படிச் செய்தாலும அவை லாபம் தனக்கு கொடாவிட்டால் அதை அழித்தாவது விடுகினருன். அல்லது செய்வதை நிறுதது விடுகின்ருன. அலலது

யாருக்கும் உதவாமல் நிறுத்திக் கொள்கின்றான். தற்போது உலகில் கோதுமை முதலிய திண்பண்டங்கள் மலிந்து கிடைக்கின்றன. ஆனால், கோடான கோடி மக்கள் வறுமையால் மடிகின்றனர். ஏன்? இவைகளுக்குச் சொந்தககாரனாகிய முதலாளிக்கு போதுமான லாபம் வராமையால், விநியோகத்திற்கு விடுவதை நிறுத்திக் கொள்கின்றான. சமூக வாழககைக்கு முககியமாக வேண்டிய பொருளகளை முதலாளி செய்வதில்லை. லாபமே அவனுடைய நோக்கமாகையால் லாபம் தரக்கூடிய பொருள்களே அவனுக்கு வேண்டும்.' இநதப் பொருளாதாரக் கேட்டால் உலகம் வாடி வதங்குகின்றது. நல்ல வீடு வாசல் இல்லாமல் கோடான கோடி மாந்தர்கள ஓலைக் குடிசையிலும், தெருக்களிலும உறங்குகின்றனர். கல் வீடுகளுக்கு மரமா இல்லை? கற்கலா இல்லை? இரும்பா இல்லை? எலலாம் இருந்தும் இத்தனை மக்கள் வழிவகையின்றித் திரிவானேன்? இவைகளை முதலாளிகளாக்கி கொண்டிருக்கின்றபடியால்தான் இவை பொதுவுடைமையான மாத்திரத்தில் அனைவரும இனிது வாழ முடியும். இத்தியாதி தனிப்பொருள்களை, அதிகார வர்க்கத்தினர், பொதுப்பொருளாக்கி விடுவார்களாகில, உலக தரித்திர மொழியுமென்பதற்குச் சந்தேகமில்லை. முதலில், சமூகச் சொததாய் கொண்டு வரும பட்சத்தில், ' சமூக வாழ்க்கைக்கு வேண்டிய உபயோகமாகும். "முதல" நமது வாழ்க்கைக்கு இன்றிமையாதது. "முதலாளி" யோ அனாவசியம். இதுதான் பொதுவுடைமையோர் வாதம்)

## 7. பொதுவுடைமையும், நிலமும், நீரும்.

நிலம், நீர் ஆதிகால பொதுவுடைமைகளில நிலமும், நீரும் முதன்மையானவை. நிலத்தையும் நீரையும் யாரும் சிருஷ்டி செய்தது கிடையாது. இவர்கள் (மனிதர்கள்) உலகில் தோன்றுவதற்கு முந்தியே இவை இரண்டும் இருந்து வந்தவை. முதலில், இப்பொருள் இரண்டினிடத்தே சகல செல்வமும், முதலும் உண்டாயின. ஆனல், தற்போது நிலச்சுவான்தார்களாகிய ஜமீன்தார்கள, மிராசுதாரர்கள், சுரோத்திரயம்தார்கள் முதலியவர்களிடம் கைப்பற்ருகி விட்டன. ஆதியில், பயிர் செய்தவனுக்கு அந்நிலமும் நீரும சொந்தமாகவே இருந்து வந்தன. பலர் கூடி நிலங்களை பயிர் செய்து அதன் பலனைச் சமமாக அனுபவித்தும் வந்தனர். தற்போதோ, உழுது பயிரிடுவோர் ஒருவர். அதன் பயனை ஏராளமாக அனுபவிப்போர் வேருருவர். இவர்கள்தாம தற்கால நிலச்சுவான்கள். இந்த நிலச்சுவான்கள் ஒரு காலத்தில், வேடுவராகவும், கொள்ளைக்காரர்களாகவும், அடிமைகளைக்கொண்டு வேலை வாங்குவோாகளாகவும, அயல் நாடுகளைக் கைப்பற்றுபவர்களாகவும் இருந்தார்கள். வரவர இவர்கள் ஆதிக்கம் வலுக்கவும், நிலச்சுவான்களாகவும்,பிரபுகளாகவும், அரசர்களாகவும் மாறுதல் அடைந்தனர்.

இவர்களுககுச் செலுத்தவேண்டிய வரி, சுஙகம், கட்டணம், வாரம, மிக அதிகம். இதனல் பயிர் செய்யும் குடிமக்களுக்குப் போதுமான உணவு கிடைப்பதில்லை. இதனறியும் பயிர் செய்ய வேணடிய

நிலங்களைக் காடு கரம்பாக விட்டு விடுகின்றார்கள். ஏரிகுளங்களை நன்றாக மாரமத்து செய்வதில்லை. இதனால நீர் வசதியிலலாமல் பல நிலங்கள பாழாய்க் கிடக்கின்றன. இவர்களில் பலர் பணததைப் பெருமை காடடுவதிலும, சிற்றினப வாழ்ககைகளிலும் டம்பத்திலும், வீண் ஆடமபரத்திலும் செலவிடுகின்றார்கள். வீடு சொந்தககாரர்கள் வாங்கும் குடிக் கூலிக்கு மட்டுக்கிடையாது. இவர்கள் அசட்டைத் தனத்தால், பலவிடுதிகள் பாழாய்க் கிடக்கின்றன. இவர்கள் சொந்தத்தில் இருந்து வரும் பல கிராமங்கள் அழுக்கும், நாகதாளியும் நிறைந்து கிடக்கின்றன. இதற்கு என்ன பரிகாரம் செய்வதென்று அதிகாரிகளுக்கே தெரியவில்லை. இவர்களைத் தங்கள் நிலங்களையும், வீடுகளையும் சுகாதார நிலைமையில் வைக்குபபடி செய்யவும முடியவிலலை. ஏனெனில, இவர்களே, கிராமங்களிலும, தாலுக்காக்களிலும், ஜில்லாக்களிலும் மிக ஆதிககம் உடையவர்களாகவும், அவ்விடங்களிலுள்ள அதிகார பொதுஸ்தாபனங்களில் அங்கத்தினராய் இருப்பதாலும் இவர்களை யாதும் செயய முடியவில்லை. இந்நிலைமை நீங்க வேண்டில் நிலச்சுவான்களிடமிருக்கும் நிலங்களைப் பொதுவுடைமையாகக கொண்டு வர வேண்டுமென பலர் வற்புறத்துகினறார்கள். பல தேசங்களில் நிலப் பொதுவுடைமை கையாளப்பட்டும் வருகின்றது; வற்புறுத்தப்படடும் இருக்கின்றது.

## 8. பொதுவுடைமையும், பொன், வெள்ளியும்.

பொன், வெள்ளி, நவரத்தினங்கள், ஆகிய சுரங்கங்களில் பலலாயிரம பேர் வேலை செய்கின்றார்கள்.

இவர்கள் சுரங்கங்களிலிருந்து வெளிக்கொண்டு வரும் பொருள்களின் விலைக்கு மதிப்பில்லை. ஆனால் இவர்கள் கூலியோ அற்பம், அரண்மனைகளில் துலங்கும் பொன், வெள்ளி ஆபரணங்களுக்கு விலை மதிக்க முடியாது. கோடான கோடி விலை மதிப்புள்ள நகைகள், பெட்டிகளில் தூங்குகின்றன. இவைகளையுடையோர்களுக்கு என்ன மனச்சாந்தியைக் கொடுக்கின்றனவோ அது தெரியவில்லை. இந்த உபயோகமில்லாப் பொருள்கள் உண்டாகக லட்சக்கணக்கானவர்கள உயிரை வளர்க்க இரவும் பகலும உழைக்கின்றார்கள். பொன் வெள்ளியை நல் உபயோகப்படுத்த வேண்டில் அவைகளைக் கொண்டு நகை செய்ய விடாமல், இலகுவில் மாறும் நாணயங்களாகச் செய்து வரலாம். பொன், வெள்ளி சீக்கிரத்தில் தேய்ந்து போகாதாகையால், நாணயங்களுக்கே உபயோகப் படுத்துவதுதான் சரியான பொருளாதாரமாகும். அழகிய நகைகளைக் காட்சிச் சாலைகளில் வைத்துச் சகலரும் பார்த்துக் களிக்கவும் செய்யலாம்.

## 9. பொதுவுடைமையும், வீடும், வாசலும்

நமது இந்திய தேசத்தில் குடிசை வீடுகளைத் தவிர மற்ற வீடுகளில் பெரும்பானமை சில நிலச்சுவான்தாரர்களுக்குச சொந்தமாக இருந்து வருகின்றன. இவ்விதயமாக உலக முழுதுமே, சிறசிலரே வீடுகளைக் கைப்பற்றியுள்ளார். தென்னிந்தியாவிலும, மற்றுமுள்ள மாகாணங்களிலும், குடிசைகள் கட்டியுளள குடியிருப்பு நிலங்கள், நிலச்சுவான் தாரர்களுக்குச் சொநதம். இவ்விதத் தனிச்சொத

தால், குடிக்கூலி விதித்து வாங்க நியாயமுண்டாகி றது. இந்தக் குடிக்கூலி வருஷா வருஷம் அதிகரித் துககொண்டே வருகிறது. வீட்டு வசதிகளை விருத்தி செய்து அதற்காகக் குடிக்கூலியை அதிகப்படுத்திய தென்றாலும், ஒருவித ஞாயமாகத் தோன்றும். அப் படிக்கு இல்லை. முன்னிருந்த வீடுகளுக்கு குடிக்கூலி அதிகப்படுத்தப்பட்டுவிட்டது. இதற்குக் காரணம் வேறு. பொது மக்களுடைய உழைப்பைககொண்டு அக்கம் பக்கங்களில் தொழிற்சாலையுண்டானாலும சரி, அவைகளில வேலை செய்ய நாட்டுப் புறங்களி லிருந்தோ அல்லது அயல் நாடுகளிலிருந்தோ, நகரங்களுக்கு அனேகர் வந்தாலும் சரி, அலலது ரயில், விளக்கு, ரோடுகள், நீர் முதலிய வசதிகள் உண்டானாலும் சரி, அல்லது பள்ளிக்கூடங்கள், கலாசாலைகள, நந்தவனங்கள், காட்சி சாலைகள ஏற் பட்டாலும் சரி, நிலவரியும், வீட்டு வாடகையும் உயர்த்தப்படுகிறது. நிலமுடையவனும், வீடு படைத்தவனும, ஒரு பைசா கூட மேற்போன்ற வசதிகளுக்குச்செலவு செய்யாவிடினும்,வரி வாடகை அதிகரித்தே வருகிறது. இது உலகிலுள்ள, அநீதங் களில் முதன்மையானதுதான். ஒருவித கஷ்டமும் படாமல், தனது சொத்தின் விலையையும் வாடகை யையும் அதிகரித்துக்கொண்டே வருங்காட்சி பல அககிரமங்களில் சிறந்ததாகும். இதனைக் கஷ்டப் படாத லாபமென்று, பொருளாதார நூல்களில் கூறுவர். இந்தக கஷ்டப்படாத லாபத்தைக் கணக் கெடுத்தால், கோடான கோடியாகும்.] தொழிலாளர் நெற்றிநீர்பட,வயிற்றுக்குப்போதுமான கூழ் கிடைக் காமல் வருந்தி, கஷ்டப்பட்டு ரயில்களையும், ரோடு

களையும், கல்விச்சாலைகளையும் மற்றுமுள்ள வசதி களையும பட்டணங்களில் உண்டாக்கி வைத்தால், அதன் பயனுகிய அதிகரித்து வரும் வரியையும், வாடகையும யாதொன்றும் செய்யாதவொருவன் வசூலித்துககொள்கிருன். இந்த கஷ்டப்படாத லாபம் நியாயமாகப் பார்க்கும் பட்சத்தில், பொது மககளைச் சேரவேண்டும். ஆனல், இதைச் சிலரே அனுபவித்து வருகின்ருர்கள். இந்த அநீதிக்கு விடை யாக, நிலம வீடு சொந்தக்காரர்கள் தங்கள் யுக்தி யும், புத்தியும் அபிவிருத்திகளில் செலுத்தும் காரணத்தால் இந்த லாபததை அடைகின்ருர்கள் என்று சொல்கின்ருர்கள். ஆனல் இவர்கள் "யுக் தியும், புத்தியும்" பந்தைய இடங்களிலும், வேட்டை இடங்களிலும், வீண் ஆடம்பரத்திலும் பார்க்கலாமே ஒழிய தொழில் நிலம், நீர், வீடு, நகர அபிவிருத்தி வசதிகளில் பார்ப்பது அரிது. இதறகு என்ன பரி காரம? எல்லா அபிவிருத்திகளும் பொது மக்களால் உண்டானபடியால் அவைகளின் பயனும் பொது மக்களைச் சேரவேண்டியதே. இந்தக் கஷ்டப்படா லாபத்தைப் பறிமுதல் செய்துகொள்ள வேண்டு மென்று சிலர் கூறுகின்றனர். சிலர் நிலம், நீர், வீடு வாசல்களைப்பொதுவுடைமைகளாக்க வேண்டுமென் கிருர்கள். இந்த இரண்டுவித பரிகாரங்களில், இவை களைப் பொதுவுடைமைகளாக்குவது சிறந்ததாகும். இதனல் நிலம், நீர், வீடு வாசல்களை அபிவிருத்தி செய்ய வேண்டியதற்கு மாத்திரம் வரி, குடிக்கூலிகளை வசூலிக்கலாம். அதைக்கொண்டே உன்னதமான வீடுகளையும், நந்தவனங்களையும் பொதுமககள் அனுப விக்கக் கட்டுவிக்கலாம். வசூலிக்கும் வரியும், குடிக்

கூலியும் தனி உடைமைக்காரர்களுடைய வீண் சுக் போக செலவுகளுக்குப் போகாமல், கஷ்டப்படும் பொதுமக்கள் இனிய உயிர் வாழ்வுக்கே செலவு செய்து வைக்கலாம்.

## 10. பொதுவுடைமையும், கரியும், இரும்பும்.

உயிருக்கு உணவு எப்படியோ, அவ்விதமே, மனிதர் போக்குவரத்துக்கு கரியும், இரும்பும் உபயோகமுள்ளது. கரியும், இருமபும் இன்றி தற்கால வாழ்வு நடக்காது. இவை இரண்டால் உலகில் போகும் கப்பல்களும், ரயில் வண்டிகளும், மின்சாரத்தந்திகளும், கைததொழிற்சாலைகளும நடத்தப்படுகின்றன. இவ்வித முக்கியப் பொருள களை அந்தந்த தேசங்களிலுள்ள முதலாளிகளே கையாண்டு வருகின்றனர். இசசிறுபான்மை யோருக்கே இவையனைத்தும் சொந்தம். இந்தச் சொந்தததால் அவைகளிலுணடாகும் லாபம் முழுமையும் அவர்களைச் சேருகிறது. இவ்வித சொந் தததால், இவர்களுக்கு அந்தந்த ஊர்களில் மிக்க ஆதிக்கமுண்டு. இந்த ஆதிககத்தைக்கொண்டு எஙகெங்கு கரியும், இரும்பும் உள்ளதோ அங்கெல் லாம் தங்கள் குணடு மருந்துகளை அனுப்பி அப்பிர தேசங்களைக் கைப்பற்றுகிறுர்கள். அமெரிக்க தேச முதலிய பிரதேசங்களில் இவர்களே சகல அரசியல் அதிகாரத்தையும் பெற்றுள்ளார்கள். இத்தியாதி தனி சொந்தத்தால், அயல் நாடுகளிலுளள நிலககரி சுரங்கங்களை, இரும்பு சுரங்கங்களைக் கைப்பற்ற வேண்டி வருகிறது. இதனுல், தத்தம் அரசுகளை போருக்குப்போகத் தூண்டுகின்றன. நேற்று நடந்த

மகாயுத்தம், முக்கியமாக ஸார், ரூர், மெஸபோ டோமியா, ஜர்மன், கீழ் ஆப்ரிக்கா, ஐரோப்பா விலுள்ள திரண்ட கொண்ட நிலக்கரி, இரும்பு, மண்ணெண்ணெய் முதலிய பொருள்களைக் கைவசப்படுத்துவதெற்கென அறிக மொத்தத்தில் இதனால், உலகிற்கு என்ன லாபமென்றால், இவை களின் முதலாளிகள், லாபங்களைச் சுமை சுமை யாகப் பெருக்கிக்கொள்ளவும், இந்தச் சுரங்கங் களில் வேலை செய்யும் கோடான கோடி தொழிலாளிகள் போதுமான உணவின்றி வதை யவுந்தான்! இதற்கு திருஷ்டாந்தம் வேண்டுமானால், உலகிலுள்ள ஸ்தாபனங்களில் நடக்கும் பல வேலை நிறுத்தங்களும், கதவடைப்புகளுமே போது மானவை. இந்த இயற்கைப் பொருள்களிலுள்ள தனி உடைமையின் கேட்டை விரித்து எழுத இச் சிறு நூலில் முடியாது. இருப்பினும் சுருக்கமாக உரைப்போம். முதலாவது இரும்பு, நிலக்கரி, மண் ணெண்ணெய் இம்மூன்றும் இயற்கைப் பொருள் களே அல்லாது செயற்கைப்பொருள்கள் அல்ல. ஆதலின் இப்பொருள்கள் பொதுப்பொருளாகத் தான் கருதல் வேண்டும்.

இரண்டாவது இப்பொருள்கள் தனிவுடைமை யானது முதல் இவைகளைச் சொந்தமாக்கும் நிமித் தம் உலகில் பலத்த போர்கள் உண்டாகி, பல கோடி உயிர் மாளநேரிட்டது. பல கோடி மதிப்புள்ள சொத்துகளும் நாசமாயின. மூன்றாவது இப்பொருள் களைச் சொந்தங்கொண்ட சிறுபான்மையோர், தங் கள் தேச அரசைத்தங்கள் மனம் போன வழி நடத்து கின்றார்கள். நான்காவது, இதில் உழைத்து வரும்

கோடான கோடி மாந்தர் வாழ்வுக்கு வேண்டிய உணவும், வசதியும் கிடைப்பதில்லை. சில சர்க்கார்களால், இந்த ஏழை மக்களைக் கவனிக்காதிருந்தால், இவர்களுடைய கதி அதோகதிதான். சுத்தம் சுகாதார விதிகளை அந்தந்த அரசுகள் உலக அபிப்பிராயத்திற்குப் பயந்து செய்து வருவதால், இந்தப் பல்லாயிரம் தொழிலாளர் தாழ்ந்த வாழ்வு சிறிது உயர்வுற்று வருகிறது.

ஐந்தாவது, இதன் முதலாளிகளின் முக்கிய நோக்கம், லாபமாதலால் இந்தப் பயன் பெருவாரியாக வரும் வரை, இவ்வேலைகளை நடத்துவார்கள். இல்லையேல், வேலையை நிறுத்திவிட்டு, கதவடைப்பு செய்து, அதில் வேலை செய்து சீவித்து வந்த தொழிலாளிகளைத் தெருவில் பிச்சையெடுத்துண்ண விட்டு விடுவார்கள். தனிவுடைமையில் கேட்டை விவரித்துச் சொல்லவும் வேண்டுமா? ஆருவது, உலகில் தற்போது காணப்படும் வேலை இல்லாத் திண்டாட்டக் காட்சி இந்தப்பெரும் பொருள்களிலுள்ள தனிவுடைமையாவென அறிக. இதனை வேலை இல்லாமையைக் குறித்து வரையும் சந்தர்ப்பத்தில் விவரித்து எழுதுவோம்.

## 11. பொதுவுடைமையும், போக்குவரத்தும்.

ரயில், கப்பல், படகு, ஆகாய ரதங்கள் முதலியவை போக்குவரத்துக்கு வேண்டிய சாதனமான கருவிகளாகும். விளைபொருள்களை ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குக் கொண்டு போகவும், மனிதர் போக்குவரத்துக்கு வேண்டிய சாதனங்களுக்கும்

ரயில் முதலிய கருவிகள் இன்றியமையாதனவாக இருந்து வருகின்றன. ஆதியில், சிறுபான்மை யோரே அந்தக்கால வண்டிகளில் யாத்திரை செய்து வந்தனர். சிறு சிறு கிராமங்களுக்கே சாமான்களை ஏத்திச்சென்றனர். தற்போதோ, கோடான கோடி ஜனங்கள், மலை, கடல், வனுந்திரம் தாண்டி போய் வருகின்றுர்கள். உலக முழுமையும் சாமான்களைக் கொண்டுபோகவும், மனிதர்கள் யாத்திரை செய்யவும் ரயில், கப்பல் முதலிய வசதிகள் வேண்டியதாய் விட்டன.

இந்தப் போக்குவரத்து வசதிகளில், கோடிக் கணக்கான தொழிலாளர்கள் தொழில் புரிந்து வருகின்றுர்கள். உலகப் பொருளாதார திட்டத்தில் இந்த போக்குவரத்துக்குரிய வசதிகள் முக்கியமான ஸ்தாபனங்களாய விட்டன. தற்போது ரயில், கப்பல், முதலியவைகளைச் சிலரே சொந்தமாக்கிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் இட்டது பிச்சை. போதுமான லாபம் வந்தால் ரயிலை நடத்துவார்கள். இல்லாவிடில், வேலை புரிந்துவரும் வேலை ஆள்களை வேலையினின்று தள்ளி விடுவாகள். ரயில் முதலாளிகளுக்கும், கப்பல் முதலாளிகளுக்கும் ஏராளமான லாபமுண்டு. அப்படி இருந்தும் எல்லா ரயில்களிலும் வேலை நிறுத்தம் அடிக்கடி உண்டாகின்றன. இந்த வசதிகளில் வேலை புரிந்தவர்கள் பதினுயிரக்கணக்காக வேலையற்று திகைத்து நிற்க வேண்டி நேரிடுகிறது.

இந்த வசதிகளில் சிக்கன திட்டமென்று அடிக்கடி வேலை செய்வோரை நிறுத்தி வருகிறுர்கள். இதற்கு

முக்கிய காரணம் முதலாளிகளுக்குப் போதுமான லாபமில்லாமையே. இவ்வித லாபமில்லாமைக்குக் காரணம் விளை பொருளுடையோருக்கு லாபமில்லாமையே. விளைபொருள் விலை குறைந்தால் அவைகளின் விநியோகம் மட்டுபபடுகின்றது. விநியோகம் மட்டுப்பட்டால் ரயில் லாபத்தில் குறைவு ஏற்படுகிறது. இவ்விதமாக ஒன்றுக்கொன்று நெருங்கியுள்ள சமபந்தத்தால் இங்நிலைமை உண்டானல், மொத்தத்தில் தொழிலாளி தலையில் வந்து விடிகிறது. ரயில், கப்பல் முதலிய போக்குவரத்துக்குரிய கருவிகளில "பூம், பூம்" என்று சொலலும் அதிக லாபமுண்டாகும்போது, தொழிலாளிக்கு அதிக சம்பளமோ, கூலியோ கிடைப்பதில்லை. எல்லா லாபமும, முதலாளிகளுக்கே போய்ச்சேரும். ஆனல், நஷ்டம் வருங்காலை கஷ்டப்படுகின்ற தொழிலாளியே அந்த நஷ்டததிற்குப் பொறுப்பாளியாய் செய்கின்ருர்கள். இது என்ன நீதி?

நீதி கிடைக்க வேண்டுமானல், இந்த முதலாளி திட்டத்தை மாற்ற வேண்டும. இநத முதலாளி திட்டமாகிய தனிபபொருளுடைமையால் துறைமுக வேலைக்காரர்களும, ரயிலவே வேலைககாரசளும் அவர்கள் மூலமாக உலக முழுமையும அடுதது அடுதது கஷ்டப்பட வேண்டி வருகிறது. நமது தென இந்திய ரயிலவேயில் நிகழ்ந்த அக்கிரமத்தால் இநத மாகாணத்திற்கு ஏற்பட்ட கஷ்டங்களைச் சிநதிக்கவும். இனறைக்கும பல இந்திய ரயில்களில் சிக்கனத்திட்டம பதிளுயிரக கணககான தொழிலாளிகளுடைய சீவனததை ஒழிககப்பார்க்கின்றது.

இதற்கும் பரிகாரம்வொன்றே உளது. கப்பல்கள், துறைமுகம், ரயில்வேக்கள், முதலிய போக்குவரத்துக்குரிய ஸ்தாபனங்களைப் பொதுவாக செய்துவிட வேண்டும் இந்தப் பெரும் வேலைகளைத் தனிவுடைமைகளாகப்பார்த்து வருவதில்,தொழிலாளிக்குத் தங்கள் வேலை நிச்சயமில்லாமல் போகின்றது, பொது ஜனங்களுக்குப் பிரயாணச் செலவும், சரக்கு விகிதமும் அதிகமாய்க் கொண்டே வருகின்றன. வெவ்வேறு கம்பெனிகளின் போட்டியால் மிகப் பொது நஷ்டம் நேரிடுகின்றது. இவ்வித நஷ்டத்தை விளைவிக்கும் திட்டத்தை மாற்றுவதுதான் சிறந்த புத்திசாலித்தனமாகும். இந்தப் போக்குவரததுக்குரிய ஸ்தாபனங்களை, பொதுவுடைமைகளாக மாற்றிய மாத்திரத்தில், அதன் பலன்களாகிய வேலை நிச்சயம், வேலை நிறுத்தமின்மை, கதவடைப்பின்மை, சிக்கனத் திட்டமின்மை, பிரயாணச்செலவும், சரக்கின் விகிதச் செலவும் குறைவுபடும். அதிகப் பொது ஆதாயங்களும் ஏற்படும். இதனுல் விளையும் லாபங்களைக் கொண்டு தொழிலாளர் நன்மைக்கும், பொது ஜனங்களின் நன்மைக்கும் பயன்படச் செய்யக்கூடும.

## 12. பொதுவுடைமையும், தொழிற்சாலையும்.

தொழிற்சாலைகள் பலவுள. உலகில் தற்போது ரயில், சப்பல் முதலியவைகளுக்கு வேண்டிய தொழிற்சாலைகள், நெசவுத் தொழிலுக்குரிய தொழிற்சாலைகள், ஆயுதங்கள் செய்யும தொழிற்சாலைகள முக்கியமானவை. இந்தத் தொழிற்சாலைகளின் நிலைமையையும், அவைகளில் வேலை செய்வோரின் நிலை

மையும் மிக அபாய நிலைமையில் இருந்து வருகின்றன. உலக முழுமையுமுள்ள தொழிற சாலைகள் தற்போது மூடப்பட்டு இருக்கின்றன. கோடிக்கணககாக அவைகளில் தொழில் புரிந்து வந்தவர்களுககு வேலை இல்லை. வேலை இல்லாமை யால், அவர்கள் குடும்பங்கள் பசிபபிணியால் வாடு கின்றன. இன்றைய தினத்தில, உலகிலுள்ள நிலை மையை நோக்கினல், மனந்திகிலடைகின்றது. உலக முழுமையும் செய்யப்படும பொருளும, செய் வித்த பொருளும ஏராளமாய்க் கிடந்துவர, உலகம இல்லாமையால வருந்துவானேன்?

ஆதிகாலத்தில், தச்சன், கருமான், நெசவுத் தொழிலாளி முதலிய முக்கிய தொழில் புரிந்து வந்த வர்கள் யாவரும் தனித்தனியே தங்கள் சிறு சிறு பட்டறைகளிலும், வீடுகளிலும் வேலை செய்து பிழைத்து வந்தார்கள். ஆதிகாலங்களில் பொது ஜனங்களும் சிறு சிறு கிராமங்களில் தங்களுககு வேண்டிய சாமான்ய பொருள்களைக் கிடைக்கப் பெற்று வாழ்ந்து வந்தார்கள். தச்சனுக்கு வேண்டிய ஆயுதங்கள் அவனுடையதாய் இருந்து வந்தது. கருமானுக்கு வேணடிய ஆயுதங்களும் அவனுடை யதே. அககாலத் தொழிலாளிகள் தங்கள் ஆயுதங் களுக்குச் சொந்தக்காரர்களாய் இருந்து வந்ததோடு, தங்கள் வேலைக்கும் சொந்தக்காரர்களாய் இருந்து வந்தார்கள். அவர்களைத் தள்ளுவார் இல்லை. 'வேலை யில்லை, வீடுபோய்ச் சேருங்கள்' என்று சொல்வாரும் இல்லை. இந்நிலைமையில் உலக தொழில் நிலைமை இருந்து வந்தது. ஆனல் தற்போதோ ஆயிரக்

கணக்கான தொழிலாளிகள் ஒன்று சேர்ந்து செய்யும் கருமார் பட்டறைகளும், தச்சுப்பட்டறைகளும் நெசவுக்கூடப் பட்டறைகளும், இரும்பு கணுடி பட்டறைகளும் நெசவுபட்டறைகளும் மற்றும் பலவித பட்டறைகளும் தோன்றியுள்ளன. இந்தப் பட்டறைகளும் அவைகளுக்குரிய கருவிகளும அவைகளில் வேலை செய்வோருக்கு சொந்தமில்லை. அவைகளில் வேலை செய்யவும், அவர்களுக்கு உரிமை இல்லை. அவைகளைச் சொந்தமென்று உடையவன்தான் முதலாளி எனப்படுவோன். இவைகளில வேலைசெய்து வரும் தொழிலாளிகளின் உடலும், உயிரும் இவைகளின் முதலாளி வசத்தில் இருப்பதாகச் சொல்லலாம். இதுதான் தற்கால தொழிற்சாலைகளினுடையவும, அதில் தொழில் புரிவோர்களினுடையவும நிலைமையேயென அறிக. முதலாளி தொழிற்சாலைகளைத் தனது இஷ்டம்போல் திறக்கவும், தனது இஷ்டமபோல் மூடியும விடலாம். அதில் வேலை புரிவோரை இஷ்டமிருநதால் வைத்துக் கொளளலாம். இல்லாவிடில் வீட்டுக்குப்போவென்று அனுப்பிவிடலாம. அவன் இஷ்டப்பட்ட கூலிதான பெறறுககொள்ள வேண்டும. இல்லாவிடில் வேலை இல்லாமல திண்டாடவேண்டும. கூலி எவ்வளவு குறைந்திருந்தாலும் அந்தக் குறைந்த கூலிக்கும் வேணடியபேர் கிடைக்கின்றார்கள். கொடுக்கும் கூலி ஒருவனுடைய வாழ்வுககுப் போதுமானதா வென்றுவிசாரிப்பது முதலாளியின் கடமை அனறு. முதலாளிக்கு வேண்டியது லாபமொன்றே. எவ்வளவு கூலி குறைந்தாலும அவ்வளவும அவனுககு லாபமே. இதுதான் தறகாலத் தொழிற்சாலைகளுக்

கும் தொழிலாளிகளுக்குமுள்ள சம்பந்தம். இது தான் முதலாளிகளுக்கும், தொழிலாளிகளுககு முள்ள ஒப்பந்தம்.

இந்தச் சம்பந்த ஒப்பந்த கடூரத்தைத் தொழிலாளி களின முயற்சியால் சிறிது தணிவு செய்துகொண்டு வந்தபோதிலும் பொதுவாக இந்த நிலைமையிலேயே உலகெங்கும கிடந்து வருகின்றன. இந்த சம்பந்த ஒப்பந்தக் கேட்டால விளையும தீமைகளை இங்கு சுருங்க உரைக்கலாம்.

சிறு குழந்தைகளைகொண்டு தொழிற்சாலை களை நடத்த நேரிட்டது. பெண்கள் இரவும பகலும் தொழில புரிந்துவந்தனர். ஓய்வு இன்றி வார முழுதும் தொழிலாளர் வேலை செயய வேணடி வந்தது. இவ்வளவு கணக்கில்லா நேரம் தொழில் செயது வயிற்றுககுப் போதுமான உணவு கிடைதத லரிது. தொழில புரியும் உரிமை இல்லாமையால, பல ஆயிரமபேர் வேலை இல்லாமல் திணடாட நேரிட்டது. தொழிலாளர் வசிககுமிடஙகளில் யாரும் கவனிததார்கள் இல்லை. தொழிற்சாலைகள் அதிகரிகக, அதிகரிககக் கிராமவாசிகள பட்டணங் களுககு வரத்தலைப்பட்டனர். வந்தவர்கள் கண்ட விடங்களில தங்கினார்கள். குடிசைகளும, சிறு வீடு களும நிறைந்தன. அதன சொநதககாரர்களும் குடிக்கூலியை உயர்த்தினார்கள். கூலி போதாமை ஒரு பக்கம் இருகக, குடிககூலி இன்னொரு பககம் அதிகரித்துவர, சில காலஙகளில் வேலை இல்லாமை யும் பீடிகக, இந்த பரிதாபகரமான நிலைமையில் இருந்து வருகின்றான் நமது தொழிலாளி. ஆனால முதலாளிகளோ வேண்டிய ஆள்கள குறைநத கூலிக்கு அகப்பட்டு வந்தார்கள். அதனால் மிதமிஞ் சிய லாபம் கிடைத்து வந்தது.

# 4

# பாங்கிகளும் அதன் கேடும்

பாங்கிகளால் விளையும் கெடுதி பலவுண்டு. சில வேளையில் தொழிற்சாலைகளை நடத்தி வரும் முதலாளிகளுக்குக கடன் கொடுப்பதை நிறுத்தி விடுகின்றன. அதனால், தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. அதனால அந்தத் தொழிற்சாலையில வேலை செய்யும் தொழிலாளிகளுகக வேலையில்லாமல் போகினறது. சில பாங்குகள் அதிக வட்டிக்கு ஆசைப்பட்டு உபயோகமற்ற செக்யூரிட்டி பேரில் கடன் கொடுக்கின்றன. இத்தியாதி செக்யூரிட்டிகள் விலை சில காலத்தில் குறைவடைகின்றன. செக்யூரிட்டிகள் வாங்குவார் இல்லாமல போகும்காலை பாங்குகள் முறிகினறன. அதனால் பல்லாயிரம் ஏழைக் குடும்பங்கள, நாசமாய் விடுகின்றன. சென்னை நகரில் அர்பத்நட் பாங்கி முறிந்த விஷயத்தையும் பொது மக்களுக்குணடாகிய துனபத்தையும இந்த சந்தர்ப்பத்தில கவனிககப்பாலது.

தற்காலத்தில் தனித்தனியாக இருந்த பாங்கிகள் ஒன்றுகூடி இவ்விதமாக ஒன்றுகூடிய லாபத்தை

அதிகமாக்க முயலுகின்றன. பாங்குகளுக்கு 'கம் பைன்', "கார்டல", "டிரஸ்டு" என்று பெயர் வழங்கும். இப்புதிய கூட்டுறவால் விளையும் கேட்டைச் சொலல முடியாது. இந்த டிரஸ்டுகளால் உலகத் தொழில் முழுதும் இரண்டு மூன்று முதலாளிகளின கைகளில் வந்து விடும் போலும்! தற்போதோ இந்தக் கார்டல்கள் இடடதுசட்டமாய் இருககின்றது. கடன் கொடுததாலும் கொடுப்பார்கள். கொடா விட்டாலும் அவர்கள இஷ்டம். வட்டியை உயர்த்தினாலும் உயர்த்துவார்கள, தாழ்த்தினாலும் தாழ்த்துவார்கள். இவர்களால உலகததிலுள்ள தொழிற்சாலைகள் படும் பாட்டையும கேட்டையும் கேட்க வேண்டுமா? தங்களுக்கு வேண்டிய தொழிற்சாலைகளுக்கு மாத்திரம கடன் கொடுக்கின்றார்கள்; அதனால் பணமிலலாத தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. அதில் தொழில் புரிநது வந்த தொழிலாளர் தெருவில போக வேணடி நேரிடுகிறது. பாங்கிக்குப் பாங்கி போட்டியில்லாமையால் இந்த ஒற்றுமையான பாங்கி ஏகாதிபததியத்தை அடைந்து கேட்ட வட்டியை வாங்கச் சக்தி பெறுகிறது. வட்டி அதிகமாகக் கொடுத்து வாங்கிய முதலாளிகள், தொழிலாளர் சம்பளத்தைக் குறைசகத தலைப்படுகிறார்கள். ஏனெனில தாங்கள் வாங்கும் கடனுககு வட்டி அதிகம் கொடுப்பதால் அநத அதிக வட்டியைத் தங்கள லாபத்திலிருந்து கொடுக்க வேணடுமாகையால, அதன வடடியைத் தொழிலாளி கூலியிலிருந்து பிடித்துச சாபபடுத்திககொள்ளுகின்றார்கள். வட்டி அதிகமாகக கொடுததாலும, குறைவாகக் கொடுததாலும் எலலா நஷ்டமும் தொழி

ளாளி வயிற்றை அடித்தே சரிப்படுத்திக் கொள்ள வேண்டும். தொழிலாளி எப்படி கெட்டாலும் முதலாளிக்கு வரும் லாபம் வந்து கொண்டே இருக்கின்றது. இவை தாம் தற்கால முதலாளிகள் நடத்தும் பாங்குகளால் உலகிற்கு நேரிடும் கேடு. இந்தக் கேடுகளை விட அதிகமான கேடு விளைந்து கொண்டே வருகிறது. இதனை முதலாளிகள் கவனிப்பதில்லை. தொழிலாளிக்கு வரும்படி குறைந்து கொண்டே வந்தால், உண்டாகும் பொருள்களை வாங்குவோர் இல்லாமல் போகின்றது. வாங்குவோர் குறைந்தால், உண்டாகும் பொருள்கள மலிவு அடைகின்றது. உலகில் "ஸ்லம்பு" என்ற, அதாவது உண்டாயிருக்கும் பொருள்களை விற்க வழியிலலாத காட்சி, உண்டாகிறது. இந்த நிலைமைதான் இன்று உலகம் அடைந்திருககின்றது. எங்கும் தொழிற்சாலைகள் சாத்தப்படுகின்றன. உண்டான பொருள்கள் குவிந்து கிடக்கின்றன. அவைகளை யாரும் வாங்குவாரில்லை. விற்பதற்கும் வழி இலலை. பசியும், பிணியும உலகைப்பிடித்து ஆட்டுகிறது. இந்தத் துர்ப்பாக்கிய நிலைக்குத்தான் முதலாளித்துவம் உலகைக் கொண்டு வநதிருக்கிறது. இந்தக் கேட்டிலிருந்து உலகம் மீள, உலக முதலாளிகளும், அதிகாரிகளும், பகீரதப்பிரயத்தனம் செய்து வருகின்றார்கள். இநத ஆபத்து எவ்விதம் முடியுமோ - தெரியவில்லை? ஒரு வேளை இந்த அகோர சமபவததிலிருந்து உலகை மீடக ஒரு மகா யுததததை முதலாளிகள் கிளபபி விடுவார்களோ, தெரியவிலலை? மனிதர் சீரடைய வேண்டுமானல் உலகம் முதலாளித்துவப் படையிலிருநது ஒழிநது தொழி

லாளர் தத்துவ தர்மத்தில் வரவேண்டும். உலகம் பொதுப்பொருளுடைமையால்தான் நிலக்க வேண்டும். இல்லேயேல், அது ஏற்படும்வரை உலகம் பாதிக்கப்பட்டு உழன்று வருமெனபதற்கு சந்தேகமேயில்லை. பொதுப்பொருளுடைமைக்கு உலகப் பொருள்களை, மாற்றி, தாங்களும் சீரடைய வேண்டியது தொழிலாளிகளின் முதற் கடமையாகும்.

## பொதுவுடைமையும் கடன்களும் (Public Debt)

ராஜாங்கப் பொதுக் கடன் அதாவது அரசை நடத்த வேண்டி வாங்கும் கடன்களாகும். அரசும் முதலாளித்துவத்திலிருந்து வருவதால் அவர்கள் வாங்கும் கடன்களும் அவர்கள் ஆதிக்கத்திலிருக்கும் வரை நீடித்தே வரும். இதற்குத் திருஷ்டாந்தம் வேண்டுமானுல், நமமை அரசாளும் பிரிட்டிஷ் துரைத்தனத்திற்கு 10,000 கோடி தொகை கடன் ஏற்பட்டிருப்பதை எடுத்துக்கொள்ளலாம். இதற்கு வட்டி மாத்திரம் 600 கோடி வருஷா வருஷம கட்டி வருகினருர்கள். இந்த 10,000 கோடி கடனில் பெருத்த தொகை முக்கியமாக முதலாளிகளே கொடுத்திருக்கின்ருர்கள. இதற்குக் கொடுத்து வரும் 1000 கோடி தொகை வட்டியையும் இந்த முதலாளிகளே அடைகின்ருர்கள். இந்த "பப்ளிக் டெட்ட்" என்று கூறும் 10.000 கோடியும், அதற்கு வருஷா வருஷம் அரசாங்கத்தார் கட்டி வரும் 1000 கோடியும் எங்கிருந்து வருகின்றது? தொழிலாளிகள் செய்து வரும் பல்வேறு தொழில்கள் மூலமாக வரும் லாபத்திலிருந்து, இந்த மொத்தக்கடன் 10,000

கோடிக்காகக் கொடுத்திருப்பதோடு வருஷா வருஷம் கட்டி வரும் 1000 கோடி அவ்வகை லாபத்திலிருந்தேயென அறிக. சிற்சில வருஷங்களில் சர்க்கார் கடன் வாங்குகிறார்கள். சில வருஷங்களிலேயே லாபம் வருகிறது. இதே பிரகாரம் வட்டிக்கு வட்டியாக உலகப் பொதுஜனங்களின் பேரில் கோடான கோடி கடன் ஏற்பட்டு ஏழைத் தொழிலாளிகளும், ஏழைப் பொதுஜனங்களும் உழைத்துக் கடனும், கடனுக்கு வட்டி சிலருக்குக் கொடுக்க நேரிடுகிறது. இந்த அநீதியை விட உலகில் வேறு ஏதாகினும் உளதோ? இந்த அகோர ஏற்பாடும் முதலாளித்துவத்தைத் தொடர்ந்தே வருகிறது. இதுவும் தனிவுடைமையால் விளையும கேடே. இவ்விதமாகப் பொதுச்சடன் உயர்ந்துகொண்டே போனால் எந்தக் காலத்தில் உலகக் கடனிலிருந்து மீளும்? இதனைச் சிந்திக்கப் பயமுண்டாகின்றது. இந்த உலகப் பொதுக் கடனிலிருந்து உலகை மீட்க, வருமான மேதாவிகள் நடுக்கமடைகிறார்கள். இந்த உலகக் கடனைத் தீர்க்கப் பல வழிகளிலும் யோசனைகளும் செய்து வருகின்றார்கள். முதல் வழியொன்றை அந்தந்த அரசியல்கள் கையாண்டு வருகின்றன. "ஸிங்கிங் பண்டு" ஒன்று வருஷா வருஷம் பெறும் வருமானங்களிலிருந்து எடுத்து, பழைய கடன்களுக்குக் கொடுத்து வருகின்றார்கள். ஆனால் ஒரு பழைய கடன் தீருவதற்குள் புதுக்கடன் ஏற்பட்டு விடுகிறது. சிற்சில வேளையில ஸிங்கிங் பண்டிலிருந்து வரும் வருமானங்களைச் செலவுகளுக்குப் போதாமல் செலவிடுகின்றார்கள். தற்காலத்திய பழக்கத்தில் வரும் இம்முறைகளால் பொதுக்கடன்

வொழிந்தபாடில்லே. சில மிதவாத பொதுவுடைமையோர், வேறு செலவுகளேச் செய்து வருகின்ருர்கள். இந்தக் கூட்டத்தார் தங்கள் மிதவாதக் கருத்துகளின்படி மெது மெதுவாக் கடன்களே நிவர்த்திக்கலாமென்கிருர்கள். வழியாவது "அனுஏர்ண்டு இன்கிரமெண்ட்" (Unearned increment) என்ற லாபத்தை அதாவது, சொந்தக்காராகள கஷ்டமில்லாமல் தங்கள் நிலம் வீடு, வாசல் முதலிய பொருள்களின் மேல் வருஷா வருஷம் உயர்ந்து கொண்டு வரும் அதிக விலேயைப் பறிமுதல் செய்து அதனுல் கடன்களேத் தீர்தது விடலாமென்பது ஒரு யூகம. மற்ெருரு யூகம் என்னவெனில் "டெத் டூடி" (Death Duty) என்று வழங்தம் இறந்தவருடைய சொத்தின்பேரில் தற்போதிருந்துவருவதை விட இன்னும் அதிகம் (வரி) விதித்து அதன் மூலமாக வசூலித்து வரும் வரிமையக்கொண்டு பொதுக்கடன்களேத் தீரத்துவிடலாமென்பது. மற்ெருன்று இதற்குக் காரணம என்ன சொல்கிருர்கள் என்ருல், சொதததைச் சேர்த்தவர்களுக்கு அநத சொத்துக்கு உறவினரையே ஒரு தொழில கஷ்டமும் படாத அவர் சங்கதிக்கு என்ற உரிமை என்பதாம்? முன்கூறிய "காபிடல் லெவி" அதாவது "முதல்மேல் வரி"யால் பொதுக்கடன்களேத் தீர்க்கலாம் என்பது மற்ெருரு யூகம். ஆனுல் தீராலோசிகரும் வேளேயில் இநத வழிகள் யாவும், அரசியல் மிதவாத கோஷ்டியாரின் கையில் வந்தால மாத்திரம் முடியுமேயொழிய, முதலாளித்துவம் அரசியல் நடத்தும்வரை ஒன்றும் நடவா. அமிதவாதிகளுடைய விசாலமான முடிவு என்னவெனில், முதலாவது அரசியல் திட்டம்,

இன்றைய நிகழ்ச்சியிலிருந்து, வரும், முதலாளித் துவததிலிருந்து, பொதுவுடைமைத் தத்துவமாக மாறவேண்டும். அவ்விதம மாறியவுடன், பொதுக் கடன்களை ரத்துச் செய்து விடுவதுதான் லேசான மார்க்கமென்பார். இவர்கள் கூறும நியாயமென்ன வெனில் தற்கால முதலாளிகள் அனுபவித்து வரும் வருமானங்கள் தங்கள் உழைப்பால் வந்ததல்ல. பிரஞ்சுக்கார புரூதான் சொல்லியவாறு, "எல்லாச் சொத்தும் ஆதியில் திருடிய சொத்துக்களே. ஆதலின் திருமபவும் அவர்களிடமிருந்து எடுத்துக் கொண்டால் பாதகமில்லை" என்பார. இவ்விதமாகப் பொதுக் கடன்களை ரத்துச் செய்து விடுவதற்கு யாவருக்கும் பொருந்திய நியாயமென்னவெனில் தான் சமபாதித்த சொத்து தனது கஷ்டத்தால் சம்பாத்தியம் செய்வதாக வைத்துக்கொண்டாலும், கஷ்டப்படாத தனது சந்ததியாருக்கு ஏன் அந்தச் சொத்துக்கள் போகவேண்டுமென்பதுதான் - இது தான் பொது தர்மஞாயமென்னலாம். இநத ஞாயப் படியே பொதுக்கடன்களைப் பொது ஜனங்கள் ரத்து செய்து விடலாமென்பார் பொதுவுடைமைக் கோஷ்டியார்.

இன்னொரு ஞாயமுண்டு. கடைமுறையில் புஸ்தகங்களையாவது, சித்திரப்பதுமைகளையாவது படைத்தவனும் அவன் சநததியாரும் சில வருஷங் கள் வரைதான் அவைகளின் லாபத்தை அடைய லாம். குறித்துள்ள காலம் பிறகு, அநதச் சொத்துக் களிலுள்ள அக்குபாத்தியதை பொது ஜனங்களைச் சேருகிறபடியால், அதே மாதிரி, முதலாளிகள்

கொடுத்திருக்கும் கடனும் அதன் வட்டியும் சில வருஷங்கள் வரை கடனைக் கொடுத்தவனும், அவன் சந்ததியாரும் அனுபவித்த பிறகு பொதுமக்களுக்குச் சேருமென்று ஏன் விதிக்கக்கூடாது என்பார் பொதுவுடைமையார்./

## பொதுவுடைமையும், பொதுவரிகளும்

ராஜாங்கம் நடப்பதற்குப் பொதுவாக வருமானம் வேண்டியதே. அரசியலை நடத்த அனேக சிப்பந்திகளும், சேவகரும், ராணுவமும் வேண்டியதாலும், சமூக வாழ்க்கைக்குப் பல பொது வேலைகளையும் ஸ்தாபனங்களையும் அமைக்க வேணடியதாதலாலும், இவைகளை ஆதரிக்கவும், செவ்வனே செய்து வரவும் செலவுக்குப் பணம் வேண்டியபடியால் அதனைப் பொது ஜனங்களின் வருமானத்திலிருந்து வசூலிக்க வேண்டியது அவசியமென்பதை யாவரும் ஒத்துக் கொள்ள வேண்டியதே. ஆனால் பொது வேலைகளுக்கு வேண்டிய வருமானத்தை வசூலிக்கும் முறைதான் தற்கால ராஜாங்கங்களில் தகுதி அற்ற முறையாகும். தற்காலங்களில் வரி வசூலிக்கும் முறை, சில நேர்முகமாகவும், பல நேர் அல்லாததாகவும் இருக்கின்றன. சில நேர்முகமாக விதிக்கும் வரி பணககாரர்களிடம் வசூலிக்கப்படுகிறது. நில வரி, நீர் வரி; வருமான வரி இவை மூன்றும் முக்கியமான வரிகளாகும். இவைகளை நியாயமாக வசூலிப்பது ஞாயமே. ஆனால் நேர்முகமல்லாத வரிகள் தாம் அநியாய வரி என்று கூறுவர். உணவு, ஆடை, வீடு முதலிய உயிர் வாழ வேண்டிய பொருள்களின்

பேரில் வரிகளை விதித்து வசூலிப்பதுதான் தற்கால அக்கிரமங்களில் பெருதததாகும். அதயாவசியமான தானியம், ஆடை, சர்ககரை, ஸ்டாமபு, மரங்கள், தீக்குசசி, யாததிரை, மருந்து, தேயிலை, மண்ணெண்ணெய் முதலிய பொருளகளின்மீது வரிகளைச் சுமத்தி எளியவர்கள் அவைகளை வாங்கக்கூடாமையாகச் செய்து வருவது பெருத்த அநீதி. அறிவை விசாலப்படுததக் கூடிய பள்ளிக்கூடங்களிலும், கலாசாலைகளிலும்,கூத்து மேடைகளிலும், காட்சிச் சாலைகளிலும் வரி விதித்து வாங்குவதும் அநீதியே. பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் படிக்கச் செல்வதற்கு மாணுக்கரிடம சம்பளம் வாங்குவது மனிதருக்குள அடாத காரியமாகும். குழந்தைகளையும பேசக் கற்றுக்கொடுக்கக் கூலிகேட்கும் தாய் மனுஷி என்று சொல்ல நா எழாது. அது போலவே பிளளைகளுக்கு அறிவை வளர்ககக் கூலி கேட்கும் ராஜாங்கம் மனித ராஜாங்கம் என்று அழைப்பதற்குத் தகுதி அற்றதென்றே சொல்ல வேணடும்.

## பொதுவுடைமையும், உணவு வரியும்

உணவுப் பொருள்களின் மேல் வரி சுமத்துவது ஏழைகள் உணவைக் கொள்ளை கொளவது போலாம். கல்வி கற்பதற்குச் சம்பளம் வசூலிப்பதும் அறிவைக்கொல்வதற்குச் சமமானதாகும். இவ்வரிகளை முற்றிலும் ஒழித்துவிட வேண்டும். ஆனல் அரசாங்கம எப்படி நடப்பதென்பார்கள்? ஞாயமான வரிகளை வசூலிக்கப் பல ஞாயமான

துறைகள் இருக்கின்றன. அவ்வித இலாக்காக்கள் மூலமாக வரிகளை விதிக்கும் பட்சத்தில் யாருக்கும் பாதகமும் இல்லை. கஷ்டமும் இல்லை. பொது ஜனங்களுக்கும் யாதொரு குறையுமில்லை. அவை களாவன: வருமான வரிகளை அதிகப்படுத்த வேண்டும். இறந்த பிறகு அவர்கள் சந்ததியார் அடையும் ஆஸ்திபாஸ்தியின் பேரில் வரிகளை வசூலிக்க வேண்டும். கஷ்டப்படாமலே வரும் வருமானங்களின் பேரில் வரிகளைச் சுமத்தி வசூலிக் கவும் வேண்டும். "காபிடல் லெவி" என்று கூறும் "முதல் மேல் வரி"யும் போட வேண்டும். இந்நால் வகை வழிகளால் வரிகளைச் சுமத்தித் தகுதியாக வசூலிக்கும் பட்சத்தில் அரசியலை நடத்துவதற்கும், சமூக வாழ்க்கைக்கு வேண்டிய பற்பல ஸ்தா பனங்களை ஸ்தாபிப்பதற்கும், அறிவை விசாலப் படுத்துவதற்கும போதுமான பணத்தை வசூலிப்ப தோடு, இன்னும் பல்வேறு ஸ்தாபனங்களைக் கொண்டு பொதுமக்களைப் பசியாற உண்ணச் செய்வதோடு அவர்களின் வாழ்க்கையையும் மேம் படுத்தலாம். அரசர்களும், குடிகளும், முதலாளி களும், தொழிலாளிகளும், மகராஜாக்களும், ஏழை களும் சமமாகச் சுகித்து வாழ இடமுண்டு. அப்படிச் செய்யாமல் ஏன் தனி வருமானங்களைப் பம்பைக்கும், பேயிக்கும், பரததையர்கரும், கள்ளுக்கும், சூள் ளுக்கும், வம்புககும், தும்புக்கும் வீணே செலவாகும் படி விடவேண்டும்? மேற்சொன்ன வழிகளால் வசூலித்து பொது மக்கள் சுகித்து வாழ செலவிட லாகாதா? இதைத்தான் சென்ற நூறு வருஷங்

களாகச் சான்றோர்கள் வற்புறுத்தி வருகின்றார்கள். இவர்களைப் பொதுவுடைமைக்காரர்களென்றும், போல்ஷிவிக்குகள் என்றும், அபாயமானவர்களென்றும் கண்டபடி எல்லாம் தூற்றுவது உலகப் புரட்டாகுமே தவிர தெளிவாகாது. இவ்விதச் சூழ்ச்சிகள் யாவும் எளியோரை மாயச் செய்தற்குரிய கருவிகள் என்றறிக.

## பொதுவுடைமையும், இன்சூரன்ஸும்

நெருப்புப் 'பண்டு,' (Funds) அபாயப் பண்டு, சாவுப்பண்டு முதலிய பண்டுகள் மூலமாகச் சிறு சிறு கூட்டத்தவர்களுக்கு ஏராளமாக வருமானம் வருகின்றது. இந்தப் பண்டுகள் யாவும் குதிரைப் பந்தயத்தைப் போன்ற லாட்டரிகளே. கோடான கோடி தொழிலாளர்கள் நெற்றிநீர் வடிய சம்பாதித்த வருமானங்களைக்கொண்டும, இன்னும் பலவித வருமானங்களைக் கொண்டும் யாரோ ஒருவன் திருவுளச் சீட்டு ஒன்றை எடுத்து, கோடீஸ்வரனாகிவிட வேண்டுமென்றால், இதைவிடப் பைத்தியக்காரத்தனம் உலகில் வேறுவுண்டோ? இவ்விதமாகக் கஷ்டப் படாமல் வருமானங்களை முற்றிலும் சேரவிடாமல் சட்டங்கள் விதிக்க வேண்டும். ஜனநாயக ஒழுக்கங்களுக்கு இவ்வித வருமானம் கொடியதாகும். கஷ்டப் பட்டவன்தான் உண்ண வேண்டும் என்ற நீதிக்கு இவ்வித வருமானம் நேர் விரோதமாகும். இவ்வித வருமானங்கள் மனித தர்மத்திற்கே பொருந்தாததாகும. ஆதலின் லாட்டெரி மூலமாக வந்த வருமானங்கள் பொதுமக்களுக்கே சேருவதுதான் தரும

நீதியாகும். யாதொரு கஷ்டமுமின்றி தற்செயலாக வரும் வருமானங்களைப் பெறுவது யோசமென்று யாவராலும் கருதப்படுவதாகும். இனியேனும் இவ்வித அநியாய வருமானங்களை நிறுத்திவிட்டு, அவைகளுக்குப் பதிலாக, நோயாளி பண்டென்று, பிரசவபண்டென்றும், தொழில் அற்றவர்கள் பண்டென்றும், தள்ளாதவர்கள் பண்டென்றும் பொது ஜனங்களுக்கு உதவியாகும்படியான பண்டுகளை ஸ்தாபிதது இலவச உதவிககுப் பாத்திரமுடையவர்களுக்கு உதவியாக்குமாறு ஏற்பாடுகள் செய்ய வேண்டியதே அரசாங்கத்தினுடைய முதற் கடமையாகும் என அறிக. பிரிட்டிஷ் தேசத்திலும், இன்னும் பல நாகரிக தேசங்களிலும் மேற் சொனனவை போன்ற உதவி பண்டுகளில சில பண்டுகள் மூலமாக அனைத்துக் கோடி மனிதர்களுக்கு உதவி புரிந்து வருவது வரவேற்கத்தக்கது. ஆனால் அவ்வித உதவியை இன்னும் பெருகச் செய்ய வேண்டியது அவசியமென உணர்க.

# 5

# பொதுவுடைமையும் வேலை இல்லாமையும்

தற்காலத்தில் கோடிக்கணக்கானவர்களுக்கு வேலையில்லாமையால் மிகவும் துன்புற நேரிடுகிறது. ஒரு பக்கத்தில் தொழிற்சாலைகள் முதலாளிகளுக்கு வேண்டிய லாபம் தராமையால் மூடப்படுகின்றன. மற்றொரு பக்கத்தில் அந்தத் தொழிற்சாலைகளில் வேலை செய்து வந்த தொழிலாளர்களைப் பசியும், பிணியும் வாட்டி வருகின்றன.

பண்டைக் காலங்களில் இவ்விதமாகக் கோடிக் கணககானவர்களுக்கு வேலை இலலாத காட்சி காண முடியா. இது தற்காலக் காட்சியே. இதற்குக் காரணம் என்னவெனில, தொழிற்சாலைகளுக்கும் கர்த்தா ஒருவனே ஏகாதிபததியமுடையவனாய் இருப்பதாலும் அவனுடைய நோக்கமெல்லாம் லாபமேயாதலாலும் இநதப் பரிதாப நிலையிலிருந்து உலகம் வாடி வதங்குகிறது. தொழில் பொது மக்களுடைய உபயோகத்திறகு அமைக்கப்பெற்று, தொழில் புரிவோருக்கும் அந்தந்தத் தொழில்களில்

செல்வாக்குடைத்தானவர்கள். (ஆக இருக்க வேண்டும்) ஆதலின் இவ்விருவர் சம்மதமின்றி இவர்களுககுப் பிரதிகூலமாகத் தொழிற்சாலைகளைச் சொந்தககாரர்கள் என்போர் தங்கள இஷ்டம் போல் நடத்துவது தரும நீதி ஆகா.

வேலை இல்லாமைக்கு இன்னொரு காரணமும் உண்டு. அதாவது புதிய எந்திரங்களால் பலபேர் செய்து வந்த வேலையைச் சிலரே செய்ய நேரிடு வதால் பல பேருக்கு வேலை இலலாமல் போகிறது. விஞ்ஞான வழியில் சில தொழில்களைச் செய்ய நேரிடுகிறபடியால் பலபேர் செய்து வந்த வேலை யைச் சிலரே செய்ய நேரிடுகிறது. இதனுல் பலருக்கு வேலை இல்லாமல் போகின்றது.

முன் கூறியவாறு பாங்கிகள் கடன் கொடுக்க மறுத்து விடுவதால், பணமில்லாமல் சில வேலைகள் நிறுததப்படுகின்றன. லாபம் குறைவதாலும் தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. அயல் தேச சாமான்கள் குறைந்த விலைக்கு விற்பதாலும் பல தொழிற்சாலைகள் மூடப்பட வேண்டி வருகிறது. சிக்கன திட்டமென்று சொலலிக் கொண்டு பலரை வேலையிலிந்து நீக்குவதுமுண்டு. சொந்தககாரர்கள் தங்களுக்கு வரும லாபத்தைத் துர்வினியோகம் செய்வதாலும் தொழிறசாலைகள் மூடப்படவேண்டி நோிடுகினறது. ஆதலால தொழிலும், தொழிற் சாலைகளும் வழிதொகையின்றி நடததப்படுவதால் இத்தியாதி கஷ்டங்கள நேரிட இடம் கொடுக் கினறது. தொழிலும், தொழிற்சாலைகளும் ஒழுங்கு பட நடத்தப்பட வேணடும். இதறகு ஒரு வழிதான

உண்டு. அதாவது தொழிற்சாலைகளையும், அங்கு நடந்தேறிவரும் தொழிலையும பலபேர் உபயோகத்திற்கென நடத்த வேண்டும். அதாவது பொதுவுடைமையாக்க வேண்டும். பொதுவுடைமையாக்கின மாத்திரத்தில், வேலையில்லாமையும் மறைந்து போகும். தடுக்கக்கூடா காரணங்களால் சிலருககு வேலை இலலாமல் போமாகின், வேலை இருககும் இடங்களுக்கு அவர்களை அனுப்பலாம். புதிய வேலைகளை ஆரமபித்து அவைகளுக்கு வேலை அற்றவர்களை எடுதது்க் கொள்ளலாம். வேலை செய்து வரும் நேரத்தைக் குறைத்து, அதிகத் தொழிலாளர்களைக் கொண்டு குறிதத வேளையில் செய்து கொள்ளலாம். சாலை வசதி, வயல் வசதி, போக்கு வரத்து வசதி, சுகாதார வசதிகளை அதிகப்படுத்தி வேலை இல்லாதவர்களுக்கு வேலைகளைக் கொடுக்கலாம். உலகில் வேலையா இல்லை? புதிய தெருல்களை (கால்வாய்களை) வெட்டி போக்கு வரததிற்கு வசதிகள் உண்டாக்கலாகாதா? கிராமங்களைச் சுகாதாரமாக்கக் கோடான கோடி தொழிலாளர்கள் வேண்டி இருக்குமன்றோ? பட்டணங்களிலும், கிராமங்களிலும் கலவிக் கூடங்கள் ஏன் கட்டலாகாது? கோடான கோடி தொழிலாளர்கள் பிள்ளைகளுக்குக் கல்வியும், சுகாதாரமும், நல்ல உணவும், ஆடையும் முதலிய வசதிகள் அளிக்க எத்தனை ஆயிரம் தொழிலாளர்கள் வேண்டும்? இந்த வேலைகளை நிறைவேற்ற மாளிகைகளிலும், பங்களாக்களிலும் உறங்கிக்கிடக்கும் பல்லாயிரம் முதலாளிகள் ஏன் முன வரலாகாது? உலகில் உழுது பயிரிடவேண்டிய நிலங்கள் எவ்வளவு இருக்

கின்றன? காடு கரம்புகளைத் திருத்த எத்தனை கோடி மக்கள் வேண்டியிருக்கும்? தண்ணீர் வசதிகள் உண்டாக்கவும்,மின்சார வசதிகளைப் பெருக்கவும் எத்தனை பேர் வேலை செய்ய வேணடும்? இததியாதி முககிய வேலைகள் இருக்க, உபயோகமறற சாமான்களைச் செய்வதிலும், லாபம் கொடுக்கத் தக்க வேலைகளை நடத்துவதிலும் சிலரை வேலையில் வைத்துக் கொண்டு மற்றவர்களைத் தெருத்திண்ணைகளில் உறங்கச் செய்வது கொடிய பாபத்திலும் பாபமென்றே கருதப்படும். உலகில் ஆயிரம் வருஷத்திற்குச் செய்ய வேண்டிய வேலைகள் இருந்து கொண்டிருககக, வேலையில்லாமல், வருமான மற்ற தொழிலாளிகள் கோடிப்பேர் இருக்கின்றார்கள் என்றால் யார்தான் சிரிக்காமல் இருப்பார்கள். வேலையில்லாமையால் திண்டாடுவதைச் சிந்திக்கச் சிந்திக்க, இவ்வளவு மூடத்தனததில் காமெல்லோருமம மூழ்கிக் கிடக்கின்றோம் என்று நன்றாய் விளங்குகினறது. குரங்கு கைகளில் பூமாலை அகப்பட்டுக கொண்டிருப்பது போல், சில முதலாளிகள் கையில் முதல அகப்பட்டுக கொண்டிருககிற படியால் உலகம் வேலை இல்லாமையால் திண்டாடுகிறது. இந்த நிலைமையிலினறு முதலும், முதலாளியும மாறி பொதுவுடைமைக்கும் பாததிரமாகும் பட்சத்தில, அன்றே வேலை இல்லாமை என்ற சொல்லே இல்லாமற் போய்விடும். )

# 6

# பொதுவுடைமையும்-யுத்தங்களும், யுத்த ஆயுதங்களும்

## யுத்த ஆயுதங்கள்

உலகில், செய்பொருள்களில் இரண்டு வகையுடைத்து. உபயோகமுள்ள பொருள்கள் ஒன்று. உபயோகமில்லாப் பொருள்கள் மற்றொன்று. உபயோகமில்லாப் பொருள்களில் முதன்மையானவை, யுத்தத்திற்கு வேண்டிய ஆயுதங்கள் என்று கூறலாம். யுத்த ஆயுதங்களால், ஆகும் பொருள் யாதொன்றுமில்லை. அழிககத்தக்க கருவியாகயுள்ளவை யுத்த ஆயுதங்களே. யுத்த ஆயுதங்களால் உலகப் பொருள்கள் நாசமடைகின்றன. உலகமும் அதில் வசிக்கும் யாவரும ஒரு காலத்தில் யுதத ஆயுதங்களால் அழிந்தாலும் அழியலாமென, அறிஞர் பலர் சிந்திக்கின்றனர்கள. இவ்விதப் பொருள்களை அபரிமிதமாக உலகில பல அரசுகள் செய்து வருகின்றன. உலக அழிவுக்கு ஏதுவாக உள்ள யுதத ஆயுதங்களைச் செய்வதற்கு எத்தனையோ கோடி, கோடி திரவியம் செலவாகின்றன. இந்த

ஆயுதங்களால் அடிக்கடி லட்சக்கணக்கானவர்கள் கொல்லப்படுகின்ருர்கள். இவ்வளவு உயிர் சேதத்திற்கும, பொருள் சேதத்திற்கும் காரணமாயிருக்கும் ஆயுதங்களே வல்லரசுகள் வருஷா வருஷம புதுப்பித்துக் கொண்டே வருகின்றன.

இவவளவு நாசத்தை உண்டாக்கக். கூடிய யுத்த ஆயுதங்கள், தற்காப்புக்கு அவசியமென்றும் பல பேருக்கு வேலே கொடுக்கக் கூடியவை என்றும் முதலாளிகள் சாக்கு போக்குச் சொல்லி வருகினருர்கள். உலகில் உண்டான யுத்தங்கள் யாவும் முதலாளிகள் தூண்டுதலால் என அறிக. மகாபாரத யுத்தம முதல் நேற்று நடந்த மகாயுத்தம வரை நடந்த யுத்தங்கள் பலவும் முதலாளி வர்க்கத தினர் ஏவலால் உண்டானவைகளேயொழிய தொழிலாளிகளால் அல்லவென நன்கு அறிதல வேண்டும். மகாயுத்தத்தால் பயனடைந்தவர் சிலரே. நாசமுற்றவர் பலரே. தற்காப்புக்கென யுத்தங்கள் நடக்கிறதென்பது முழுப் பொய்யென ரஷ்யத்தொழிலாளர் வெளிப்படுத்திய ரகசிய உடன் படிக்கைகளால் வெளியாய் விட்டது. உண்மையில். ஜெர்மனியிடமிருந்த 'அலஸாஸ்—லொரேன நாடுகளேப் பிரஞ்சுககாரர்கள் கைபபறறவும், துருககிய தேசததை ரஷ்யர் பிடித்துக கொளளவும, ஜொமன் குடியரசு நாடுகளேப் பிரிடடிஷார் அடக்கி ஆளவும் நேற்று நடந்த மகாயுததமாகவென அறிக. வல்லரசுகளில ஒருவர் நாட்டை மறறொருவர் பிடிக கவும், ஒருவர் செலவாககை மறறொருவா அழிக்கவும் ஏற்படும் யுத்தங்களேயொழிய தற்

காப்புக்கன்று. துரியோதனன் ஐந்து கிராமத்தை யாகினும் பஞ்சபாண்டவர்களுக்குக் கொடுக்க சம்மதித்திருப்பானேயாகில் ஆயிரமாயிரம் மககள் தாலியும் அறுப்படாதன்றோ? அன்று முதல் இன்று வரை வஞ்சகம், பொருமை, சூதுவாது, பொய் மோசம், பலாத்காரம், மிருகத்தன்மை, அடக்கி ஆளும் ஆசை, வெற்றியின் பேராசை முதலிய மனப்பான்மைகளால் உலகில் சண்டையும் போரில் கொலேயும், நாசமும் நடக்க நேரிடுகின்றன. காப்பதற்காகினும், ரட்சிப்பதற்காகினும் உண்டாக்க வாகினும் என்றும சண்டைகள நடந்ததே கிடையா? ஆயுதங்கள் செய்வதால் பல பேருக்கு வேலே கொடுக்க இடமிருக்கிறதாகச் சிலர் கூறுவர். இது தவருன வாதம். பல கோடி தொழிலாளர்களேயும், உண்டாக்கிய பொருள்களேயும் அழிக்கும் வேலே பைத்தியக்காரர் செய்யும் வேலேயாகும். அறிவுடை யோர் செய்யும வேலேயாகா. உபயோகமுள்ள வேலேகள் பலவுள்ளன. ஆயுதங்களுக்குப் பதிலாக, வாசஸ்தலங்களும், கல்விச்சாலேகளும், காட்சிச் சாலேகளும் பல கோடி பல்லாயிரம் பேருக்குச் செய் வித்து உலகை உய்விக்கலாம். இவைகளெல்லாம் விட்டு விட்டு உயிர்களே அழிக்கக் கூடிய ஆயுதங் களேச் செய்தல் கொடுங்கொள்ளேயின் லட்சணங் களேயொழிய வேறல்ல. போரால் நிகழும் அழிவை யும், நாசத்தையும் நிருத்த வேண்டுமானல் யுத்த ஆயுதங்களேச் செய்வதை நிறுத்திவிட்டு அதற்குச் செலவாகும் பணத்தைக்கொண்டு உயிர் சுகித்து வாழ பல ஸ்தாபனங்களேச் செய்விக்கலாம். போரை

ஆதரித்துப் பேசுவோரை ஒரு கேள்வி கேட்கின்றோம்? யுத்தங்களால் உலகப் முன்னேற்றமும், நாகரிகமும் அபிவிருத்தியும் அடையுமென்றால் ஏன் கடந்த பத்து வருஷங்களாக நமது உலகம் படும் பாட்டை தனிப்பார் யாருமிலர்? யுத்தத்திற்குப் பிறகு ஏன் கோடான கோடி மக்கள் வேலை இல்லாமல் திண்டாடுகின்றனர் ? எல்லாச் சாமான்களின் விலைகள் குறைந்தும் ஏன் சாமான்கள் வாங்குவாரற்று கிடக்கின்றன. ஏன் கடன் வாங்கிய வல்லரசுகளும் சிற்றரசுகளும் கடன்கொடுக்க முடியாமல் தவிக்கின்றன? இந்தக் கடன்கள் பலவும யுத்த ஆயுதங்களுக்கென அறிக! ஆயுதங்கள் நாசமுற்றன. அதற்கு வாங்கின கடன் பாதிக்கின்றன. "யுத்தம் வரும் முன்னே, கடன் வரும் பின்னே" என்றார் ஒரு பெரியோர். இன்று பிரத்தியட்சமாக நாம் பார்க்கின்றோம். இநதக கடன்கள் கடைசியில் யாரிடம் போய் சேர்ந்தன? கடன் கொடுத்தவர்களிடமே போய்க் குவிந்தன. ஆயுதங்களைச் செய்வித்தவர்களும் முதலாளிகளே! அதற்காகக் கடன் கொடுத்தவர்களும் முதலாளிகளே!! கொடுத்த கடனுக்கு வட்டி வாங்குகின்றவர்களும் முதலாளிகளே!!! ஆனல் இந்த ஆயுதங்களைச் செய்த கோடான கோடி தொழிலாளிகள் அன்று, அன்றாடம் வயிற்றிற்குக் கிடையாத கூலியைப் பெற்றுக் கொண்டு இன்று வேலையில்லாமல திண்டாடுகினறனர். இதுதான தற்கால காட்சி. இந்த அகோரச் சமபவம் திரும்ப நடவா வண்ணம் தொழிலாளர்கள் தங்கள் யுகதி புத்தியைச் சீரடையச் செய்து கொள்ளல் அவசியம ஆகும.

# 7

# பொதுவுடைமையும், போகப் பொருள்களும்

மனித வாழ்வுக்கு வேண்டிய அவசியப் பொருள்கள் அனேகமிருக்க போகத்திற்கென பொருள்களை அபரிமிதமாகச் செய்வது நல்வாழ்க் கைக்கு விரோதமாகும். கோடானு கோடி மக்க ளுச்குக் கட்ட வஸ்திரமில்லாத காலத்தில் பட்டாடை களும், சரிகைத் துப்பட்டாக்களும் செய்வது கொடுமையினும் கொடுமையாகும். உலகிலுள்ள பட்டணங்களில் கடைகளில் காட்சிக்கு வைத்திருக் கும் போகப்பொருளைச் சற்றுநோக்கி பார்ப்போமே யாகில் மனிதருடைய தொழில் எவ்வளவு வியர்த்த மாய்ப் போனது விளங்கும. எவ்வளவு பெரிய கண்ணுடிகள்? எவ்வளவு பெரிய கார்கள்? எவ்வளவு வீணை சித்திரங்கள்? வித விதமான பட்டு ஆடை களென்ன? விலை உயர்ந்த நகைகளென்ன, கூட கோபுரங்கள், மாடமாளிகைகளென்ன? இந்தப் போகப்பொருள்களின நடுவில் குடிசைகள் கோடான கோடி, பாலில்லாக் குழந்தைகள் கோடான கோடி, ஆடையிலலாப் பெண்கள்

கோடான கோடி, சாக்கடைகளிலும், அழுக்கிலும், நாற்றத்திலும் வாழ்வோர் கோடான கோடி, உட்கார மனையில்லாதவர் எத்தனை கோடி, சுகாதார மற்றவர் அனந்த கோடி இத்தியாதி மாந்தரைத் தற்கால உலகில் தினக்காட்சியாக இருந்து வருவதை நோக்கினுல், உலகம் பித்துப் பிடித்து இருக்கலாமோவென்று எண்ண வேண்டிவருகின்றது, சிற்றின்ப வாழ்க்கைக்குச் செலவாகும் பொருளை, சாதாரண வாழ்வுக்கு வேண்டிய பொருள்களைச் செய்ய வினியோகிக்கப்படுமேயாகில், எத்தனை ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கும்! எவ்வளவு மக்களுக்கு சுகமுண்டாகும்! சமுதாய வாழ்க்கையில் யாவருக்கும் அவசியமான வஸ்துககளை முதலில் செய்த பிறகு, போதுமானதெனக் கண்டறிந்த பிறகு, மற்ற வஸ்துக்களைச் செய்து கொள்ளட்டும்.

கொலை, களவு, கள், காமம் முதலிய தீய நடத்தைகளைச் சனசமூகம் ஒழிப்பது போன்று, போகப் பொருள்களையும் பொதுவுடைமைச் சமுதாயத் திட்டத்தில் விலக்கப்படும். பட்டாடைகளையும், துப்பட்டாக்களையும் விவேக சூன்யர்களுககு கொடுத்து விடுங்கள் என்றுர் 200 வருஷத்திற்கு முன்னிருந்த ஓர் ஆங்கிலக்கவி.

## பொதுவுடைமையும், மதுபானமும்.

பொதுவுடைமைக் காலத்தில் குடியை முற்றிலும் நிறுத்தப்படும். சில மதுவிலக்கு வாதிகள் குடியை மட்டுப்படுத்தலாமென்பார்கள். மருந்துக்கு

வேண்டியவற்றை உண்டாக்கலாமேயொழிய, குடித்து வெறியை உண்டாக்கப்படாது. கள், அபின், கஞ்சா, சாராயம் முதலிய வெறி கொடுக்கும் வஸ்துக்கள் உணவாகர்வென்பது விஞ்ஞான முடிவு. ஏதோ உல்லாசமாய்ச் சற்று நேரம் இருக்க சிறிது குடிக்கலாமென்று சிலர் சொல்லுவார்கள். உலகம் குடியில் பல ஆண்டுகளாகப் பழகி விட்டபடியால், அதை உடனே விட்டொழிக்க வருத்தப்படும். இந்தக் காரணத்தை நோக்கியே ரஷ்ய தேசத்தில் முற்றிலும் குடியை ஒழித்து விடாமல் அதிக வெறி கொடுக்காத "வாட்கா" என்ற மது பானத்தை மாத்திரம் மட்டாக குடிக்கவிட்டிருக்கிறுர்கள். ஆனுல், 10து மூலமாக பொதுவருமானத்தை வசூலிப்பதில்லையாம். இதுதான் ஞாயம்.\ முதலாளிய ஊராகிய அமெரிக்காவில், மது விலக்கை அரசியல் திட்டமாய் விட்டதாக தெரிகின்றது. ஆனுல் அதன் ரகசியம் சிலரே அறிந்துள்ளார். அமெரிக்காவில் மது விலக்கு ஏற்பட்டதற்கு முக்கிய காரணமென்னவெனில், தொழிலாளிகள் குடிக்காவிட்டால், அதிக வேலை செய்வார்களென்றும், அதிகவேலையால் தங்களுக்கு அதிக லாபம் வருமென்ற ஆசையால் மது விலக்கை முதலாளிகள் அரசியல் திட்டமாகச் செய்துகொண்டதாகத தெரிகிறது அமெரிக்கா மது விலக்கு ஏழைத் தொழிலாளர் அதிக வேலை செய்து முதலாளிகவு அதிக லாபத்தை உண்டாக்க ஏற்பட்டதேயொழிய ஏழைகளுக்கு முற்றிலும் நன்மை அல்லவென எண்ணக் காரணமுண்டு. திருட்டுச் சாராயம் கொள்ளை கொள்ளையாக அமெரிக்க தேசத்திற்கு அனுப்பப்படுகின்றது. (இதனுல் முதலாளிகள்

குடித்து வெறிக்க சலுகை உண்டாகின்றது. சிந்தித்து அதிகமாகச் செலவிடவேண்டியதுதான்). மகாராஜா வீட்டிலும் சாராயக் கிடங்குகளிலும் மித மற்ற மதுவர்க்கங்கள் சேர்த்து வைத்திருப்பதாகத் தெரிகிறது. ஆதலின் அமெரிக்க தேசத்தில் வாஸ்தவத்தில் மது விலக்கு ஏக தேசமாகத்தான் கையாளப்பட்டு வருகின்றது. இதுவுமோர் முதலாளிய ஆட்சியே. ஆனுல் சமுதாய நிலைமையில் இவ்வித ஆட்சிகளுக்கு இடமிருந்து, வேண்டுமானுல் சில காலம், மிதமாகவே மதுவை உபயோகிக்க விட்டாலும் விடப்படும். நமது இந்திய நாட்டில் மது விலக்கைப்பற்றி மும்முறமாக கூச்சலிடுகின்ருர்கள். இவ்விதக் கூச்சலிடுவதைப் பற்றி நமக்கு யாதொரு ஆட்சேபனையும் இல்லை. ஆனுல், ஏழைகள் குடிக்கக் கூடாதென்று அதிகமாகக் கூக்குரல் இடுகின்ருர்களேயொழிய தனவந்தவர்கள் செல்வர்கள் வினியோகம் செய்யக்கூடாதென்று கூக்குரல் இடுவதைக் காணும். மதுவிலக்கின்பேரில்கொண்ட ஆரவாரத்தை வீண் செலவு செய்யும் தனந்தவர்கள் மேல் செய்யும் பட்சத்தில் எவ்வளவோ தேசத்திற்குச் சிக்கனமேற்படும். பொதுவுடைமையோர் ஆட்சிக்காலங்களில் மதுவிலக்கு உண்மையில் அரசியல் திட்டமாக்கப்படுமென்பதற்குச் சந்தேகமில்லை. மது விலக்குக் கட்சிககாரர்கள், ஏழைகள் குடித்து இன்னும் ஏழைகளாய்விடுகின்ருர்கள் என்று கூறுகின்றனர். இது ஒரு பக்ஷம் உண்மையாயினும், ஏழைகளுடைய பொருளாதார நிலைமையும், கல்வியும் அதிகப்படுமானுல் குடியும்

குறையுமென்பதை இவர்கள் அறிந்தார் இல்லை போலும்! ஏழைத் தொழிலாளருடைய வாழ்க்கை உயரும் பட்சத்தில், கள்ளின் பேரிலுள்ள அவா குறையுமென்பதற்குத் தடையில்லை. குடிப்பதற்கு முக்கிய காரணம், ஓய்வு நேரத்தை, பேரின்ப வழியில் செலுத்தத் தெரியவில்லையென அறிக. ஏழைகளுக்குப் போதிய வருமானத்தைப் பெறச் செயது, ஓய்வு நேரங்களில் பேரின்பங்களில் செல்ல வைப்போமானால் குடி மிகவும் ஒழியும் என்பதற்குத் தடையில்லை? ஆதலின் ஏழை மக்கள் குடியாமல் இருக்க வேண்டுமானால், அவர்கள் வாழ்வை உயர்த்தி, கல்வியைப் பெற வசதி செய்து, உயிர் வாழ்வுக்கு வேண்டிய வசதிகளை அவர்களுக்கு செய்து வைக்கவேண்டும் "குடியை ஒழியுங்கள்" என்ற சொல்லோடு நிற்கலாகாது. நரக வேதனை யில் உழல்கின்றவர்கள் சற்று நேரம் அந்த வேதனையை மறக்க வேண்டி மது உண்பதைப் பாப மென்று கூறல், மானுஷ்கமாகா-மது விற்பனையை ஞாய திட்டமாக்கி, அதன் மூலமாகக் கோடான கோடி வருமானத்தையும் உண்டாக்கிக் கொண்டு, "ஏழைகளே குடியாதிருங்கள்" என்று கூறுவதும் ஞாயமாகா. ஆதலின் மதுபான விலக்கு விஷயத் தில் இது பொதுமக்களை மயக்கும் காட்சியே. சமுதாய வழிவொன்றே நீதிக்கும, ஞாயத்திற்கும் பொருந்தியதாகும். சமுதாயக் கூற்றின்வாயினபடி, மதுபானம் முற்றிலும் விலக்கிவிடத் தோன்றும். அது முடியாமற் போமாகில் அந்தந்தப் பேட்டை வாசிகளுக்கு இஷ்டத்திற்த விட்டுவிட வேண்டும். மது உண்டாக்குவதை அளவுக்கு மீறிவிடப்படாது.

கல்வி, கேள்வி விருத்தியாலும, பொருளாதார் நிலைமை உயாத்துவதாலும், பேரின்ப வாழ்க்கை யைப் பொதுமக்கள் கோரும்படிச் செயவதாலும் குடியை உலகை விட்டு முற்றிலும் நீக்கலா மென்பதே பொதுவுடைமையோரின் துணிபு.

# 8

# பொதுவுடைமையும், நீதியும், நீதிஸ்தலங்களும்.

தற்போது வழங்கி வரும் நீதியும், நீதி ஸ்தலங்களும் தனிப் பொருளுடைமை சார்பாக ஏற்படுத்தப் பட்டவை. இந்த ஸ்தாபனங்களின் சட்ட விதிகளைப் பார்த்தாலும் சரி, (Laws) அவைகளின் நடவடிக்கையைப் பார்த்தாலும் சரி (Procedure) தனி உடைமை சம்பந்தமாகவே செய்துள்ளன. பெரும்பான்மையும் அவனவனின் சொத்துக்களின் பாதுகாப்புக்கென ஏற்பட்ட விதிகளேயொழிய, பொதுஜனங்களின் பொதுப் பொருளுடைமைக்கு ஏற்பட்ட விதிகளாகா. பொதுப்பிரயோகத்திற்கு ஏற்பட்டுள்ள சொத்துகள் சிலவாகையாலும், தனிப்பொருளுடையோனுக்குச் சொந்தமாகிய சொத்துக்கள் பெரும்பான்மையானதாதலாலும், சட்டவிதி விலக்குகளும் தனி உடைமைக் காப்புக்கே ஏற்பட்டுள்ளன. ஏனெனில் தனியுடைமையோரே நீதியும், நீதி ஸ்தாபனங்களையும் உண்டாக்க அரசியல் ஆதிக்கம் பெற்றுள்ளார். ஆதலின் தங்கள் சொத்துகள் பாதுகாப்புக்கு வேண்டிய சலுகைகளைத் தாங்கள் நீதி மூல

மாகவும், நீதி ஸ்தாபனங்களின் மூலமாகவும் செய்து கொள்வது, இயற்கையே. திருஷ்டாந்தமாக, ஏகாதிபத்திய ஆட்சிக்கு வேண்டிய நியாயங்களும், நீதிகளும் ஏகாதிபத்தியக்காரர்கள் செய்து கொடுத்திருக்கின்றார்கள். குடி அரசு நாடா இருந்தால் குடியரசு நாட்டின் நிலைக்கொத்தவாறு நீதியும், சட்டங்களும் செய்து கொள்ளுகின்றார்கள். ஜனநாய அரசாய் இருந்தால், ஜனநாயகக் கூட்டத்தார் வி விலக்குகளும் செய்து கொள்ளுகின்றார்கள். இ போலவே முதலாளி அரசில், முதலாளிக்குத் தக்கவாறு நீதியும், நீதி ஸ்தலங்களும் செய்து கொள்வது சகஜமே.

இந்து 'லா'வின்படி, ஒருவன் சம்பாதித்த சொத்தை அவனது 14 சந்ததி வரையில் அனுபவிக்கலாமென்றும், பிரிட்டிஷ் 'லா'படி மூத்த மகனே சொத்துகளுக்கு வாரிஸ் என்றும், முகமதிய 'லா'படி அவனவன் சந்ததியாரே அவனவன் சொத்துக்களை அடைய வேண்டுமென்றும், தத்தம் சந்ததியிலேயே சொத்துக்களை வைத்துக்கொள்ள வேண்டிய சட்ட திட்டங்களை முதலாளிகள் செய்து கொண்டார்கள். ஒருவன் இயற்றிய நூல் 45 வருஷம் வரையில் அவனும் அவன் சந்ததியாரும் அடையும்படி திட்டமும் செய்து கொண்டனர். சில நிலங்களைச் சாகுபடி செய்தாலும், செய்யாவிட்டாலும் அவன் சந்ததிக்கே தலைமுறை தலைமுறையாக இருக்க வேண்டும், நிலச்சுவான்தார்கள் சட்டவிதிகளைச் செய்து கொண்டனர். வேண்டுமானால் நாடுகளைக் காடாக்கவும், சில தேசங்களில் முதலாளிகள்

ஆதிக்கம் பெற்று பல கிராமங்களை மொட்டைச் சுடு காடுகளாக்கின்றார்கள். இவர்களுடைய அரசியல் ஆதிக்கம் இந்த அக்கிரமங்களுக்கெல்லாம் இடம் தருகின்றது. இத்தகைய நீதியும், நியாயங்களும் முதலாளியிருக்குமிடம் எல்லாம் நிறைந்துள்ளன, …வை அவர்களின் சிவில் 'லா'வின் நியாயமாகும். …வர்களுடைய கிரிமினல் 'லா'வை எடுத்துக் …காள்வோம். இதுவும் முதலாளிகளுக்குகொத்த …கவே சட்டதிட்டங்களைச் செய்து கொண்டனர். முற்காலங்களில் சாதாரணத் திருடரைக் கொலைத் தண்டனை செய்து வந்தார்கள். இன்றைக்கும் மகாராஜனுக்கு லேசான தண்டனையும், ஏழைக்கு கடின தண்டனையும் பல ஊர்களில் விதிக்கின்றார்கள். பணக்காரர்கள் குற்றம் செய்தால் கெட்டிக்கார லாயர் மூலமாகத் தப்பித்துக் கொள்ள வசதியுண்டு. ஆனால், எந்தக் கெட்டிக்கார லாயர் ஏழையைக் காப்பாற்றுவான்? நடவடிக்கைகளில் பணக்காரர்களுக்கே எங்கும் நியாயம் கிடைக்குமேயொழிய ஏழைகளுக்கு அவ்வளவு சலுகைகள் இல்லை-"சட்டமும் ஏழைகளும்" என்ற புத்தகத்தில் ஜட்ஜ் ஸ்பிராட் இந்த வித்தியாசங்களை நன்கு விளக்கிக் காட்டியுள்ளார். ** ஆதலின் முதலாளியின் ஆதிக்கம் அரசியலில் இருக்கும் வரை ஏழைத் தொழிலாளர்களுக்கு 'லா'விலும், சட்டங்களிலும் ஞாயம் கிடைப்பது அபூர்வம்.) என்ன இருக்கின்றது ஏழைகளுக்கு நியாயம் கிடைக்க? அரசாங்கமும் முதலாளிகள் அரசாங்கம். அவர்களால் நியமிக்கப்பட்ட ஜட்சுமார்களும் முதலாளிகள். |கோர்ட்டில் வாதிக்கும் லாயர்களும் முதலாளிகள். நீதியும், நியாயமும்

முதலாளி செய்தவை. இத்தியாதி கோஷ்டியில் தொழிலாளிக்கு நியாயம் எங்கே கிடைக்கப் போகின்றது.)

இந்த விஷயம் இவ்விதமிருக்க, கோர்ட்களாலும், லாயர்களாலும் விளையும் நஷ்டம் கோடான கோடி. ஒவ்வொரு நாடும் வியாஜ்ஜியங்களால் ஒவ்வொரு நாடும் நாசமுறுகின்றன. காலமும் பணமும் வீணே செலவாகின்றன. கோர்ட் வியாஜ்ஜியங்களால், பல குடும்பங்கள் நாசமடைகின்றன. இதற்கு விமோசனம் ஒன்றுமில்லையா. இந்தச் சமூக மாபெருங் கேட்டை நீக்க வழியில்லையா? ஒரே வழிதான் உண்டு. அதுதான் பொதுமைச் சமுதாய மார்க்கம். "எனது உனது" என்ற பண்டைக்கால உரிமையொழிந்து யாவருக்கும பொதுவாகிய சமுதாய உரிமையைத் தொழிலாளர் பெற வேண்டும். அதாவது வியாஜ்ஜியங்களுக்கும், வில்லகங்களுக்கும் முதற காரணமாயிருந்த தனிப்பொருள்கள் யாவும் பொதுப் பொருளாக வேண்டும. நெறகலம், மேய் நிலம், குளக்கரை முதலிய சமுதாய பொருள்மேல் வழக்கு ஆடுவது அபூர்வம். அது போலத் தற்கால வழக்கில் நிலம், வீடுலாபம், குடிக்கூலி, வட்டி, கடன் முதலிய சொத்துகள யாவும் பொதுவுடைமையாகப் பாவிக்கும் வரையில் யார் இவைகளுககுச் சொந்தமென்று வருவார்களா? யார் இவைகள் மேல் வழக்கிடுவார்கள். ரோட்டுகளின் பேரிலும், வாராவதிகளின பேரிலும் சமுத்திரம், கெணலகளின் பேரிலும், பொதுக் கட்டடங்களின் பேரிலும், ஏரி, கடல், மலை, காடு முதலிய பொதுப் பொருள்களின் பேரில் வழக்கு

இல்லாமை போய், வீடு, வாசல், தோட்டம், துரவு, நிலம், நீர் முதலிய பொருள்கள் பொதுப்பொருளாய் விடும பட்சததில் அவைகளின் மேல் யார் வழக்கிட முடியும். ஆதலின் 'உனது எனது' என்ற தனிப் பொருள்கள், பொதுப் பொருள்களாக மாறிய மாத்திரத்தில வழககுகளும் ஒழிந்துவிடும். வில்லகங்களும் ஒழிந்து விடும். கோர்ட்டும் வேண்டாம். கொத்தளமும வேண்டாம். ஜட்ஜு களும வேண்டுவதில்லே. லாயர்களும் வேண்டிய தில்லே. அந்தந்தக் கிராமங்களில் (பேட்டைகளில்) சிறு சிறு பஞ்சாயத்துகள் மூலமாகச் சொற்ப வித்தியாசங்கள் நேரிடடால் அவற்றைத் தீர்த்துக் கொள்ள முடியும். சென்ற 10,000 வருஷஙகளாக உலகைவருத்திவரும் இக்குறைவுடைய சட்டதிட்டங் களும், விதிவிலக்குகளும் வேண்டவே வேண்டாம்.

தற்போது தனிப்பொருளாக வழங்கி வரும் பொருள்கள் பலவும் தனிச்சொந்தத்தில் வைத் திருக்கும வரை, கோர்ட்டு, நியாயம், சட்டதிட்டங் களும், அததுடன் கலந்து வழக்கும் வியாஜ்ஜியங் களும் உலகை வரித்துக் கொணடே வரும். அது ஒழிந்து பொதுப் பொருளுடைமையாக மாறுங்கால் மனிதருக்குப் பூர்வீகமாகத தொன்றுதொட்டு வரும் மனவருத்தங்களும், மாசசாயங்களும் சண்டைச சச்சரவுகளும், வழக்கு எலலா வகைகளும் ஒழிந்து விடும்.

# 9

# பொதுவுடைமையும், மதமும், ஜாதியும்.

சகல மதங்களும் கற்பனைகளே. மதங்களுக்கு ஆதாரமாக வைத்திருக்கும் கடவுளரும் கற்பனை களே. இதனை வாதிப்பதில் பிரயோசனமில்லை. விசாரணையில்தான் மதங்கள் கற்பனைகளில் ஒன்று என்று ஏற்படும். அது வரையில் மதங்கள் உண்மை யென்று சாமான்ய மக்கள் நம்பி வருவார்கள். பொய் நம்பிக்கையைப் போக்குவது அசாத்தியமான காரியம். |மெஞ்ஞானம் பாமர மக்களுக்குள்ளும தொழிலாளிகளுககுளளும் பரவப் பரவத்தான் மதங் களின உண்மை வெளிப்படும்.| பொதுவுடைமை சம்பந்தப்பட்ட வரையில் மதங்கள் யாவும் அதற்கு அதீதப்பட்டவைகளே. சமுதாயத்திற்கும், மதங் களுககும் ஒற்றுமையோ, அனுசரிப்போ ஏற்படாது. ஏனெனில் ஆதி முதல் மதங்கள் பலவும் இவ்வுலக வாழ்க்கையை இகழ்ந்து வருகின்றன. பணக் காரர்கள் சார்பாகவே மதங்களைப் பேசும்படி உப யோகித்து வந்திருக்கின்றனா. | எந்தச் சண்டை யிலும் இரண்டு கட்சிக்காரர்களும் தங்கள் தங்கள் கடவுளரை உதவி செய்யும்படி பிரார்த்தித்து வரு

கின்ருர்கள். கடவுளரும் தங்களுக்குள் சண்டை போடடுக் கொள்வதாகப் பல புராணங்கள் கூறு கின்றன. மதங்களின் நடைமுறையில் வழங்கி வரும் கிரியைகளும், கோட்பாடுகளும எளியோரை மூடபக்தியிலேயே அழுத்தி விடுகின்றன. மதங்கள் யாவும் மெஞ்ஞானம் அடைவதற்கு முட்டுக்கட்டை யாகவே இருககின்றன. மதகுருக்கள், வீண் கிரியை களை எளியோர் மேல் சுமத்தி, தூபதீபமென்றும், அர்ச்சனை என்றும் தீர்த்தமெனறும திருவிழா வென்றும் இன்னும பல வேடிக்கைகளைக் காட்டி பல கோடி மனிதரைத் தெளிவடைய மார்க்கமின்றி செய்து வருகின்றனர். எந்தக்காலத்திலும் எளியோர் இவ்வுலகில் சுகித்து வாழும் வழிகளை மதங்கள் ஆத ரிப்பதில்லை. மகாராஜர் இன்னும் மகாராஜாக்களாக வும், ஏழைகள இன்னும் ஏழைகளாகவும மதங்கள் ஏதுக்களாக இருக்கின்றனவே அல்லாமல் பொது ஜனஙகள் போதுமான வரையில் உண்டு உடுத்தி சுகவாழ்வு அடையச் செய்வதில்லை. எந்தக் காலத் திலும் தனவந்தர்களுக்கு மதஙகள் சகாயமாய் இருநது வருகின்றன. சாமானய ஜனங்களை வேடிககையார்த்தமாக வாழ்நாளைக கடக்க மதங்கள செய்கினறனவேயொழிய, இவ்வாழவில் யாந்தர் சுகிதது வாழ்வதற்கும, தெளிவை அடைவதற்கும உதவியாக இருந்ததில்லை.

மதங்களின் பிரயோஜனமின்மை ஒரு பக்கம் இருக்க அவை உலகில் துனபங்களை அதிகபபடுத் திக் கொணடே வந்திருக்கினறன. மதங்கள தோன்றிய முதல் மதபபிததால நடநத யுத்தங்கள்

எத்தனை, அடக்கு முறைகள் எத்தனை, கொள்ளைகள் எத்தனை, கொடூரச செயலகள் எத்தனை, பலிகள் எததனை, காவுகள் எத்தனை? இத்தியாதி கொடுமை களைக் கணக்கிடவும் கூடுமோ. 60,000 சமணர்களைக் கழுவில் ஏற்றியதும் மதமே! கோடான கோடி ஐரோப்பியர்களையும், அராபியர்களையும மாளவைத்த தும் மதமே. இன்றும் இந்துக்களும் மகமதியர்களும் சண்டை செய்து மண்டையை உடைத்துக் கொள்ளச் செய்வதும மதமே. உலகில் மதங்களால் வதைக்கப்பட்டு மாண்ட மாந்தர் கோடான கோடியே.

மதங்களால் உண்டாகும் பொருளாதார நஷ்டங்களுக்கு அளவே கிடையாது. கோயில்கள் எததனை, தேர்கள் எத்தனை, தெப்பங்கள் எத்தனை, கோயில்களில் உழைக்காமல் வாழும் சிப்பந்திகள் எத்தனை, விக்கிரகங்கள் எத்தனை, கோயில் பணத் தில் தாசிக்கும, வேசிக்கும செலவாகும பணம் எத்தனை? இவ்வளவு செல்வமும் யாருக்கும் நற் பிரயோஜனத்திற்கும் உதவாமல் போவதை யோசித்தால், தொழிலாளர்கள் கஷ்டங்கள் யாவும் எவ்வளவு வியர்த்தத்தில் செலவாகின்றன என நன்கு விளங்குமில்லையா? இவ்விதமாக வீணே நஷ்டமாகும் செலவத்தைக் கொண்டு எத்தனை சுகாதார வீடுகளைக் கட்டலாம்? எத்தனை எத்தனை ஏழைப்பிள்ளைகளுக்குக் கல்வியைக் கற்றுக் கொடுக்கலாம்? சாலைகளை உண்டாக்கலாம்? நோயாளிகளுக்கு எத்தனை வசதிகள் உண்டாக்க லாம்? பாழடைந்து கிடக்கும் எத்தனை கிராமங்களைச்

சுகவாழ்வுக்கு இருப்பிடமாக்கலாம்? தொழிலாளருக்கு எத்தனை இலவசக் கலாசாலைகளை உண்டாக்கலாம்? எத்தனை மெஞ்ஞான ஆராய்ச்சிச்சாலைகளை உண்டாக்கலாம்? வீணே கோயிலகளுக்குச் செலவாகும பணத்தைக் கொண்டு நீரில்லாத ஊருக்கு நீரும், நிலமில்லாத ஊருக்குச் செய்கால் நிலமும வேண்டியவரை உண்டாக்கலாமே. உலகத்தோரை ஒன்று கேட்கிறேம. இவ்வுலகில் சரியாக உண்டு உடுக்க வழியின்றி கோடான கோடி மாந்தர் வதைகின்றதாக சொலகினறீர், வீடு வாசல இன்றி பல கோடி மாந்தர் தவிப்பதாக கூறுகின்றீர். உலக வாழ்வுக்கு வேண்டிய போதுமான ஞானமின்றி இன்னும பலகோடி மக்கள் அறியாமையில் கிடந்து உழல்வதாகவும் சொல்கின்றீர். மனிதகுலம இவ்விதச் சீர் கேட்டில் கடந்த பல்லாயிரம் வருஷங்களாகக் கிடந்து உழலும் காலே, இறந்த பிறகு, ஏதோ சுகமடையலாமெனக கோவில்களையும், அதற்குப் பாதிரி குருக்கள் ஆயிரக்கணக்காக நியமித்து வருகின்றீர்கள். இவ்வுலக வாழ்வுக்கு இவை அனைத்தும் உபயோகமில்லையெனில், ஏன் இவை விஷயமாக இவ்வளவு வியர்த்த செலவும், பிரயாசையும்? மதங்கள் இல்லாதிறநதவனுக்கு வழிகாட்டியாய் இருப்பது பாதகமில்லை எனினும, உலக வாழ்க்கைக்கு வழிகாட்டியாய் இல்லாதிருப்பதுதான் பெருத்த கெடுதியை விளைவித்து வருகின்றது. அவனன்றி ஓர் அணுவும் அசையாது எனும் சித்தாந்தத்தால் மனிதனுடைய முயற்சிகளும, முன்னேற்றத்திற்கும் விசாரணைக்கும் பெருத்த ஹானி ஏற்படுகிறது. மதங்கள் கற்பனை தெய்வங்

களேயும், பேய் பிசாசுகளேயும், இருள், வீரன், காட்டேரி முதலிய பித்தலாட்டங்களேயும் உண் டாக்கி, மனிதனேச் சதாகாலமும் பயத்திலேயே வைத்துக் கொண்டிருக்கின்றன. இருளேககணடு பயப்படுபவர்கள் எத்தனேபேர்? சுடுகாட்டைக் கண்டு திகிலடைவோர் எத்தனேபபேர்? மந்திரத் தந்திரங்களால் மதி மயங்குவோர் எத்தனேபேர். இவ்வித மோசங்களுக்கெலலாம் மதங்கள் இடங் கொடுத்து வருகின்றன.

இதுவும் அன்றி, மனிதனேயும், மிருகங்களேயும் வாட்டி வரும நோயகளின் காரணங்களேயும் பரிகாரங்களேயும தேடவொட்டாமல், மாரி அம்மன் களேயும, முனீஸ்வரன்களேயும சிருஷ்டித்து, மனிதரைப் படுகுழியில தள்ளிக்கொண்டு வருகின்றன பல மதங்கள். வாந்தி, பேதி, பித்தசுரம, அம்மை முதலிய கொடுநோய்களால் மாள்வோர் கோடான கோடி. இவைகளின் கார ணங்களே மெஞ்ஞானிகள கண்டுபிடித்து அங்நோய் களுக்குத் தகுந்த சிகிச்சை செய்து வருகின்றனர். இவ்விதச் சிகிச்சைகளேக் கையாள்வோர்களாகிய அமெரிககர்களும, ஐரோப்பியர்களும் பெருவாறு இக்கொர்டுநோயகளிலிருந்து மீண்டு வருகின்றனர். ஆனல் நமது இந்திய தேசத்தில் தெய்வங்களாலும், பிலலி, சூனியவஞ்சனேகளாலும் இக்கொடுநோய்கள உண்டாகின்றன என்று கற்பிதது மதங்கள் கூறு வதால் இதனே நம்பி கோடான கோடி மனிதர்கள மாள்கின்றார்கள். இந்த மதியை என்னென்று கூறுவது? யூரோப், அமெரிக்கா, தென் ஆப்ரிக்கா,

ஆஸ்திரேலியா கண்டங்களில் வாழும் மக்களுக்கு மதங்களின்மேல் விசுவாசம் குறைவு அடைந்து வந்தாலும், நோய்களுக்கு மதங்கள் உதவாதென உணர்வைப் பெற்றதாலும, பில்லி, சூன்யம் முதலிய தந்திரங்கள் முற்றிலும் நமபாமலிருப்பதாலும் வைசூரி, கொள்ளை நோய், மகாமாரி, வாந்திபேதி, முதலிய கொடிய கொடிய வியாதிகள் விஷக்கிருமி களால் உண்டாகின்றனவென்ற உணர்வு அடைந் திருப்பதாலும் அவர்களை இங்நோய்கள் பீடிப்ப தில்லை. அவர்களின் வயது சராசரி 50 ஆனால் நமது வயது 25லியே முடிவு அடைகின்றது. நமது தலைவிதி இவ்வளவுதானு?

மதங்களில் உழல்கின்றவர்கள் ஜோஸ்யத்திலும் சாதகத்திலும் அதிக நம்பிககை வைத்துள்ளார். ''சத்தமும் சோதிடமும் என்ருல் இவை பிதற்றலும் பித்தரில் பேதையாரில்'' என்ற முது மொழியையும் மறந்தனர் போலும்! வான சாஸ்திர ஞானம் சற்று பாமர ஜனங்களுக்கு உண்டாகுமேயாகில், சோதிடமும் சொல்லாமலொழிந்து மனிதரின் வீண் பயத்தைப் போக்கும்.

சமுதாய நிலையில், மதங்களின் கதி என்னவென கேட்கலாம்? விசாரணையில் மதங்கள் முற்றிலும் மனே ஆலயங்களாக முடிகின்றபடியாலும், மதங்களின சார்பாகச் செய்யும் சாந்திகளும், கிரியைகளும், கர்மங்களும் பயனற்ற காரியங்களாய் முடிவதோடு மனிதரும் பல துன்பங்களை உண்டாக்குவதாலும் மதங்களில் நம்பிக்கை வைக்க மெஞ்ஞான அறிவும் மங்கிப்போவதாலும், இத்தியாதி தீமைகளுக்கு

ஆதி காரணமாய் இருந்து வரும் மதங்களை ஒழித்து விடுவதே உசிதமாகும். தற்காலப் பொருளாதார நிலைமையை மதங்கள் ஸ்திரப்படுத்துவதால், மதங்களை ஒழிப்பதே நலமென்று அறிஞர் கருதாமல இரார். இத்தியாதி காரணங்களைக்கொண்டே சோவியத் ரஷ்யாவில் தொழிலாளர் மதங்களைப் பரவச் செய்யும் முறையை நிறுத்திவிட்டபடியால் கிழங்கட்டைகளும், உன்மத்தர்களும் அறிவீனரும் ரஷ்ய தேசத்துக் கோவில்களில் ஏகதேசமாகப் போகின்றார்களேயொழிய, மற்றப்படி அறிவுடைய தொழிலாளர் மற்றபேர் போவதில்லை. குழந்தைகளுககு மதப்பயிற்சியே கூடாதெனத் திட்டம் செய்துள்ளனர். மதமில்லாத உலகம முதலாளிகளுக்கு அவர்கள சார்பினர்களுக்கும் வருத்தமுண்டாகுமே அல்லாது ஏழைத் தொழிலாளருககுப் பெருத்த சனி ஒழிந்ததாகவென்று எண்ணலாம. தொழிலாளரை ஏமாற்றி வஞ்சித்து அவர்களுடைய சுகத்தைக் கெடுத்து வரும மதங்கள் இருந்தெனன, போயென்ன? இதுதான சமுதாயிகளுடைய முடிவு.

## பொதுவுடைமையும் - ஜாதியும்.

ஜாதி வரம்பு, மிருகத்தன்மையிருப்பவர்களுக்குள் ஏற்படும் சமூக வித்தியாசம். இது இந்திய தேசத்திலொன்றே தோன்றியுள்ளது. காலங்காலங்களாக ஜாதி நம்மை விட்டுத் தொலைய வேண்டி, பல ஞானிகள் கூறிவந்தும் இது ஒழிவதாகக் காணேம. மகமதியர் 1,000 வருஷங்களாக நம்மை ஆண்டு வந்தும ஜாதி நம்மைவிட்டு தொலைந்தபாடில்லை. பிரிட்டிஷார் 250 வருஷங்

களாக நமமை ஆண்டு வந்தும, ஜாதி நிலைத்தே வருகின்றது. ஜாதியை வளர்க்க, சுத்தி என்றும், சங்கத்தான் என்றும் புதிய,புதிய ஜாதி மதஸ்தாபனங் கள் உற்பத்தியாய் வருகின்றன. தீண்டாமையை ஒழிக்கக் காந்தியார் பிரச்சாரம் செய்து வருகின்றார். அதிலும பயனில்லை. பூர்வ காலத்தில் புத்தர் முதலிய பெரியோர் ஜாதியைக் கணடித்து வந்தும், ஜாதி முளைத்துக்கொண்டே வருகிறது. |ஆதியில் ஜாதி இல்லாத் தேசங்களில இந்து பிராமணர்கள் குடி யேறி ஜாதியை நிலைக்க வைத்துவிட்டார்கள். இந்த இந்திய சமூக தோற்றத்தின் ஆதிக்கமே ஆதிக்கம்.)

மதங்களால் இந்திய தேசம் சிதறுண்டதுடன ஜாதிப்பிரிவினைகளாலும் இன்னும் சிதறுண்டது. பல ஜாதிகள் ஒனறுக்கொனறு உயர்வு தாழ்வு என்று எணணிக்கொண்டு வந்ததினுல் சுய அரசுக்கு இடந் தராமல் பிர தேசங்களுக்குட்பட நேரிட்டது. சமூக சீர்த்திருததமெனறு பல வருஷங்களாகத் தேசத்தி லுள்ள பெரியோர்கள் உழைத்து வந்தும அவர் களுக்குள்ளவே ஜாதி ஒழிந்தபாடில்லை. ஜாதிப்பிரி வினியில் உண்டாக்கிய "தீண்டாமை" என்ற இந்து சமூகத் திட்டத்தை ஒழிக்கக் காங்கிரசும் பாடுபட்டு வந்தும், வாய்ச்சொல அளவிலேயே நின்று விட்டது. \இந்திய தேசத்தில் மாத்திரம் மூன்று தீமைகள் குடி கொண்டிருப்பதைக் காணலாம். அவையாவன: மதபேதம, ஜாதிபேதம, பொருளாதார பேதம. மற்ற தேசங்களில இம்மூன்றில் பொருளாதார பேத மொன்றே காணப்படும். இந்திய தேசத்தில் மாத் திரம் இம்மூன்றும் நிலைபெற்றுள்ளன. ஆதலின்

இந்திய தேசத்தில் பொருளாதார வித்தியாசத்தை மாத்திரம் போககுவது தேச சீர்திருத்தத்திற்குப் போதுமானதாகாது. இந்திய தேசத்தில் பொருளாதார வித்தியாசம் ஒழிவதோடு, மத வித்தியாசமும், ஜாதி வித்தியாசமும் ஒழியவேண்டியதவசியமாகும். பல ஆண்டுகளாகப் பல பெரியோர் மதச் சீர்திருத்தத்தை மாத்திரம் முயற்சி செயது வந்தனர். அது பலிக்காமல் போயிற்று. உணமையைத்தவிர வேறு மதமில்லை எனருர்கள். இதனுல் மதங்களும் ஒழியவில்லை. ஜாதியும ஒழியவில்லை. அகில தேசங்களின் தத்துவத்தைக் கையாள வேண்டுமென்ருர்கள். இதனுல் ஜாதியும் ஒழியவில்லை. பொருளாதார நிலைமையின் வித்தியாசங்களைப் போககினுல் ஜாதி, மதம் சீரடையுமெனச் சிலர் எணணுகிருர்கள். ஆனுல், அது மாத்திரம் போதாது எனத தோன்றுகின்றது. ஏனெனில் இந்திய தேசம் மற்ற தேசங்களைவிட விசிததிரமான தேசமாகும். எங்குமில்லாச் சமூக வித்தியாசங்கள இங்கே தோனறியுள்ளன. ஆதலின பொருளாதார வித்தியாசத்தைப் போக்குவது மாத்திரம போதாது. மத வித்தியாசத்தையும், ஜாதி வித்தியாசத்தையும் கூடப் போக்க வேண்டும். தொழிலாளர் முதலாளிகளுடன் சமததுவம பெற வேண்டுமானுல் ஜாதி மதப் பொருளாதார விததியாசங்களனைத்தையும பற்றற்று ஒழித்தல் வேண்டும்.

இந்திய தேசததில் இம்மூன்று வித்தியாசங்களும் ஒன்றுகொன்று சொந்தப்பட்டே வருகின்றன. உயர்நத ஜாதியில் பலர் தனவந்தர்களாய் இருக்கின்ருர்கள். தாழநத ஜாதிகளில பலர் ஏழை

களாக இருந்து வருகின்றார்கள். இந்துக்களில் மக மதியார்களைவிடப் பலர் மகராஜர்களாய் இருக்கின்றார்கள். ஆதலின் ஒருவாறு பொருளாதார வித்தியாசம் ஒழிந்தாலும் மத வித்தியாசமும், ஜாதி வித்தியாசமும் ஒழியா. ஆதலால் இந்தியத் தொழிலாளர் அகில தேசத் தொழிலாளர்களோடு சமத்துவம் பெற வேண்டுமானால், ஜாதி மத வித்தியாசங்களை முன்னரே ஒழிக்கத்தான் வேண்டும்.

ஜாதியும், மதமும் கற்பனைகளெனத் தெளிதல் வேண்டும். இவ்விரண்டு ஜன சமூக வித்தியாசங்களால் தொழிலாளருக்குள் ஒற்றுமையேற்படாது. முதலாளிகளையும் வெல்லுதல் அஸாத்தியமான காரியம். மேலும் உலக வாழ்க்கைக்கு ஜாதியும் வேண்டுவதில்லை. மதமும் வேண்டுவதில்லை. இன்றைய தினமே இந்திய தேசத்து மக்கள் 35 கோடியும் ஜாதியையும், மதத்தையும் ஒழித்துவிடும் பட்சத்தில் தேசத்தில் விளைவு குறையப் போவதில்லை. நீதியும், ஒழுங்கும் சுயமரியாதையும் கல்வியும் உலகை விட்டு ஓடப்போவதில்லை. இவ்விரண்டு வித்தியாசங்களும் ஒழியும் பட்சத்தில் இந்திய உலகில் தோன்றியுள்ள வித்தியாசங்கள் ஒழிந்து ஒற்றுமையுடன வாழமுடியும். மூட மத வைராக்கியத்தால் உண்டாகும் சண்டைகள் ஒழிவதோடு, தீண்டாமையும சொல்லாமலே ஒழியும. தொழிலாளருக்குள் புத்துயிர் தோனறி, ஒருவருக்கொருவர் யாதொரு வித்தியாசமுமின்றி கூட்டுறவு கொண்டு உழைத்து வருவர். தொழிலாளர் பொருளாதார சமத்துவம் பெற்றுச் சுக வாழ்வு பெற வேண்டு

மாஞல், மத வைராக்கியத்தையும், ஜாதி வித்தி யாசங்களையும் பற்றறவே ஒழித்தல் அவசிய மாகும். எண்சாண் உடம்புக்கு வேண்டிய எல் லாம, நல்லுணவும, நலலுடையும், நல்ல வீடும் முதலிய நாகரிக வசதிகளேயாம். இவை, மதங்களாலும், ஜாதிகளாலும் கிடைககப் போதிலலை. இவ்விரண்டு வித்தியாசங்கள் இருக்கும் வரை இந்திய உலகில் சணடையும், போரும், மார்ச்சரியங்களும் உண்டாகிக்கொண்டே வரும். ஆதலால் ஏன் இவ்விரணடு கற்பனைகளை ஒழிக்கக் கூடாது? இவ்வுலகில் நாம் பசியாற உண்டு, பெற் றெடுத்த மககளைச சரியாக வளர்த்து, கலவி கேள்வி களால் மனத்தை நிரப்பி வாழ்வோமாகில், **இறந்த பிறகு நற்கதி இருக்கும் பட்சத்தில்** ஏன் அதை நாம அடையமாட்டோம். இதுதான் சமுதாயிகளுடைய வாதம்.

ஜாதிப்பற்றும், கடவுள் பக்தியும ஒழிந்தால் உலகில் நீதியும் நெறியும் தவறிவிடும் என்ற எண்ணம் பொய். தோன்றியுள்ள இவ்வாதம் மத குருக்களும், ஜாதி வெறி கொண்டவரும், சோம்பல் கொண்ட பணக்காரர்களும் சொல்லும் மோச வார்த்தைகளென அறிக. நீதியும், நெறியும், ஜாதிக் கும், மதத்திற்கும் அதீதப்பட்டவை. ஜாதி இல்லா ஊரில் நீதி இல்லையா? மதமில்லா ஊரில நெறி இல்லையா? நீதியும் நெறியும் சமூக வாழ்க்கையுடன் பிறநதவை. ஜாதி மதங்கள தோன்றுவதற்கு முந்தியே, மனிதர்கள் அவர்கள யுத்தியிஞல நீதி யுடனும், நெறியுடனும் வாழ்ந்து வந்தனர். மதமும்,

ஜாதியும் மனித வர்ககத்தில் தோன்றிய பிறகே, முன் வழங்கி வந்த நீதியும், நெறியும பாழாய் விட்டன. ஜாதியும், மதமுமற்ற மிருக ஜாதிகளில் அவைகளுககுரிய நீதியுப, நெறியும் காணபோ மாஞல, நீதிக்கும, நெறிக்கும் ஜாதி ஏன வேண்டும? மதமும் ஏன் வேண்டும்? ஆதலின் மனித வர்க்கத்தில் இடையில தோன்றிய ஜாதியும் மதமும் ஒழியும் படசத்தில் யாதொரு பாதகமும் யாருக்கும் ஏற்படாது. மனித உலகம் முற்றிலும் பதின்மடங்கு நீதியுடனும, நெறியுடனும் நடக்குமென்பதற்கு ஐயமில்லை.

# 10

# பொதுவுடைமையும் பெண்களும்

பல்லாயிரம் வருஷங்களாக வழங்கி வந்த முதலாளித்துவத்தில் பெண்கள் கீழ்ப்படிதல் முறையையே அடைந்து வந்திருககின்றனர். இந்தத் திட்டத்தில் பெணகளுக்கு எந்தச் சுதந்திரமும கிடையா. இந்து 'லா'வில் பெண்களுககெனத் தனிச் சொத்து கிடையாது. எந்தச் சொத்தையும் தான் விறகவாவது, அடமானம வைப்பதாவது முடியாது. ஏதோ இங்குக குறிதத விஷயங்களுக்கு மாத்திரம் செலவு செய்யலாமாம். பிரிட்டிஷ் 'லா'படி பெண்களின் சொத்து புருஷனுடைய சொத்தா கிவிடும். பலகாலங்களாகத் தான்பெற்ற குழந்தைக்கும் தனக்கும் சொந்தமில்லை எனறு கருதப்பட்டு வந்தது. பெண்களுககு கடவுளே வேண்டாமென்று கருதும் ஜன சமூகமும் உண்டு. "தெயவம் தொழாஅல், கொழுநன் தொழுதெழுவாள் பெய்யனப் பொய்யும மழை" எனற திருவள்ளுவர் வாக்கியததால் தமிழ்நாட்டில் பெண்கள் அடைந்திருந்த அடிமைத்தனத்தைக்

காட்டுகிறது. பூர்வ காலந்தொடங்கி இந்தியாவில் வழங்கிவந்த உடன்கட்டை ஏறும் கொடூரப் பழக்கத் தால் பெண்கள் எந்த சமூக நிலையில் இருந்து வந்தார்களென எளிதில் தெரிந்து கொள்ளலாம். நமது நாட்டில் விதவைகளுடைய நிலையைக் கண்டும் மற்ற நாகரிக உலகங்களுக்கு நாம் தலைகுனிய வேண்டியதே. உயர் ஜாதியென்று வழங்கும் பிராமணர்களில், விதவைகளை நடத்தி வரும் மாதிரி, காட்டுமிராண்டிகளிடமும் காணமுடியா. இந்து **'லா'**வின்படி மனைவி இறந்த பிறகு ஒருவன் மறுமணம் புரியலாம். புருஷனை இழந்த பெண் சாகும்வரை விதவையாக இருத்தல் வேண்டுமாம். இதனால் இந்து **'லா'** எவ்வளவு நாகரிகமற்ற **'லா'** எனபது விளங்குகிறது. பொருளாதார நிலைமையிலும் பெண் தாழ்ந்தே கருதப்பட்டு வருகின்றார்கள். ஆணுக்குக் கிடைக்கும் கூலியைவிட அந்த வேலை களுக்குப் பெண்ணுக்குக் கூலி குறைவு. குடும்ப வாழ்க்கையில்கூட ஆணுக்தும் பெணணுக்கும் உயர்வு தாழ்வு. வீட்டைப் பெருக்கவும், கழுவவும, சுத்தமாக வைககவும், சமையல் செய்யவும், மற்ற குடும்ப வேலைகள் எல்லாம் பெண்களே செய்ய வேண்டியது. ஆணே சம்பாதித்தாலும, சம்பாதிக்கா விட்டாலும் வேண்டிய சுகங்களை அனுபவிககப் பாத்திரமுடையவனும. பல பெண்களை அதே காலததில் மணம் புரிந்து கொள்ளலாம். ஆனால் பெண் தகாத புருஷனைவிட்டு விலக வேண்டு மெனறால், அது கூடாதாம். மனிதன் தன்னுடைய திரேக பலச் சலுகையால, பெண்களை எல்லா ஞாய விஷயங்களிலும் தாழ்வுபடுத்தித் தனக்குச் சதா

காலமும் அடிமை வேலை செய்ய வைத்துக் கொண்ட தாகத் தெரிகிறது. பெண் தன்னுடைய திரேகக்கட்டு வித்தியாசத்தால் பணிந்து நடக்க வேண்டிய தாயிற்று. உலக முழுமையும் இதே காரணததால் தான் மனிதன் உயர்நதும், பெணகள் தாழ்நதும வந்திருக்கின்றனர்.

நமது மனித வர்க்கத்தில் ஏற்பட்ட இந்த உயர்வு தாழ்வு நிலைமையால் உலகம் மிருகத்தன்மை யிலேயே இருந்து வந்தது. எந்த நாடுகளில் பெண் களுடைய நிலையும் உயர்த்தப்பட்டு வந்திருக் கின்றதோ அந்த நாடுகளில் நாகரிகம் முன்னேற்ற மடைந்து வருவதைப் பார்க்கலாம். எந்த ஊர்களில் பெண்கள் தாழ்த்தப்பட்டு வருகின்ருர்களோ அந்தந்த ஊர்களெல்லாம் அநாகரிகத்திலே மூழ்கி இருப்பதைக் காணலாம்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள திரேகக் கட்டே பேதம். குழந்தைகளைப் பெறும் பாக்கியத் தைப் பெண்கள் பெற்றதினுல் என அறிக. பெண் கள் பத்துமாதமாகக் கர்ப்பத்திலுள்ள கருவைத் தன் னுடைய வயிற்றில் பேணிக் காக்க வேண்டியதாலும், குழந்தையை ஈன்றபிறகும் இரண்டு வருஷ காலம் தனது பாலையும் ஊட்டி ரட்சித்து வருதலாலும் புருஷரைவிட சற்று திரேகபலம் குறைவுபட் டுள்ளது. இந்தப் பலவீனத்தால் புருஷர்கள் பெண் களை அடிமை ஆக்கிக்கொண்டார்கள். உலகில் பெண்கள் தாழ்வு பெற்றதற்கு இதுதான் முதற் காரணம். இந்தத் தாழ்ந்த நிலைமையை மனிதர்

ளிடத்தே காணலாமேயொழிய மற்ற ஜீவராசி களில் காணுதல் அரிது.

பெண்களுக்குத்தான் பதிவிரதாத்தனம், மனித னுக்கு வேண்டியது அவசியம் இல்லை என்று நடை முறையில் கட்டாயப்படுத்துவதும இதே காரணத் தில்தான். பெண்களைப் பல துறைகளிலும் தாழ்த்தப பட்டு வருகின்றமையால், மனிதப் பூண்டே தாழ்வு பட்டு வருமெனபதற்குத் தடையில்லை. காரணம பலஹீனம் அடைந்த பெணகள் பெறும் பிள்ளைகள் சகல விதத்திலும் பலமற்றே பிறப்பது திண்ணம். இவ்விதமாகச் சில நூற்றுண்டுகளாகப் பல பிளளை கள் பலக்குறைவு அடையுமாகில் மனிதகுலம் க்ஷீண தசை அடைய வேண்டிவரும். இந்தியர்கள் சில நூற்றுண்டுகளாகப் பிற பிரதேசங்களுக்கு அடிமை யுற்றதும், இதே காரணத்தினுல் என அறிக. இந்தியாவில் தொழிலாளருப, தங்களை முதலாளிகள் முன்னே பணிவாக நடந்து கொளவதும, தங்கள் ஸ்தீரிகளின் பலவீனத்தினுல்தான். ஐரோப்பியர் அமெரிக்கர் முதலிய மேல்நாட்டார் இந்தியர்களை விடப் பல துறைகளில் மேம்பட்டிருப்பதும் மேல் நாட்டு ஸ்தீரிகளின் செல்வாக்கு நமது ஸ்தீரிகளைவிட உயர்ந்திருப்பதனுலென அறிக. இதனைத் தொழி லாளர் முக்கியமாகச் சிந்தித்தல் வேண்டும. கல்வி யிலும், நமது ஸ்தீரிகள மேல்நாட்டாரைவிட மிகக் கேவலமானதாக இருக்கின்றனர். 100க்கு இருவர் கூட தங்கள் தாய் பாஷையைப் படிக்க எழுதத் தெரியாதென்ருல், நமது ஸ்தீரிகளின நிலையைச் சொல்லவும் வேண்டுமா? ஆதலின் நமது தொழி

லாளர் முன்னேற்றமடைய வேண்டுமானல் தங்கள் ஸ்தீரிகளின் நிலைமையைத் தங்களுக்குச் சமமாகக் கொண்டுவர வேண்டும். குடும்ப வாழக்கையிலும, பொருளாதார நிலைமையிலும், கலவி, கேள்வியிலும் ஆண்களுககும், பெண்களுக்கும உயர்வு தாழ்வு இருத்தல கூடாது. பதிவிரதாத்தன்மையிலும் ஸ்தீரி, புருஷன் இருவருக்கும் அவசியமே. ஒரு பெண்ணுககுமேல் மணம் புரிதல் குற்றமாகக கொளளவேண்டும. ஆணும், பெண்ணும் ஒத்து வாழமுடியாவிட்டால் நல்ல காரணத்திற்காக கூட்டுறவை ரத்து செய்து கொள்ள இருவருக்கும சுதந்திரம் இருத்தல் வேண்டும. அது இல்லையேல், மனைவாழ்க்கை முற்றிலும் துன்பத்தைத் தரத் தக்கதே. வேண்டா பெணசாதியும், வேண்டா புருஷனும் ஜன சமூகத்திற்கே கேட்டை விளைவிக்கக் கூடியவர்களாதலால், அந்த உறவை நீக்கிக் கொள்ளச் சம்மதிப்பதுதான் மானுடத்தின் தர்ம மாகும்.)

சில நாடுகளில் ஒரு கொடூரப் பழக்கம் வழங்கப் பட்டு வருகிறது. இந்தப பழககத்தை மதமும் ஆதரித்து வருகிறது. இந்த பழக்கத்துக்குட்பட்டவர் களும பிரததியேக ஒரு ஜாதியினராக மதிக்கபபட்டு வருகின்றனர். நமது இந்தியாவில் இவர்களைத தாசி களென்று வழங்குவார்களை. மேல் நாடுகளில் இவர் களை வேசியென்றும அழைக்கப்பெறறுள்ளார்கள். சமுதாயக் கொள்கையற்ற தாசி வேசித்தனம் மனுஷ குலத்தைக் கெடுக்கும் கோடாரிக காம்பென் றும் மதிககப்படும். நாகரிகமடைந்த பல ஊர்களில்

தாசி வேசித்தனம் கண்டும் காணுததுமாக நடந்தேறி வருகின்றது. இதையொழிக்கப் பல விதி விலக்குகள் செய்து வந்த போதிலும, குறைந்ததாகக் காண வில்லை. இந்தத் தொழிலுக்கு இடங்கொடுக்கும் அரசாங்கம் நாகரிகமானதென்ற பெயருக்கு லாயக்கு அற்றது என்றே கூறவேண்டும. இந்தக் கேவலத் தொழிலை ஆதரிககும் மதத்தை என்ன வென்று சொல்லவேண்டும். இந்தப் பூர்வீகப் பாபத தொழிலைப் புரியும் பெண்களின் அகோர நிலையைக் கண்டு துக்கிப்பார் உலகில் இல்லையா ?

சில ஊர்களிலும், தாசி வேசித்தனத்தை வர்த்தகமாக ஆக்கிக்கொண்டார்கள். இதன் கார்யாம்சத்தில் மாந்தருக்கு உண்டாகும் கெடுதியை உலகில் யார் உணர்ந்தாரில்லை. இந்தக கொடுந் தொழிலால் உலகில வாழும் மாந்தரில 100க்கு 70 பேர் மேக நோயால் பீடிக்கப்பட்டுள்ளாராம். இந்தக் கேட்டைவிட உலகில் என்ன வேறு கேடு இருககின்றது ? இந்த மகாபாதகத் தொழிலால் நம்மையும கெடுததுக கொள்வதோடு இனிப் பிறக் கும் மனுஷப் பூண்டையும் கெடுத்து வருகின்ரும். ஆதலின் இனிவரும் சமுதாயச் சமூக வாழக்கையில் தாசி வேசித்தனத்தை முற்றிலும் ஒழித்தே தீர வேண்டும்.

ரஷ்யாவில் தாசி வேசித்தனத்தை நிறுத்த ஸ்தீரி புருஷ சம்பந்தத்தை விசாலப்படுத்திப் பார்க் கின்ருர்கள். அது எப்படி எனில் ஒரு புருஷனுக்கு ஒரு மனைவிதான் இருக்கவேண்டும், அதற்கு மீறினல், அதில் சம்பந்தப்பட்டவர்கள் யாவரும்,

அந்தச் சம்பந்தத்தில் உண்டான சந்ததியாரைக காப்பாற்றக் கடமைப்பட்டவர்களாவர். தகுந்த காரணமின்றி புருஷன் பெண்ஜாதியாகக் கூடி வாழ்ந்தவர்கள் அந்தக் கூட்டுறவை நிராகரித்தால் ஒருவரை ஒருவர் சாகும்வரைக் காப்பாற்ற வேண்டும். இத்தியாதி நிபந்தனைகளால், மற்ற ஊர்களைவிட ரஷ்யாவில் விபச்சாரம் குறைவென்றே தெரிகிறது. புருஷன் மனைவி சம்பந்தமும் நீடூழியாக இருக்கின்றதாம். பொருளாதார நிலைமையிலும் ஸ்தீரி புருஷனுக்கு வித்தியாசமில்லாமலும் செய்துள்ளார். ரஷ்யாவில் ஸ்தீரி புருஷர் தங்கள் வருமான வித்தியாசமின்றியும், கல்வி கேள்வி பெறுவதிலும யாதொரு வித்தியாசமில்லையாம். இதனால் ஸ்தீரி புருஷரால் எத்தொழிலையும் புரிந்து ஜீவிக்க வேண்டிய அவசியம் நேரிட்டது. ஜீவிக்க ஜீவனத்திற்குச் சம்பாதிக்க வேண்டியதாதலால், ஸ்தீரிகளுக்குத் துர்நடத்தைக்கு அவகாசம் குறைவு ஏற்படுகின்றது. இத்தியாதி விதி விலக்குகளால் ஸ்தீரி புருஷ சமபந்தம் நீதி நெறிகளுடன் நடக்கச் சாத்தியப்படுகிறதாகத் தெரிகிறது. \வேலை இல்லாமல் சோமபித் திரிகிறவர்களுககுத்தான் எல்லாக் கெட்ட எண்ணமுட, கெட்ட செயல்களும் ஏற்படும். |

## பொதுவுடைமையும், பிள்ளைகளும்.

ஜீவராசி உலகில் நிலைத்திருக்க வேண்டுமானல், அதன் சந்ததி விருத்தியாக வேண்டும. மனித ராசியும் சந்ததி விருத்தியால்தான் அழிவுருமல் இருந்து வருகின்றது. மனிதப் பூண்டு உலகில நிலைத்திருக்க வேண்டுமானல் அதன் பிரஜா விருத்தியாக

வேண்டும். இனிவரும் மனிதகுலம் துகக நிவர்த்தி அடைந்து நம்மைவிடச சுகித்து வாழ வேண்டில், நமது சந்ததியைக் கவனித்தல் வேண்டும். ஆதலின் நமது குழந்தைகளை வளர்க்க வேண்டிய முறைப்படி நடத்த வேண்டும்.

) எவ்விதமாக நமது குழந்தைகளைப் பாதுகாத்து வருகின்றேமோ, அவ்விதமாகவே நமது சந்ததியாரும் நடந்து கொள்வார்கள். பயத்துடன் குழந்தைகளை நடத்தினல் வயது முழுமையும் பயந்தே நடக்கும். பயமற்றதனமாய் நடத்தினல் தைரியத்துடன் நடந்து கொள்ளும். நற்குண, நற்செய்கையுடன் நமது சந்ததியார் நடக்க வேண்டுமானல், நமது குழந்தைகளுக்கு நற்குணத்தையும், நற்செய்கையையும் புகட்டவேண்டும். நம்முடைய நடையுடை பாவனைகளைக் கண்டே நமது குழந்தைகளும் நடக்குமாதலால், நமது நடையுடைபாவனைகள் அனைத்தும் சீர்பட்டதாக இருத்தல் அவசியம். இனிவரும், உலகம இனிவரும் மனிதர்களால் நிரப்பப்படும் ஆகையால் அவர்கள் சுபாசுபத்திற்கு நாமே காரணகர்த்தர்களாவோம். அவனவன் தலை விதிப்படி நடக்குமென்பது சுத்தத்தவறு. பிறக்கும் குழந்தைகளுக்குக் கர்மமும் இல்லை, தலைவிதியுமில்லை. நாமே அவர்கள் கர்மத்திற்கும், தலைவிதிக்கும், அதாவது அவர்களின் நடத்தைக்குக் காரணமேயென அறிக. இந்த மெஞ்ஞான உண்மையைக் கண்டறிந்தே பொதுவுடைமைக கட்சியார், நாம் பெற்ற பிள்ளைகளை முக்கியமாகக் கவனிக்க வேண்டுமென்கிறார்கள்.)

பிள்ளைகளைப் பெறுதல் தாய் தந்தையர் கடமை யாயினும், வளர்ப்பது பொதுமக்களுடைய கடமை என்று பொதுப்பொருள் கட்சியோர் வற்புறுத்து கின்றார்கள். ஏனெனில் தாய் தந்தையர்களுக்குத் தக்க கல்வி கேள்வி போதாமையாலும், போதுமான வருமானமில்லாமையாலும் பால்யத்தில் குழந்தை களை நடத்தும் விதம் அவர்களுக்குத் தெரியாமை யாலும் பிறந்தது முதல், வயது வரும் வரையில் வேண்டிய வசதிகள் இல்லாமையாலும் தாய் தந்தை யருடைய பொறுப்பைப் பொது ஜனங்கள் வகித்துக் கொண்டு, பிள்ளைகளைப் பொது ஸ்தாபனங்களில் அறிஞர்கள் பார்வையின் கீழ் வைத்து வளர்க்க வேண்டும். ஐந்து வயதுக்கு மேற்பட்டு, எப்படி பொதுக் கல்வி ஸ்தாபனங்களில் நமது குழந்தைகளை விட்டு விடுகின்றோமோ, அவ்விதமே பிறந்த முதல் 5 வயதுவரை குழந்தை பொது ஸ்தாபனங்களில் விட வேண்டியது அவசியமேயாகும். பால் கொடுக்க வேண்டிய நேரங்களில் தாய், பால் கொடுத்தபிறகு, தாயும் தனது மற்ற வேலைகளைப்பார்க்கலாம். இந்த நேரங்களில், குழந்தைகள் தெரிந்தோர் காப்பி லிருந்து வரும். இவ்வித ஏற்பாட்டால் தாய் தந்தை யர்களுக்குச் சதா உண்டாகும் கவலையும், இராது. அதிக ஓய்வு நேரமும் தாய்மாருக்கு கிடைக்கும். குழந்தைகளும் எல்லா வசதிகளுடன் கவனிக்கப் பட்டு வளர்ந்து வரும்.

இந்த ருசிகரமான ஏற்பாட்டால் வீட்டின் இன்பம் குறைவுபடும் என்பார் சிலர். குழவி தாய் முகம் நோகக, தாய் தந்தை முகம் நோக்க,கோடான

கோடி குடும்பங்களில் என்ன சுகமிருக்கின்றதோ தெரியவில்லை. குழந்தைகளின் அன்பும் குறையு மென்பாரும் சிலர். ஆஸ்பத்திரிகளில் போய் வரும ஆண் பெண்களின் அன்பு குறைந்து இருக் கின்றதா? அது போலவே பொது ஸ்தாபனங்களில் வளரும் குழந்தைகளுக்கு அன்பும் எவ்விதம குறை யும்? நன்ருக வளர்க்கப்பட்ட பிள்ளைகள், எங்கிருந்து வளர்ந்தாலும் அன்பு அதிகமாகவே இருக்கும. எப்படி எனில், வறுமையில்லாமலும், கோபமில்லா மலும், சண்டை சச்சரவு இல்லாமலும், எங்கும் சிரித்த முகமாய் இருக்கும் இடங்களில் வளரும் பிள்ளைகளுக்கு எப்படி அன்பு இல்லாமல் போகும்? சுத்தமும, சுகாதாரமும நிறைந்த இடங்களில் வளரும் பிளளைகளுக்கு நோய் நொடி எப்படி வரும்? ஆதலின் தாய்மார் வசித்து வரும் அருகாமையில் குழந்தைகள் வளரும பொது ஸ்தாபனங்கள ஏராள மாக ஏற்பட வேண்டும். இனிவரும் சந்ததியார் சுகத்திற்கு வேண்டிய வசதிகளை இப்பொழுதே நியமிக்க வேண்டுமெனச சமுதாயிகள் வற்புறுத்து வார்கள். பொதுவுடைமையின் லட்சியப்படி, குழந்தை வளர்க்கும் பொறுப்பு பொதுவெனக கூறுதல் வேண்டும். அந்தப் பொறுப்பு அனுஷ் டானத்தில் வரத்தகக ஏற்பாடு செய்தலும் வேண்டும். | பொதுவுடைமை தேசமாகிய ரஷ்யா வைப் போய் பார்த்து வந்தவர்கள் குழந்தைகளுக்கு ரஷ்ய நாடு தெய்வலோகமென்று சொல்லு கின்ருர்கள். மேற்போன்றவாறு குழந்தைகளை வளர்த்து வருவதால்தான்.)

## பொதுவுடைமையும், சுத்தமும், சுகாதாரமும்.

நாகரிகமுள்ள நாடுகளில் சுத்தமும், சுகாதாரமும் பொதுப்பொறுப்பாகவே எண்ணி வருகின்றார்கள். சுத்தமும் சுகாதாரமும் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதவை. இவ்விரண்டும் சமூக வாழ்க்கைக்குரியன. சுத்தமும், சுகாதாரமுமின்றி எந்த உயிரும் வாழ முடியா. இவ்விரண்டையும் கவனிக்காத நாடுகளில், பஞ்சமும, அகால மரணமும், கொள்ளை நோய்களும் குடிகொண்டே இருக்கும். ஆயுள் விர்த்திக்குச் சுத்தமும் சுகாதாரமும் வேண்டியவை. சமுதாயத்தில், இவ்விரண்டு வாழ்வின் அவசியங்களை விசேஷமாகக் கருதப்படும், நகர முனிசிபாலிடிகளிலும், தாலுக்கா டிஸ்டிரிக் போர்டுகளிலும் சுத்தமும், சுகாதாரத்திற்கும் உரிய சட்ட திட்டங்கள் பொதுவாகவே அமுலுககுக கொண்டு வரப்படுகின்றன. ஆனல் நாடு முழுமைக்கும் இந்தச் சட்ட திட்டங்களை அனுஷ்டிப்பதில்லை. நாட்டுப்புறங்களில் சுத்த சுகாரத்தைப் பற்றிய விதி விலக்குகளை பெரும்பான்மையாகக் கவனிப்பதில்லை. குளம் குட்டை நதிக்கரை முதலிய இடங்களைச் சமுதாய வாழ்க்கையில் வெகுவாகப் பந்தோபஸ்தில் வைக்கப் படும். கோயில் குளங்கள் யாவும பொதுவுடைமை களாக் கருதபபடுமாகையால், இவ்விடங்கள் அசுத்த மாக இருக்கவிடப்படா. ஒவ்வொருவரும் சுத்தமாக இருக்கவேண்டிய வசதிகள் பொதுவாக நியமிக்கப் படும். அசுத்தம் செய்வோரையும், அசுத்தமாக இருப்போரையும், மனித விரோதிகளென்றே கருதப் படுவார்கள்.

பொதுவுடைமையில் சுத்த சுகாதார வேலையைப் பொதுப்பணியாக அனுஷ்டிக்கப்படும். நோய், வியாதி முதலிய தொந்திரவுகளுக்கு வேண்டிய சிகிச்சை பொதுவாகவே செய்யப்படும். சமுதாயக் கூட்டத்தில் நோய் தீர்க்கக் கூலி வாங்குவது சண்டாளத்தனமென்று கருதப்படும். ஆனல் முதலாளி திட்டத்தில் நியாயம் பெறவும், நோயைத் தீர்க்கவும் பணம் வேண்டும். தொழிலாளி இயக்கத்தில் இவ்விரண்டு பணிகளும் பொதுப் பணிகளாகக் கருதப்பட்டு, யாவருக்கும் இலவசமாகவே உதவி அளிக்கப்படும். பொதுவுடைமை நிலையில் பணம் வாங்கும் லாயரும் இரார். பணம் வாங்கும் டாக்டரும் இருக்கான். இவ்விரு தரத்தாரும் அதில் பணிவிடையில், மற்றவரும் பணிவிடை செய்வதைப் போல் பணி செய்வார்கள். மற்ற சமூக உழைப்பாளிகளுடைய வாழ்வுக்கு வேண்டிய வசதிகள் அடைவது போலவே இவர்களும் அடைவார்கள். திரேக சுகத்திற்கு வேண்டிய யாத்திரை, திரேக ஆறுதலுக்கு வேண்டிய சுக ஸ்தாபனங்கள் வேண்டியவர்களுக்கு இலவசமாக யாவருக்கும் அளிக்கப்படும். தற்போது சிலரே இவவித ஆறுதலை அடையும் பாக்கியம் பெற்றுள்ளார். இனிச சமுதாயத்தில் யாவரும் எல்லாம அடையும் பாக்கியம் ஏற்படும்.

# 11

# சமுதாயமும் வர்த்தகமும்

மனித வாழ்க்கைக்குச் செய்பொருளும் விளை பொருளும் இன்றியமையாதவையாகும். இப் பொருள்களை வினியோகம் செய்தல் வர்த்தகம் என்று கூறப்படும். ஆனால் விளைபொருள்களையும், செய் பொருள்களையும் வேண்டும்போது வினியோகிக்கக் கூடியவையாகையால் அவைகளுக்கு ஒரு விலை மதிப் பிட்டு அந்த விலை மூலமாக அவை வினியோகிக்கப் பட்டு வருகின்றன. அவைகளின் விலையைப் பண மென்று சொல்லுகின்றோம். இது மனித சவுகர்யத் திற்கு ஏற்பாடு செய்து கொண்ட திட்டமாகும். பூர்வத்தில் ஒரு பொருளைக்கொடுத்து, வேண்டும் மற்றொரு பொருளைப் பெறுவது வழக்கம். இது பண்ட மாற்று என்று வழங்கப்படும். ஆனால், பொருள்கள் அபரிமிதமாக உண்டாகின்றபடியாலும், அதனை அதிகரிக்கப்படுதலாலும், அவைகளைப் பண்டத்துக்கு பண்டமாக மாற்றிக்கொள்ள முடியாததாகை யாலும் பொருள்களுக்கு விலை என்று ஒன்று ஏற்

படுத்திப் பணமாற்று என்ற திட்டத்தை நமது சவுகர்யத்திற்கு உண்டாக்கிக் கொண்டோம். வேண்டுமான பொருளுக்கு அதன் விலையைக் கொடுத்து வாங்குகின்றோம். இதுதான் தற்காலத்தில் வழங்கி வரும் பணமாற்றுத் திட்டம்.

## விலையை மதிக்கும் விதம்

பொருள்களின் விலையை எவ்விதம் மதிப்பிடுவது? அதற்கு ஆதாரமென்ன? பொருளைச் செய்வதற்காகிலும், விளைவிப்பதற்காகிலும் வேலை செய்ய வேண்டும். கருமான் வேலை செய்ய வேண்டுமானால் அல்லது உழவன் உழுது பயிரிட வேணடுமானால் இவர்கள் செய்பொருள்களைச் செய்யவும், உழவுப் பொருள்களையுண்டாக்கவும், இவர்கள் உழைக்க வேண்டும். எந்தப் பொருளை உண்டுபண்ண வேண்டுமானாலும் சரி, அல்லது விளைவிக்க வேண்டுமானாலும் சரி, அப்பொருள்களை உண்டாக்கவும், விளைவிக்கவும் உழைப்பவனுடைய உழைப்பு வேண்டும். இந்த உழைப்பு இல்லாமல் எந்தப் பொருளும் உண்டாகாது. எவ்வளவு உழைப்பு வேண்டுமோ அவ்வளவு உழைப்பு செய்பொருள்களில் அல்லது விளைபொருள்களில் போட்டால் தான் அவை கிடைக்கும். ஆதலால் ஒரு பொருளைச் செய்ய எவ்வளவு உழைப்பு வேண்டுமோ அதுதான் அதன் விலையாகும். ஆதலின் உழைப்பே பொருள்களின் விலைக்கு ஆதாரம். அந்த உழைப்பு எப்படி வரும்? ஒரு மனிதன் உண்டு உடுத்தி வசித்து வந்தால் அந்த உழைப்பு உண்டாகிறது. அவ்விதம்

உண்டு உடுத்தி வசிக்க எவ்வளவு வேண்டியதோ அவையே அந்த உழைப்பின் விலையாகும். எப்படி எனில் உண்டு உடுத்தி வசிக்கும் செலவே உழைப்பாலும், உழைப்பின் பயனே உண்டாகும் பொருளாதலாலும், உண்டு உடுத்தி வாழ வேண்டிய செலவே அவ்வுழைப்பால் உண்டாகும் பொருளாதலாலும், அந்தச் செலவே பொருள் விலை எனப் பெறப்படுமன்றோ? ஆதலின் உழைப்பைக்கொண்டு விலை மதிக்கின்றோம். உழைப்பவன் வாழவேண்டிய வசதிகளால் விலை ஏற்படுகின்றது. இதைச் சற்று விபரமாக விளக்கிக் காட்டுவோம். \ஒருவன் ஒரு பொருளைச் செய்ய ஆறு மணி சாவகாசம் பிடிப்பதாக வைத்துக்கொள்வோம். அந்த ஆறு மணி சாவகாசத்தில் எவ்வளவு உழைப்பவனுக்குச் சக்தி வேண்டியதாய் இருக்கின்றது? இது எவ்விதம் தெரிந்து கொள்ளலாமெனில், இந்தச் சக்தி உண்டாக்க எவ்வளவு இந்த மனிதன் உணண வேண்டும். உடுத்த வேண்டும். வாழ வசதிகள் வேண்டும்? இவைகளைக் கணக்கெடுத்துப் பார்த்து, இவ்வளவு சக்திக்கு இவ்வளவு உணவு முதலானது பிடிக்குமாதலால், இந்த உணவு முதலானதே செய்பொருளின் விலையென மதிக்கப்படுகின்றது. ஆனால் வழங்கும் பணமாற்றலில் இந்த விலையைச் செய்பவன் பெறுபவதில்லை. இதற்குக் குறைத்தே பெறுகின்றான். எப்படி என்றால், பொருள்கள் செய்வதற்கு வேண்டிய கருவிகள் யாவும் - கப்பல், ரயில், தொழில் எந்திரங்கள், தொழிற்சாலைகள், நிலம், நீர் சில கைவசமாய்விட்டபடியால், உழைப்பவன் முதலாளி

இட்டதைப் பெற வேண்டியவனுயிருக்கிருன். இந்த ஏற்பாட்டால் உழைப்பவன் தனது உழைப்பின் முழுப் பயனைப் பெருமற் போகின்ருன். இந்த ஏற்பாட்டைததான் முதலாளிகள் லாபமென்பதைச் சம்பாதித்துக்கொள்ள இடங் கொடுககின்றது. லாபமென்பது உழைப்பவனுடைய உழைப்பின் பயனென்று அறிக. ஆனல் மேற்கூறிய காரணத்தால், உழைப்பவனுக்கு அது கிடைக்காமல் உழைக்காத முதலாளிகளுக்குப் போய்ச் சேருகின்றது] *

இவ்விதமாகக் கிடைக்கும் லாபத்திற்காகத்தான தற்கால வர்த்தகம் நடைபெருகின்றது, உண்டாகும் பொருள்களை உலகில் உழைத்து வரும் மனிதருக்கும் வினியோகிக்கப்படுதல் வேண்டும். ஆனல், அவ்விதம் வினியோகிக்கப்படாமல், அதன் கால பங்கோ அல்லது அரைக்கால் பங்கோ உழைப்பவனுக்குச் சென்று மற்ற மீதி உழைப்பின் பயன் உழைக்காத முதலாளியைச் சேருகிறது. இதுதான் தற்கால வர்த்தகத்தின் அஸ்திவாரம். இந்த லாபத்தைக் கோரியே உலக முதலாளி வர்த்தகர்கள் அவர்கள் இஷ்டப்படியே விலையை ஏற்றுவதும், குறைப்பதும், இந்த வர்த்தக முதலாளிகள் கையில் இருக்கும்வரை உலகிற்குச் சுகமிராது. உழைப்பவனுச்கு அவன் உழைப்பின் பயனும் கிடைக்காது. அவன் உழைப்பின் பயன் கிடைக்காமையால் உலகில் பசியும், பிணியும், வறுமையும், சண்டையும் போரும் திளைத்து வருகின்றன. இதற்குப் பரிகாரமென்ன? தனி வர்த்தகம் பொது வர்த்தகமாக வேண்டும். கண்டவனெல்லாம் தனித்

தனியாக யாவருக்கும் பொதுவாகிய முதலில் செய் பொருளோ, விளைபொருளோ பிறர் உழைப்பைக் கொண்டு செய்து முடித்து தனது இஷ்டப்படி விலை மதிப்பிட்டு, விற்பதை விட்டு, முதல் யாவும் பொது வாகவே, செய்பொருளானாலும சரி, விளைபொரு ளானாலும் சரி, வினியோகமாக வேண்டும். உழைப்பின் பயனாகிய லாபமும் உழைப்பவனுக்கு உரியது போக, மீதி ஏதாகினும் இருந்தால் அதுவும் பொதுப்பிரயோசனமாகவேண்டும். உலக வர்த்தக மானாலும் சரி, ஊர் வர்த்தகமானாலும் சரி பொது வாகவே நடத்தப்பெற்றால், கண்டபடி எல்லாம் பொருள் விலை ஏறாமலும், குறையாமலும், ஒழுங்காக வினியோகத்திற்கு வேண்டும, வேண்டா என் பதற்கு ஏற்றவாறு அமைக்கப்படும். உலகப் பொருளாயினும், தேசப் பொருளாயினும் வினி யோகத்திற்குச் செய்யப்படுமே அன்றி,வியர்த்தமாக எந்தப் பொருளும் செய்யப்படா. வர்த்தகமும் தாறு மாறாக நடத்தப்படாமல் ஒழுங்காக நடத்தப்படும். இரண்டாவது உழைப்பவனுக்கு அவனது உழைப் பின் பயன் பெற முடியும். மூன்றாவது அது போக மீதி இருப்பின், அதுவும் ஒருவனைச் சேராமல் பொது மக்களுக்கே உபயோகிக்கப்படும். இதனால் தேசத் தில் போதுமான உணவும் மற்ற வசதிகளும் ஒழுங் காக யாவருக்கும் கிடைக்கும். இத்தியாதி நன்மைகள் வர்ததகம் தற்காலத் தனி உடைமையி லிருந்து மாறி, பொதுவுடைமையாகப்பெறின் உண்டாகுமென சமுதாயிகள் வற்புறுத்து கின்றனர்.

# 12

# பொதுவுடைமையும், கூலியும் சம்பளமும்

பொதுவுடைமையில் கூலி என்றும், கூலிக் காரன் என்பதும் ஒழிந்து இவைகளுக்குப் பதிலாக உழைப்பின் பயனும, உழைப்பவனும என்பது வரும். உழைப்போனகிய தொழிலாளி தனது உழைப்பிற் குத் தகுந்த பயன் (தற்போது) அடைவதில்லை என்று முன் அத்தியாயத்தில் காட்டியுள்ளோம். தற்போது தொழிலாளி பெறுவதெல்லாம் முதலாளி அளிக்கும் கூலியே. கூலியின் லட்சணமோ என்னவெனில் உழைப்புக்கும் கூலிக்கும யாதொரு சம்பந்தமும் கிடையாது. முதலாளியோ, எஜமானரோ இட்டது பிச்சையாகும். கூலி பெறுவோம் என்றும் நிச்சய மில்லை. நாளைக்கோ, இன்றைக்கோ வேலை நின்று விடும். அத்துடன் கூலியும் நின்று விடும். நாளைக்கு குறைந்த கூலிக்கு வரும் தொழிலாளி போட்டியாக வந்தால் முதல் தொழிலாளிக்கு வேலை போய்விடும். கூலித் திட்டத்தில் தொழில் நிச்சயமில்லை.

கொடுக்கும் கூலி உழைப்பவனுக்குப் போதுமான்தா என்ற விசாரணையும் கிடையாது. இந்த லட்சணங் களைத் தற்காலக் கூலி உடைத்து. இந்தத் திட்டத தில் வேலை நிச்சயமுமில்லை. விலையின் பயனும் நிச்சய மில்லை. வாழ்வுக்குப் போதுமானவை என்றும் கிடையா? (இதன் பிறகு கைப்பிரதியின் 4 பக்கங்கள் காணுமற் போய் விட்டன.)

(கூலி என்பது தற்கால முதலாளித்துவ அமைப்பில், உழைப்பவன் உயிர் வாழ்வதற்கு மட்டும் அவசியமானவற்றைத் தரசகூடியதாக இருக் கின்றது. அவன் உழைக்கின்றதற்குத் தக்கபடி யானதில்லை, உழைத்து உற்பத்தி செய்வதன் மதிப்பு உழைப்பவனுக்குச் சேருவதில்லை என்றும், அது போலவே சம்பளம் வாங்குகின்றவர்களுக்கு அவர்கள் செய்யும் பணிக்குத் தக்க ஊதியம் இந்த அமைப்பில் கிடைப்பதில்லை என்றும் விவரித்திருக்கக் கூடும் என்றும் தோன்றுகிறது (ப- ஆ.)

விளைபொருள், வீடுவாசல், நிலம், தோட்டம் முதலியவை தனியுடைமை ஆட்சியில் உட்பட்டிருக் கும்வரை உழைப்பவனுக்குப் போதுமான உண வும், ஆடையும், வீடும் எவ்விதம் கிடைக்கக் கூடும்? வர்த்தகமும், அதற்கு ஆதாரமாகவுள்ள பாங்கிகளும் தனிப்பொருளாகப் பாவிக்கும் வரை பொது உத்தியோகஸ்தர்கள் மாத்திரம் மாதம் ரூ 500/-மேற் படாது வாங்க எவ்விதம் சம்மதிப்பார்கள். வழக்கிடும் நிலைச்சுவான்கள், சமின்தார்கள், சிரோத்திரிய தார்கள், இன்னும பலவித பொருளுடையயோர் லட்சக்கணக்கான சொத்துக்களை அனுபவித்து வர,

இவர்கள் இடும் வழக்குகளைத் தீர்க்கக கூடும் ஜட்சுகள், மாஜிஸ்டிரேட்டுகள் போலீஸ் உத்தியோகஸ்தர்கள் மாத்திரம் நீதியை விற்காமல குறைந்த சம்பளத்தில் வாழ எப்படி இஷ்டப்படுவார்கள்? இவைகளை யோசித்துப் பார்த்தால் சென்ற மாதம் கராச்சியில் செய்துள்ள பொருளாதார சபபந்தமான திட்ட முழுமையும் போலி என்றே கருதவேண்டிவரும். பொதுவுடைமையாக்காமல் அதில் வேலை செய்யும் பெண்பிள்ளைகளுக்குப் பிரசவ உதவி கொடுக்க வேண்டுமென்று எவ்விதம் கட்டாயப்படுத்தக்கூடும்? தற்காலம் உண்டாகும பலவித கஷ்டங்களுக்கும் அஸ்திவாரமாக இருந்துவரும தனியுடைமைத் திட்டம் மாருமல் உழைக்கும் உலகம் சுகமுறுவது கஷ்டமே. இதனை மாற்ருமல, தொழிலாளருக்கு வேலை நிச்சயமும், போதுமான சம்பளமும், உத்தியோகஸ்தர் சம்பளக் குறைவும் ஏற்படுவது பகல் கனவே.

## நிலையில்லா வேலை

பல்லாயிரம் பலகோடி தொழில் புரிவோருக்கு அடிக்கடி வேலை இல்லாமற்போவதும் இந்தக் காரணம்தான் என அறிக. முந்திய அத்தியாயத்தில் இது விஷயமாக வரைந்துள்ளோம். கூலி வேலை எந்தக் காலததிலும் நிலையில்லாத வேலை. கூலி வேலையின் ஸ்வாபீகமே (தன்மை) இது. இந்த லட்சணம் எல்லாக் கூலி வேலையிலும் உளளது. தினசரி சம்பளமானாலும் சரி, அல்லது வாரச் சம்பளமானாலும் சரி, அல்லது மாதச் சமபளம் ஆனாலும் சரி, எந்தச் சம்பளமானாலும் எல்லாம் நிலையில்லா வேலைகளே.

தனிவுடைமைத் திட்டத்தில் சில வேலைகள் நிலைத் திருக்கும் வேலைகளெனச் சொல்லுவார்கள். அவை யாவன, ஜட்சு முதலிய பெரிய சமபளம் பெறுவோர் வேலை என்பார்கள். ஆனால் இந்த வேலைகளும் அரசுகள் இஷ்டத்தைப் பொருத்திருககின்றவை யால், இவைகளும் நிலை இல்லா வேலைகளே!

பொதுவுடைமையின்படி எலலாத் தொழில்களும் உழைப்பவனுக்கு உரியவை. தொழிலை வினியோகிக்கலாமேயொழிய, தொழிலை நிறுத்த யாருககும் ஆதிக்கமில்லை. தொழில ஒருவனுடையதன்று. ஒவ்வொருவனுக்கும தொழில் புரிய உரிமை உண்டு. தொழில் செய்தாலொழிய எவ்வுயிரும் நடவா. ஆதலால் தொழில் செய்பவனுககெல்லாம் சொந்தம. தொழில் போதாமற்போமாகின், தொழிலை உண்டாக்குவது சமூகக கடமையாகும், உலகில் எண்ணிறந்த தொழில்கள் கோடானு கோடி காலம் வரை செய்வாரற்றுக் கிடக்கின்றன. உலகில வேலை இல்லாமல் எந்தக் காலத்திலுமில்லை. சிலரால் சில முக்கிய தொழில்களாகக் கொள்ளப்பட்டிருப்பதாலும், முக்கிய உபயோகமுள்ள தொழில்கள் செய்யாமல இருப்பதாலும் பலருக்கு அந்தத் தொழில்களைச் செய்யும் உரிமை அற்றுப் போயிற்று. இந்தச் சுதந்திரம் இழந்த உலகம் வேலை இல்லாத் திண்டாட்டத்தில் மூழ்கி கிடக்கலாயிற்று. யாரும் தொழில் செய்யவும் சுதந்திரத்தைத் திரும்பப் பெறச் செய்வதும்தான் பொதுவுடைமையின் நோக்கமாகும். இந்தச் சுதந்திரத்தைப் பெற்ற உலகம் தொழில் இல்லாமையால் வருந்த இடமிராது. ஒவ்வொருவருடைய

தொழிலும் அவர்கள் ஆதிக்கமுள்ளவரை அவர்களுடையதாகும். அவரவர் தொழில் அவரவர்களுக்கு நிலைக்கும. சிக்கனமென்ற மோசடி உலகில் தோன்றுது.

தனியுடைமை உலகில் தொழில் செய்யத் திறமை உள்ளவனுக்குத தொழில் இல்லை என்பார்கள். பல்லாயிரம் உபயோகமுள்ள தொழில் இருந்தும ஏன் உலகில் கோடானு கோடி மனிதன் வேலை இல்லாமல் பட்டினி கிடந்து துக்கிக்க வேண்டும்? இதனுல் பசியும், பிணியும பல கோடி மனிதரை ஏன் பீடிக்கவேண்டும்? முன கூறியவாறு இந்த அகோரச் சம்பவத்திற்கு, லாபம் போன்ற பிசாசே காரணகாகும். இந்த முதலாளி உலகில் லாபம் கிடைக்கும் வரைதான் எத்தொழிலும் செய்ய இடமுண்டு. லாபம் குறைநதாலும் சரி, லாபம கிடைக்காமல் போனுலும் சரி, தொழிலாளிகளுக்கு வேலை குறைந்தும் அல்லது இல்லாமையுமாகும். பல வேலைகள் இருந்தும் வேலை இல்லாமையும் வேண்டிய உணவு இருந்தும் உணவு இல்லாமையும இவ்விரண்டு கொடுமையும் இந்தத் தனியுடைமை உலகில் தான் நிகழும காட்சி. இந்த உலகில்தான் வேலை செய்யும் திறமை பெற்றவர்களுக்கு வேலை இல்லாமையுப, உணவுள்ள உலகில் பட்டினி கிடப்பதும், இவ்விரண்டு லட்சணத்தைக் காண்கின்றேம். மொத்தத்தில் வேலை உரியவனுக்கு உணவு இல்லாத காட்சி தனி உடைமைத் திட்டத்தைப் பொருந்தியதென்று உணர்க.

பொதுவுடைமைத் திட்டத்தில், வேலை செய்யாதவனுக்குத்தான் உணவு இல்லாமற்போகும். வேலை செய்யத் திறமை உள்ளவனுக்குச் சதாகாலமும் வேலை கிடைத்தே தீரும். வேலை இல்லாத் திண்டாட்டம் ஒரு கண்ணிமைப் பொழுதேனும காண்பதரிது. இந்த அழகிய திட்டத்தில் வேலை உபயோகத்திற்கே செய்யவேண்டியதாதலால், லாபம் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் வேலை நடந்தே தீரவேண்டும். பசியும், பிணியும் லாபத்தைப் பொருந்தியவைகளல்ல. வேலை இல்லாமையைப் பொருந்தியவை. ஆதலின் இந்தச் சமுதாயத் திட்டத்தில், உபயோகத்திற்குத் தொழில் யாவும் செய்யப்படும். உபயோகத்திற்குரிய தொழில் பலகோடி பல்லாயிரம் வருஷம் வரை செய்ய உலகில் நிறைந்துள்ளபடியால், எந்தக காலத்திலும் தொழில் இல்லாமல் இராது. எந்திரங்களால் பலர் செய்யும் வேலை, சிலர் செய்ய நேரிடுமே அதனுல் சிலருக்கு வேலை இல்லாமற போகுமென்ருல் அது எநதிரங்களால் புதுப் புது வேலை முளைத்துக்கொண்டே வருமாதலால், எந்தக காலத்திலும் வேலை இல்லாமல் இராது. தற்போது லாபத்தின் மேல் வைத்துள்ள மோகம் உபயோகத்தின் மேல் வைக்கும் பட்சத்தில் எல்லோருக்கும வேலை கிடைக்கும. நிலையில்லா வேலையை நிலைக்கச் செய்வது பொதுவுடைமைத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்று.

# 13

# பொதுவுடைமையும் கல்வியும்

தற்கால உலகில், சாவ சாமான்ய ஜனங்களுககும கல்வி பெறும்படி வசதிகள் உணடாக்கப்படுகிறதாகச் சொல்கின்ருர்கள், ஆனல் அனுபவத்தில் அவவிதமில்லை. உயர்தரக கல்வி சிலரே அடையக்கூடும. பெருமபான்மையோர் கீழ்த்தரப் படிப்பை அடைவதே கஷ்டம். நாகரிகம் அடைந்துள்ள தேசங்களில் கட்டாயப் படிப்பு என்ற ஸ்தாபனத்தை உண்டாககி இருக்கின்ருர்கள். இந்த ஆரம்பக் கல்வியும, கலாசாலைகளில் பெருமை உயர்தரக கல்வியும், முதலாளி ஆதிக்கத்தை வளர்க்கத தகுந்தவைகளேயொழிய பல கோடி பல்லாயிரவர் பிழைக்கும் வழியைக் கற்பிக்கக்கூடியவைகளாக இல்லை. முதலாவது ஆரமபக் கல்வியை எடுத்துக கொள்வோம். இதில் எழுதப்படிக்கத் திறமை உண்டாக்குவதாகச் சொல்கின்ருர்கள். சில ஊர்களின் பெயரை எழுதப்படிக்கவும், கணிதத்தில் கூட்டல் கழித்தலும், தேசங்களில் நடந்த சண்டைகளையும, சில கதைகளையும் கற்றுக்கொடுக்கிருர்கள். இந்தக்

கல்வியோடு பெரும்பான்மையோரைப பிழைக்க வழி தேடும்படி விட்டு விடுகின்றனர்கள். இந்தக் கல்விக்கு மேல் தொடர்ந்து படிக்க வேண்டுமானுல் செகண்டரி பள்ளிக்கூடங்களிலும்,கலாசாலைகளிலுந் தான் படிக்க முடியும். அதற்குப் பணம வேண்டும். சாமான்ய ஜனங்களுக்கு இதற்குச் செலவு செய்ய அசக்தர்கள். ஆதலால் உலகிலுள்ள பெரும் பான்மையோரும் அவர்கள சந்ததியாரும் சொற்ப கல்வி கேள்வியைக் கொண்டுதான் வாழ்வை நடத்த வேண்டும். இதன் பயன் உலகில் நடந்தேறி வரும மதச்சண்டைகளாலும், ஜாதிச் சண்டைகளாலும், அகால மரணங்களாலும், நோய் நொடிகளாலும், விஷய ஞான சூன்யத்தாலும் பெரும்பாலோருடைய மூட நம்பிக்கையாலும் தெரிந்து கொள்ளலாம். அமெரிக்க தேசத்து ஆசிரியர் ஒருவர் உலகில் நிறைந்துள்ள அறியாமையைக் கண்டு, மனிதன் உலகில் தோன்றி 10 லட்ச வருஷமாகியும், முதலாளி ஆதிக்கம 10,000 வருஷமாக உலகில் பரவி இருந்தும, மனித குலம இன்னும மிருகத் தன்மையிலேயே இருந்து வருகின்றதென்றனர். முதலாளித்துவத்தின் பயன் இதுவானுல் அதன் அபாயத்தையும், அதன் பயனினமையையும விளக் கவும் வேண்டுமா? கோடான கோடி மாந்தருக்குப பகுத்தறிவுத் தன்மை இன்னும் விளங்காமலிருக்கக காரணம் இதுவே. ஞானத்தில சிறந்தது விஞ் ஞானமே. அதனை அறியாதார் பல கோடியே. இதற் குக் காரணம் முதலாளி திட்டம் இதுவரையும சர்வ கல்வி கேள்வியினைச் சாமான்ய மக்களுக்கு எட்ட

வொட்டாமல் செய்து வந்ததே.) முதலாளி திட்டத்தின் இயற்கைபடி அதன் இனத்தார் உயர்தரக் கல்வியில் செல்வாக்கைப் பெற்று சலுகைகள உண்டாக்கிக்கொள்ள வேண்டியதேயொழிய பாமர மக்கள் அக்கியானத்திலிருந்து விலசவும், சகல கல்வி கேள்விகளைப் பெறவும அதன் நோககமில்லை. பாமர மக்கள் ஊழியஞ் செய்யவும அநதத் திட்டத்தினர் அரசு புரியவுந்தான் அந்தத் திட்டததின் பழக்கமாகும. இந்த கருததைத தங்கள் நூல்களில் சிறந்ததென்று வழங்கும பகவத்கீதையில அமைத்துள்ளார். | பாமர மக்களுக்கெனப் பரிந்து நடிக்கும் முதலாளிகள முதல்வராகிய மகாத்மா காந்தியும ஏழைத் தொழிலாளிகள் தனவந்தர்களாக விருமபலாகாதெனறும, தத்தம் தொழிலையே செய்துவர வேண்டுமென்றும உபதேசிக்கினறுர். ஒரு பைசா கூட இல்லாதவனுக்கு இரண்டு பைசா அகபபட்டால போதாதா எனற சித்தாந்தமே கைராட்டினத்தில் காட்டப்பட்டிருக்கிறது. ஏழைகள் ஏழைகளாக இருத்தல் வேணடும், அறியாதார் அறியாமலே இருததல வேண்டுமென்ற சிததாந்தம்தான் முதலாளி திட்டத்தில் அடங்கியுள்ளது./ இந்தச சித்தாந்தத்தை இன்றைகரும் உலக முழுமையும ஊர்ஜிதபபடுத்தி வருவதைப் பிரததியட்சத்தில் காணலாம். கீழ்த்தரக கல்வி இவ்விதமானல், உயர்தரக்கலவி எததகையது என்று சறறு கவனிப்போம. முதலாளி திட்டத்தை நிலைகக வைக்கும் கல்வியே இந்தத் திட்டததின் முக்கிய நோக்கமாகக் கொண்டுளளது. கற்பிக்கும் சரித்திரங்களும், அவர்களுடைய சண்டைகளையும் வம்புகளையும் விசேஷித்துப்பேசும் சரித்திரங்

களே. நியாயச் சட்டங்களும, தங்கள் சொத்துக் களைக் காபபாற்றும கருவிகளே. தத்துவ ஞானமும் அவர்கள் ஆதிக்கத்தை வளர்க்கும் ஞானமே. மற்ற கல்வியாவும் அவர்கள் நடத்தும் அரசியலுக்கு உதவ வேண்டிய கல்வியே. மதக்கல்வியும் முதலாளி திட்டத்தை ஆதரிக்கத் தகுந்தவையே. நீதியும், நெறியும் அவர்கள் திட்டத்தை வாழ்த்தி வணங்க வேண்டிய முறையே. முதலாளி திட்டத்தில் கொடுத்துவரும கல்வியின் லட்சணம இவை போன்றவையே. ஜனசமூகம் எப்படி வாழ்கின்றது, எவ்விதம் உண்கின்றது என்ற விஷயங்களைக் கற்பித்தல் அந்தத் திட்டத்தின் பொறுப்பன்று. கிராமத்தில் விளைவு போதுமா, போக்குவரத்துச் சாதனங்கள் உண்டா, கால்நடை அபிவிருத்தி அடைகின்றனவா, இந்தக் கேள்விகளுக்குரிய கல்வி இந்த திட்டத்திற்குப் பெரும்பான்மையும் அதீத மென்று சொல்லலாம். விவசாயம் எந்த விதங்களில் அபிவிருத்தி அடையும்? கைத்தொழில் வேலைகளில் எவை அத்தியாவசியமானவை, எவை உபயோக மற்றவை என்று விளக்கிக் காட்டும் கல்வி அல்ல. உலக நாசத்திற்குரிய மகாபாரத, ராமாயண சண்டையைப் பற்றிய கல்வியும், குற்றத்தைக் கொடூர சிகிச்சைகளால் வளர்க்கும் கல்வியும் லாபத்தை மாத்திரம் கொடுக்கத் தகுந்த பொருளா தாரக் கல்வியும—இத்தகைய கல்வியே அதன் நோக்கமாகும். உலகிலுள்ள ஞானத்திற்கெல்லாம் உயர்ந்ததும், வாழ்வுக்கு அத்தியாவசியமான மெஞ்ஞானக் கல்வியைப் பாமர மக்கள் சகலரும் அறிந்து தங்கள் வாழ்வை இனிது நடத்துவதற்குத்

தகுந்த வசதிகளை உண்டாக்குவதும் அதன் கடமை அல்ல. இந்தத் திட்டத்தில் பழமையானதும், நாசத்திற்குரியதும், விவேக சூன்யத்திற்கு வேண்டியதுமான கல்வியே அதிகரித்து வளர்க்கப்படுகின்றன. நவீன எண்ணமும், நவீன ஞானமும், நீதியும், நெறிமுறையும் இத்திட்டத்தில் விலக்கப்பட்டவை. இத்தகைய மனப்பான்மையால்தான் பண்டைக் காலமுதல் பலவாயிர வருஷங்களாகக் கோடான கோடி மாந்தர் தெளிவு அடையாமல் மூடபக்தியிலேயே நின்று மிருக வாழ்க்கையில் இருந்துவருகின்றனர். நவீனக் கல்வி இல்லாமையால், பலகோடி மனிதர் பசியும், பட்டினியுமாய் இருந்து வருகின்றனர். இத்தகையக் கல்வி உலகில் கற்பிக்கும்வரை சண்டையும், போரும் மதத்துவேஷமும், ஜாதிபேதமும், பசியும், பட்டினியும், நோயும், அகாலமரணமும், மூடபக்தியும், அறியாமையும் வளர்ந்தே வரும். இன்று உலக முழுதும்படும் துயரமும் இந்நிலைமைக்கு அத்தாட்சியாகும்.

பொதுவுடைமைத் திட்டத்தில் விஷய ஞானமே விசேஷமாகக் கற்பிக்கப்படும். இதுகாறும் வார்த்தை ஞானங்களாகிய செய்யுள், காவியம், புராணம், நிகண்டு முதலியவைகளை முக்கியமாகக் கற்பித்து வருகின்றார்கள். இனி இதன் விஷயமாகச் செலுத்தும் காலம் மிகுதியும் குறைந்து, விஷய ஞானங்களாகிய விளைவு, வளர்ச்சி, விநியோகம், உடற்கூறு, உணவு, சுகாதாரம், பூமிநூல், வானநூல், பௌதிகம், ரசாயனமுறை முதலியவைகளைக் கற்பதில் மிகுதியும் காலத்தைச் செலுத்தப்படும். குழந்தைகளை

வளர்க்கும்விதம் முதல் தாய் தந்தையர்களுக்குக் கற்பிக்கப்படும். குழந்தைகள் முதலில் தெரிந்து கொள்ள வேண்டியதும், அடைய வேண்டியது மாகிய உடல் ஞானம், பொருள்களின் ஞானம, உயிர்கள் ஞானம ஆரம்பத்திலேயே கற்பிக்கபபடும. தங்கள் ஊர்களில் உண்டாகும் பொருள்கள் அவைகள் வினியோகமாகும் விதங்கள் கிராம நட வடிக்கைகள் முதலிய விஷய ஞானத்தை சிறுவர் களுக்குப் புகட்டப்படும். ஊர்கள் பெயரும் பட்டணங் களின் பெயரும் சண்டைகள் நடந்த காலங்களிலும், இதிகாச, புராண வாய்ப்பாடங்களை முற்றிலும் ஒழிக்கப்படும். உயர்தரக் கல்வியில் பழைய காவியங் களில் பெரும்பாலும் கவனம் செலுத்துவதுபோய், தற்காலப் பொருளாதார ஞானத்தையும், பிரபஞ்ச உற்பத்தி, உலக உற்பத்தி, சீவர் உற்பத்தி, ஜன சமூக உற்பத்தி முதலிய மெஞ்ஞானத்திற்கு அடிப் படையாயுள்ள விஷயங்களைக கற்பிக்க வேண்டி வரும். தனது தேச வாழ்வினுடையவும், அகில தேச வாழ்வினுடையவும் சம்பந்தா சம்பந்தங்களை இளைஞர் முதல் முதியோர் வரையில் தெரிந்து தத்தம் நட வடிக்கைகளைச் செலுத்தும மார்க்கங்களைக்கற்பிக்கப் படும். சகல விஷயங்களையும் தெரிந்து நடக்குமபடி கல்வியே கற்பிக்கப்படும். சிறு வயது முதல் விஷய ஆராய்ச்சிகளில் மனத்தைச் செலுத்துமாறு சிறுவர் களைப் பழக்கத்தில் கொண்டுவரப்படும். எண்ணும் எழுத்தும மேலுள்ள தற்கால செல்வாக்குபோய், வஸ்துக்களின் மேல் மிகுதியும் கவனம் செலுத்தப் படும். பொதுவுடைமைத் திட்டத்தில் பகுத்தறிவும,

மணப்பானமையும் உண்டாக்கப்படுவது முக்கிய மானதால், குருட்டு நம்பிக்கை, கடவுள் பக்தி, மந்திர தந்திரங்கள், மோசடிகள், சோதிடம் முதலிய துர்ப்பழக்க வழக்கங்கள் முதலிய கற்பனைகள் யாவும் திட்டத்தில் விலக்கப்படும். பொதுவுடைமைத் திட்டத்தில் தத்துவ ஞானத்தில் வீண் காலத்தைக் கழிப்பதுபோல் விஷய ஞானத்தில் முதியோருடைய கவனத்தைச் செலுத்த வேண்டிவரும். வீண் தர்க்கங்களுக்குப் பதிலாக ஆராய்ச்சியே மிகுதியாகப் பழக்கத்தில் கொண்டுவரப்படும்.

தற்காலத் தனிவுடைமைத் திட்டத்தில் ஸ்தீரி புருஷ சம்பந்தத்தைக் குறித்து அவரவர்கள் மிருகத் தன்மைகளுக்கு விட்டுவிடப்படுகின்றார்கள். பொதுவுடைமைத திட்டத்தில் விவேகமாக ஸ்தீரி புருஷ சம்பந்தத்தை நடத்துமாறு கற்பிதுக் கொடுப்பதோடு, அதற்குரிய திட்டங்களும் வற்புறுத்தப்படும். சம்சார வாழ்க்கை,தனிவுடைமைத்திட்டத்தில் ஸ்தீரி புருஷ சுகததிற்கென சொல்லப்படுகிறது. அதனால் இலவாழ்க்கை பொதுவுடைமைத் திட்டத்தில் ஸ்தீரி புருஷருக்கு மாத்திரம் அல்லாது சந்ததியின நலனுக்காகவே ஏற்பட்டதென வற்புறுத்தப்படும். பிள்ளைகளைப் பராமரிக்கும் கடமை புருஷன் பெண்சாதிக்கு உரித்தாயினும் அவைகளைப் பெறற பிறகும் பெறுவதற்கு முன்னரும், ரட்சித்தல் ஜன சமூகத்தின் கடமைகளில் ஒன்றெனப்படும். இந்த மானிடக் கொள்கையின்படி கர்ப்பவதிகளைக் கர்ப்ப ஆரம்ப முதல் பொது ஜன ரட்சணையில் வைக்கப்படும். அதற்கு வேண்டிய ஞானமும் புகட்டுவதோடு, பிரசவ

காலத்திற்கு முந்தியும், பிந்தியும வேண்டிய சகல அனுகூலங்கள் யாவும பொதுவுடைமைத் திட்டத்தில் அளிக்கப்படும. இந்த அழகிய திட்டத்தில் பிள்ளைகள் சிறுவயது முதல் குழந்தைகள் வளரும் பொது ஸ்தாபனங்களில ஆடல், பாடல், சங்கீத மத்தியில் பயிற்சி அடைந்துவரும்.

## தொழிற்சங்கங்கள்

தொழில் இருவகை. நிலத்தில் விளைவு செய்யும் தொழில் ஒன்று. பெரும்பான்மையும் இந்த வேலை கிராமாந்திரங்களில் செய்யப்படும். எந்திரங்களைக் கொண்டு நகரங்களில் செய்யும வேலை மற்ருென்று. நாகரிகம் படைத்த உலக முழுதும், எந்திரங்களைக் கொண்டு செய்யும் வேலை அதிகம. முற்காலங்களில் கையால் செய்து வந்த வேலைகளைத் தற்போது எந்திரங்களைக் கொண்டு செய்கின்றனர். இதற்குப் பல காரணங்கள் உள.

மனிதனுக்கும் மற்ற மிருகங்களுக்கும உள்ள வித்தியாசம கைக்குப் பதிலாக எந்திரங்களை உபயோகிபபதே. நாகரிகம் பெருகப் பெருக எந்திரங்களும் அதிகரித்தன. எந்திரங்கள் இல்லாமல் மனிதன் நாகரிகமடைந்திருக்க முடியாது. ஆதிகால முதல், எந்திரங்களே மனிதனுக்குத் துணையாக இருந்து வந்தன. உழவுக்குக் கலப்பையும், கட்டடத்திற்கு கொத்தும் சவாலி வெட்டியும், கடல் யாத்திரைக்குப் படகும், கப்பலும், சணடைக்கு (வேட்டைக்கு) அம்பும் வில்லும, நெய்தலுக்குத் தறியும் ஆகப்பலவித எந்திரங்கள் அதிக அதிகமாக நாள

டைவில் மனித உபயோகத்திற்குப் புதிதாகக் கற்பிக்கப் பட்டு வந்திருக்கின்றன. இன்றைய தினம் மனிதன் உபயோகத்திற் கின்றியமையாதனவாகிய எந்திரங்கள் முழுமையும் முற்கால எந்திரங்களிலிருந்து வெளிப்பட்டனவாகும்.

முககிய எந்திரங்கள இல்லாவிடில் உலகிலுள்ள சீவர்கள் தற்காலச் செலவத்தையும, ஓழிவு நேரத்தையும் பெறுதல் அரிது. \ எந்திரங்களால் மனிதனுக்கு ஓய்வு நேரம் அதிகரித்தது. பழைய காலத்தில் விஷய ஞானமும், இலககிய வன்மையும் பெற இடம் கொடுத்தது. இதனை உணராமல் எந்திரங்களைப் பழிப்பது மதி ஈனமாகும். கலப்பையும் மண்வெட்டியும், தறியும் மனிதனுக்கு எவ்விதம் அத்தியாவசியமோ அவ்விதமே டிராக்டரும், சம்மட்டியும் புகை அல்லது மின்சாரக் கப்பலும் தேவையே. இருக்கும் கெடுதி எந்திரங்களால் அன்று. அவைகளைப் பொது மக்கள் உடைமையில் வைக்காத தோஷத்திலென அறிக.|

எந்திரங்கள் சிலர் கைக்கொண்டு பலரை அடிமைப்படுத்தி வருவதால்தான், தற்கால நாகரிகத்தின் குறைவே. இதனை இங்குச் சற்று விபரமாக விளக்குவோம். ஆதிகாலத்தில் மிருகங்கள் போலவே பல வேலைகளைக கை கால்களால் செய்து மனிதன் பிழைத்து வந்தான். நிலத்தை உழக் கலப்பையும், நெசவு செய்யத் தக்கிலியும், சர்க்காவும, ஆற்றைக் கடக்க படகும், மிருகத்தை வெல்ல அம்பு வில்லையும கண்டுபிடித்த பிறகு வாழ்வில் சற்று அபிவிருத்தி அடையப்பெற்ருன். அது முதல் நாளடைவில் அபி

விருத்தி செய்துவந்தான். இந்தக் காலமெல்லாம் அவனவன் தொழிலுக்கு வேண்டிய ஆயுதங்கள் அவனவன் சொந்தத்தில் இருந்து வந்தன. தொழிலுக்கு வேண்டிய ஆயுதங்கள் தொழிலாளி வயமே இருந்து வந்தன. செய்யும் தொழிலுக்கும், அதற்கு வேண்டிய ஆயுதங்களுக்கும் தொழிலாளியே எஜமானனுய் இருந்து வந்தான். தொழில நிலைமை பூர்வகால முதல் மத்திய காலம்வரை இவ்விதமே இருந்து வந்தது. நிலசசுவான்தார்களும் அதிகமிலர். பெரும்பான்மையோர், தத்தமக்கு வேண்டிய நிலங்களைச் சாகுபடி செய்து, அக்காலத்துக்குரிய பகுதி செய்த மீதியை தாமே அனுபவித்து வந்தார்கள். மனிதனுடைய அறிவு விளங்க விளங்கப் பற்பல எந்திரங்களைக் கண்டுபிடிக்ச முயன்ருன். மனிதனுடைய வாழ்விற்கு வேண்டிய பொருள்களும் அதிகரித்தன. அதனைச் செய்யவும் அபிவிருததி செய்யவும் நேரிட்டது. பல்லாயிரம் பேருக்கு வேண்டிய பொருள்கள் ஒருவர் இருவரால் செய்து தர முடியாதாகையால் 1000, 10,000, 10,0000, 10,00,000 பேரால் செய்ய நேரிட்டது. இதுதான் தற்காலக கைத்தொழில் பெருக்கின் காரணம். இத்தொழில் பெருக்கின நிமித்தம் பெரிய பெரிய ஆயுதச்சாலைகளும், கப்பல் சாலைகளும், நெசவுச் சாலைகளும், ரெயில்வேக்களும் கரிச்சுரங்களும், இரும்பு சுரங்கங்களும், எண்ணெய்ச் சுரங்கங்களும் ஏற்படுத்தப்பட்டன.

ஒருவர், இருவா செயதுவந்த வேலைகளை ஆயிரம், பதினுயிரம லட்சக்கணக்கான தொழி

லாளர்கள் சேர்ந்து செய்ய நேரிட்டது. இதுவே தற்காலத் தொழிற்சாலைகள் தோன்றிய விபரம். இத்துடன் தொழிலும், தொழிற்சாலைகளும் தொழிலுககு வேணடிய கருவிகளும் (Tools, Machinery) நின்ருல் உலகிற்கும், அதில் தொழில புரிவோருக்கும் யாதொரு கஷ்டமும் வந்திருக்காது. தொழில் கருவிகளுக்கும், அதாவது தொழிலாளி உபயோகித்து வந்த கலப்பை, மண்வெட்டி, வண்டி முதலிய ஆயுதங்கள் தொழிலாளி சொந்தத்தி லிருந்தது. தொழில் செய்யாதவனுடைய ஆதிககத் தில வந்தன. இந்த மாறுதல் வந்த விபரம் ருசிகர மானது. \ஒரு மண்வெட்டியைக் கொண்டு செய்து வந்தவேலை 10;100; 1000; மண்வெட்டியுடன செய்யும் வேலையாக மாறியது.\

ஒரு தச்சன் ஓர் உளியைக்கொணடு செயது வந்த வேலை, ஆயிரம் பதினுயிரம் உளிகளைக் கொண்டு செய்யும் வேலையாக மாறுதல் அடைந்தது. அதே பிரகாரம் ஆதிகாலத்தில் செய்து வந்த பல வேலைகள் பரிணமித்தன. இந்தப் பரிணுமமே, தற்காலத் தொழிற்சாலைகளின் முக்கிய இலக்கண மாகும். இந்தப் பரிணுமத்தை அதாவது அபி விருத்தியை, சிலரே கைககொள்ள ஆரம்பித்தனர்.

இவ்விதமாகப் பரிணமித்த தொழிற்சாலைகளுக்கு வேண்டிய கருவிகள் சிலரால் கைப்பற்ற நேரிடடது. கருவிகளுக்கும், அவை செய்வதற்கும் பணம் வேண்டும. பணம் படைத்தோர் சிலரே. இச்சிலரே தற்காலத் தொழில்களுககு வேண்டிய கருவிகள் உடைத்தாயினர். ஆனுல், கருவிகள் தாங்களே

வேலை செய்யா. மனிதர் வேணடும். வேலை இலலாத் மனிதர் கோடான கோடி. இவர்களை, கருவிகளைப் படைத்த சிலரே ஆட்கொணடனர். இவர்கள் தாம தற்கால தொழிற்சாலைகளில் தொழிலபுரிவோர்.

குடித்தனக்காரர்களிலும், இத்தியாதி காரணங் களாலேயே, தாங்கள் பயிரிடும நிலஙகளை இழந்து நிலச்சுவான்தார்களுக்கு அடிமை பூண்டு பணணை ஆளாய் விட்டனர். ஆதிகாலத்தில் நிலத்தைப் படைத்தவனே, பயிருககுச் சொநதககாரனுய் இருந்து வந்தான். ஆனுல் சில போர் வீரர்கள் சண்டை ஆட்களை சேர்ததுக்கொண்டு பிரதேசங் களைக் கைபபற்றி வந்தபடியால ஜெயித்த ஊரில் இருந்து வந்த குடியானவர்களுடைய நிலங்களும ஜெயித்தோனுக்குச்சொந்தமாகி, அவனிடம் பணணை வேலை செய்து அதன் பலனுகிய கால் ஆழாககு அரிசியும், கால் பண மும் பெற நேரிட்டது. இவ்வித மாக, நிலதனதைப் படைத்தோர் நிலமில்லாதவர் களாகவும், ஆயுதங்களைப் படைததோர் ஆயுதங்கள இல்லாதவர்களாகவும், கூலிக்கு வேலை செய்து பிழைக்க நேரிட்டது. இன்று உலகில் 100ககு 90 பேர் இந்தத் தூர்பாககியததிலிருத்து துர்லப வாழவைச சகித்தும், சகியாதவர்களாய இருந்து வருகின்ருர்கள். இதுதான் தற்கால கோடான கோடி மாநதரின நிலைமை. தொழிலுக்கு வேண்டிய தொழிற்சாலை களும், கருவிகளும் பணமும படைத்தவன் முதலாளி யானுன. தொழிற்சாலையில் யாதொரு சொநதமு மில்லாதவனும் அதில் உபயோகிக்கும் கருவிகளுக்கு உரிமை இல்லாதவனும், ஜீவிக்கப பணமில்லாத

வனும் எந்திரச சாலேகளில் வேலே செய்து கூலி வாங்கும் தொழிலாளியானுன். | அவ்விதம் நிலமும் நீரும் படைத்தவன் சமீந்தார், சுரோத்திரம்தார், மிராசுதார் ஆகிய நிலச்சுவான்தாராகினர். அதில் வேலே செய்து கூலி வாங்கிப் பிழைக்கும் பண்ணே ஆட்கள் சிருஷிகராஞர்கள்.

சில முதலாளிகளும, நிலச்சுவான்களும தொழிற்சாலேகளேயும் நிலங்களேப் பற்றிய கோஷத்தால் பலகோடி பல்லாயிரம் தொழில் இழந்து, நிலமிழந்து நீரிழந்து வாய்ககும் கைக்கும் எட்டாத வாழ்வை வகித்து வரும நிலேமையைத்தான் பொருளாதார நிலேயெனப்படும்.

இவ்விதமாக முதலாளி ஆதிககம் பெருகவும், தொழிலாளா கிருஷிகள் திணரவும். சகிக்கக்கூடாத பொருளாதார நிலேமை ஏற்பட்டது. செல்வப் பெருக்காலும. அதிகார போகத்தாலும முதலாளி தொழிலாளருடைய வாழ்வைச் சகிக்கமுடியாது நிலேமையில் கொண்டுவரத் தலேபபட்டான். வேலே செய்யும் நேரத்தை அதிகரித்தான். கூலியைக் குறைத்தான். இன்னும் பலவித இம்சைகளேச் செயது வந்தான். | வேலேயிலிருந்து தனக்கு வேண்டாதவர்களேத் தள்ளினுன். ஏழைகளின் சார்பாகப பேசும தொழிலாளர்களேப பழிவாஙக முயன்ருன். தனக்கு லாபமில்லாத காலத்தில தொழிற்சாலேகளே மூடிவிட்டு, அதில் வேலே செய்து பிழைத்து வந்தவர்களேத் தெருவில் தேங்க விட்டான். | பணம் நெருக்கடி காலங்களில் சிக்கனம், சிக்கனம் என்று பலரை

வேலையிலிருந்து நீக்கினான். பெண்களை அபாயகர மான வேலைகளில் வைத்து வாட்டினான். சிறு பாலகர் களை விழித்து இரவிலும் வேலை செய்யப் பழக்கினான்.

இவ்வுலகில், எல்லாக் கொடுமைகளுக்கும் வரம் புண்டு. எதுவும் வரம்பு கடந்தால் பின்னுதைக்கு இடமுண்டாகும். இவ்விதக் கொடுமையைச் சகியாத வராய், தொழிலாளர் தங்களுக்குள் இயற்கையாக வுள்ள உரிமையை உணர ஆரம்பித்தனர்| அதாவது தங்கள் கூட்டுறவின் சக்தியைக் காட்ட ஆரம்பித் தனர். இந்த உணர்ச்சி உண்டானதும் தாங்களே ஒன்று கூடி அதில் எழும் ஒற்றுமை சக்தியைக் காட்ட ஆரம்பித்தனர். இந்த ரகசியத்தைப் பலகாலம உணர்த்தியவர் 1848ல் தொழிலாளர் அனுதாபி ஆகிய **காரல் மார்க்ஸ்** என்ற பெரியார். தொழிலாள ருக்குள் நிறைந்துள்ள ஒற்றுமைச சக்தியை எடுத் துக் காட்டினார். அது முதல் தொழிலாளர் சங்கங் கள் முளைககத தலைபபட்டன. தங்கள் சங்கங்களைக் கொண்டு முதலாளி அட்டூழியங்களை எதிர்க்க முனைந்தனர். இந்த எதிர்ப்பு வேலை நிறுதத உருவத் தைப் பெற்றன. சில இடங்களில் "பைடோஜா" அதாவது எந்திரங்களை ஓடாதிருக்கும் உருவத்தைப் பெற்றன.\ மற்றும் சில இடங்களில், முக்கியமாக ஐரோபபிய தேசதது உள் நாடுகளில் பயங்கரமான இம்சை • உருவததைப் பெற்றது இத்தியாதி எதிர்ப்பை முதலாளி சகியாதவனாய், தன்னுடைய ஆயுதமாகிய கதவடைப்பை அதாவது தொழிலாளி களைத் தொழிற்சாலையிலிருந்து நீக்குதலை, பிரயோகப படுததலானான். இவ்விதமாகத்தான் தற்கால உலகம்

இவ்விருதரததாரின் போர்முனைகளில் நின்று வருகின்றது. நிராயுதபாணிகளான தொழிலாளர்கள் தங்கள் பலத்தைத் தெரிந்து கொண்டவுடன் முதலாளிகளுடன தங்கள் சமத்துவத்தைக் காட்ட வன்மை அடைந்தனர். இந்த வனமை உபயோகிக்கும் தன்மையில்தான் தொழிலாளருடைய சுகதுக்க வாழ்வு சார்ந்திருக்கிறது. இந்த வன்மையைக் காட்டி பொருளாதார சமத்துவம் பெறவே தற்கால தொழில் சங்கங்களும் கிரிஷிகர் கூட்டங்களும் ஏற்பட்டுள்ளன. உலகம் தற்போது இரண்டு தரத்தாரின் ஆதிககத்தில் உள் அடங்கி இருக்கின்றது. ஒரு பக்கம பொருளையும் தொழிற்சாலைகளையும், கருவிகளையும படைத்த சிலர் இருந்து வருகின்றனர். இன்னொரு பக்கம் கை காலுடன் உழைக்கும், தங்கள் தொழில்சங்கங்கள மூலமாகத தங்கள் சமத்துவத்தைக் காட்டியும் வரும் பல கோடி பல்லாயிரக் கணக்கான தொழிலாளர் பலர் இருந்து வருகின்றார்கள். தொழிலாளர் சங்கங்கள் அமைத்துப் பெருகி வரவும், முதலாளிகளும் இதற்கு நேர் விரோதமாக, தாங்களும் முதலாளி சங்கங்களும உலகில் பெருகி வருகின்றன. இனி உலகம் யாருடைய ஆதிக்கத்திற்கு உட்படுமோ அது இருதரத்தாருடைய வன்மையைப் பொருந்தியதென உணர்க.

தொழிற்சங்கங்களும, கிருஷிகர் கூட்டஙகளும வலுத்து உரம்பெற வேண்டுமானல, தங்களுடைய சங்கங்களும் கூட்டங்களும் பரிணமித்த சரித்திரததையும் அவைகளின் நோக்கங்களையும் தொழிலாளர் கிருஷிகர் தெரிந்து கொள்ள வேண்டும். இதுகாறும்

50 வருஷ காலமாகச் சங்கம மூலமாகவும், கூட்டங் கள் மூலமாகவும் முயன்று வரும் நோக்கங்கள் ஜெயம் பெற வேண்டுமானால் தொழிலாளர் முதலில் தங்கள் வாழ்வை உயர்த்த விருப்பம் உண்டாக வேண்டும். இதுகாறும் சங்கங்கள் கூலி உயர்வுக் கும், விடுமுறைகளுக்கும், இன்னும் சின்னஞ் சில சிறிய அனுகூலங்களுக்கும் வசதிகளுக்கும் பாடுபட்டு வந்திருக்கின்றன. அவைகளில் சில கைகூடியும் கூடாமலும் இருந்து வருகின்றன. ஆனால் தொழி லாளர் முன்னேற்றத்திற்குரிய முக்கிய விஷங்களைச் சங்கங்கள் சம்பூர்ண பாவனைகளாக வைத்து நடத்தி வரவேண்டும். (

முக்கியமாகத் தொழிலாளர் தததம் தொழில்களைத் தங்களுக்குச் சக்தி இருக்கும்வரை செய்யும் உரிமை யைப் பெற முயற்சி செய்ய வேண்டும். தொழி லாளியை வருத்துவது வறுமை அன்று. தான் செய்யும் தொழில் தனகது நிச்சயமில்லாமை என அறிக. ஆதலின் வேலை செய்யும் சுதந்திரத்தைத் தொழிலாளர் முதலில் பெற வேண்டும். தொழிற் சாலைகளும், நிலங்களும் யாருடையதாய் இருப்பினும், அவைகளில் உழைக்கும தொழிலாளிகளுக்கும், விவசாயிகளுக்கும் எக்காலமும் அவைகளில வேலை செய்து பிழைக்க உரிமையைத் தேடிககொள்ள வேண்டும். தற்போது உலகமெங்கும் தொழிலாள ருக்குத் தொழில செய்ய உரிமை இல்லை. எத்தனை நாள் தொழிலாளன் எந்த வேலையைச் செய்து வந்தாலும், அந்த வேலை எக்காலமும் செய்து வர உரிமை இல்லை. இவன் வேலை, முதலாளி இஷ்டத்

தைப் பொருந்தியது. வேணுமென்ருல், வேலை செய்யவிடுவான். வேண்டாவிடில், வீட்டுக்குப் போய விடு என்பான். தொழிற்சாலைகளில் வேலை செய்வதும், செய்யாததும் அவனிஷ்டத்தைப் பொருந்தியது. எந்தக் காரணமிருந்தாலும் சரி, லாபம அதிகமாக வந்தாலும், அல்லது வராவிட்டாலும், வேலை நடந்தே வருவது முதலாளி இஷ்டமாகும். இந்தத் துர்ப்பாக்கிய நிலைமையால், கோடிக் கணக்கான மாந்தரின் தினசரிப் பிழைப்பு, ஒருவனுடைய ஆதிக்கத்தில் அமைந்துள்ளது. இந்த அநியாய ஆதிக்கம் தொழிலாளரின் வாழ்வு முழுமையும் நிச்சயமில்லாமல் ஆக்கிவிட்டது. உலகில் தற்போது கோடான கோடி தொழிலாளர் வேலை இல்லாமல் இருந்து வருவதும் இந்தக் காரணத்தினுலென அறிக. உலகில் உள்ள வறுமையும், இதே காரணத்தினுலென அறிக. வறுமையால் வரும் அகாலப்பிணி, மூப்பு, சாசகாடு, இதன் மூலமென அறிக.

ஆதலின உலகத் தொழிலாளரைப் பிடித்து வாட்டிவருமவிஷயமென்னவெனில், தங்களுக்கு வேலை செய்து பிழைக்க உரிமை இல்லாமைதான். இதனைத் தொழிலாளிகள் முதலில சம்பாத்தியம செய்து கொள்ள வேண்டும். சம்பளம் குறைவாய் இருந்தாலும் அவசியமில்லை. வேலை அதிகமாய் இருந்தாலும் அவசியமில்லை. வேலை கஷ்டமானுலும் அவசியமில்லை. ஓய்வு நேரம் குறைந்தாலும் அவசியமில்லை. **வேலை செய்ய உரிமை கிடைததால், மற்ற எல்லாக் குறைகளும் கூடிவருமென அறிக.**

நமது வாழ்வு ஒருவனுடைய அதிகாரத்திலிருந்து விடுதலை அடைய வேண்டும், நினைத்தபோது வேலையினின்று நீக்கும் ஆதிக்கம் முற்றிலும் ஒழிய வேண்டும். ஒருவனுக்குச்சக்தி இருக்கும் வரை அவன் வேலை செய்து பிழைக்கும் உரிமை நிரந்தரமாக எக்காலத்தும் ஸ்தாபிககப்பட வேண்டும். இதைத்தான் வேலை செய்யும் உரிமை **(Right to work)** எனப் பொருளாதாரத்தில் வழங்கப்படும்.

இதனைப் பெறுவதற்கு அடிப்படையாயுள்ளது தொழிற்சாலைகளிலும், நிலம் பயிரிடங்களிலும் தொழிலாளர் ஆதிக்கம் **(Workers Control)** செலுத்தும் உரிமை அடைய வேண்டியதென அறிக. தொழிலாளர் பெறவேண்டிய உரிமைகளில் இந்த ஆதிக்கம் இரண்டாவதாகும். தொழிற்சாலைகள், நிலம் நீர் முதலிய பொருள்கள் முதலாளிக்குச் சொந்தமாய் இருப்பினும் அவைகளை நடத்தும் விதத்தில் தொழிலாளருடைய யோசனையையும் கேட்க வேண்டுமென்ற உரிமை இருக்க வேண்டும். அதாவது, தொழிற்சாலைகளிலும், மற்றுமுள்ள பெரும் ஸ்தாபனங்களிலும், அவைகளின் சொந்தக்காரனுடைய ஏகாதிபத்திய ஆட்சியொழிய வேண்டும. இந்த உரிமையை வைத்துக்கொண்டு தான், முதலாளி, தொழிலாளரை அடிமைகளாக்கி வருகின்ருன். நினைத்தபோது தள்ளிவிடுகிருன. "சிககனம், சிக்கனமென்ற" பாசாங்குகள் காட்டித் தொழிலாளரைக் குறைக்கின்ருன் அல்லது அவர்கள் செய்யும் வேலை நேரத்தைக் குறைக்கின்ருன். அதனல் அவர்கள் கூலியும் குறைகின்றது.

வேலை செய்யும் உரிமைவுண்டானால், சகல சுதந்திரங்களும் உண்டாகும். அது அன்றியில் சகலமும் இல்லாமையாகும். ஆனால் முதலாளி செலுத்தும் ஆதிக்கத்திற்கு அஸ்திவாரமாய் உள்ளவை தொழிற்சாலைகளோ அல்லது நிலங்களோ, ஆதலால் அந்த ஆதிக்கம் ஒழியும்வரை, தொழிலாளர் சம்மதம் கிட்டாது. ஆதலால் மூன்ருவது முக்கியம் என்னவெனில் நிலங்களையும், தொழிற்சாலைகளையும் முதலாளி ஆதிக்கத்தினின்று பொது ஆதிக்கத்திற்கு கொண்டு வர வேண்டும். அதாவது பொதுவுடைமையாக்க வேண்டும். அதாவது தொழிற்சாலைகளையும் நிலங்களையும் பொது உபயோகங்களுக்குப் பொதுவுடைமையாக்குதல் வேண்டும். இம்மூன்றும் தொழிலாளர் சுகவாழவுக்கு அஸ்திவாரங்களெனப்படும். முதலாவது தொழிலாளர் கிருஷிகளுக்குத் தொழில் செய்ய உரிமை வேண்டும். அவர்களுக்கு, தொழிற்சாலை, நிலம நடக்கும வேலையில் அதிகாரம் வேணடும். மூன்ருவது இவ்விரண்டும் கைகூடிவரத் தொழிற்சாலைகளையும், நிலங்களையும் பொதுவுடைமைகளாக்க வேண்டும். தொழிற்சங்கங்கள் இம்மூன்று முக்கிய விஷயங்களை அடுத்தடுத்து மன்ருடிப் பெருவதற்கே முயன்றுவர வேண்டுமென அறிக. தொழில் உரிமை, தொழிற்சாலைகளில் ஆதிக்கம, தொழில் ஸ்தாபனங்களின் பொதுவுடைமை, இம்மூன்றும் தொழிலாளா விவசாயிகளின் உயிர்நிலை என்றென அறிக. தொழிலாளருக்கும் இம்மூன்றுமில்லாவை வொன்றுமில்லாமையே. சம்பளம் உயர்ந்தும், பயனில்லை.

மற்ற சவுகர்யங்கள் இருந்தும் பலனில்லை. தொழில் நிச்சயமில்லாத வாழ்வு அநித்திய வாழ்வென அறிக. இதனை உணர்ந்து தொழிலாளர்களின் உயிர் நிலையைக் காப்பாற்றுததினல்தான் இன்று உலகு முழுமையும் வேலையில்லாமையால் கோடி கோடி, கோடான கோடித் தொழிலாளர், விவசாயிகள், பாட்டாளிகள் வதங்கி வதைகின்றனர்.

இன்று சிக்கனமென்று சொல்லி, ரயில்வேயிலும, மற்ற பொது ஸ்தாபனங்களிலும் லட்ச லட்சமான ஏழைகளைத் தள்ளி விடுகின்றார்கள். இதனை உணராத தொழிலாளர் தலைவர் இருந்தென்ன போயென்ன? இன்று உலகம் வேலை இல்லாமையாலும், வேலையை விட்டு நீக்குவதாலும் படும் கஷ்டமெல்லாம் தொழிலாளித் தலைவர்கள் செய்துவரும் படு மோசத்தாலென அறிக. அறிந்து குற்றத்தைச் செய்வதும் மோசமே, அறியா குற்றத்தைச் செய்வதும் மோசமே. ஆதி முதற்கொண்டு தொழிலாளித் தலைவர்களென்போர், தொழில் நிச்சயத்திற்கும், தொழில் நடத்தும் சமத்துவத்திற்கும், தொழில் பொதுவுடைமையாக்கப் பாடுபட்டு வந்திருப்பார்களேயானல் இன்று உலகம் இந்த அவஸ்தைக்கு வந்திருக்க வேண்டியதில்லை. தொழிலாளித் தலைவர்கள், தங்கள் சுகபோகத்திற்கும், பட்டம் பதவி வேட்டைகளுக்கும் பரிந்து, அல்ப சொல்ப விருத்திகளோடு திருப்தி அடைந்து வந்தமையால்தான் இன்று தொழிலாளர் பழைய விளைவுகளாகிய வேலை நிச்சியமில்லாமை, வேலை நடத்த சமத்துவமில்லாமை, வேலை பொதுப்பட நடத்தாமை

யால் அவதிப்பட்டு அலேகின்றனர்.] இனி, இந்தியத் தொழிலாளர் சங்கம் இம்மூன்று உரிமைகளைத் தாமதமின்றி பெற முயற்சிக்க வேண்டும். போலிக் கூட்டங்களாகிய ஆம்ஸ்டர்டாம், ஜினிவா மகா சபைகளை விட்டு விட்டு தொழிற்சங்கங்களை இம் மூன்று உரிமைகளைப் பெற நடத்துவதுதான் தொழிலாளிக்குப் பயன் தரும் விஷயங்களாகும். இதனை மறுப்போரையாகிலும், அல்லது ஆம்ஸ்டர்டாம் முதலிய தொழில் மாநாடுகளில் நம்பிக்கை வைத்துள்ளோரையும் ஒன்று கேட்கின்றோம். 30 வருஷ காலமாகத் தொழிற்சங்கங்கள் சீர்திருத்தத் தலைவர்களாலும், பிற்போக்கு அரசாங்கத்தாராலும் ஆதரிக்கப்பட்டும், ஆம்ஸ்டர்டாம் மாநாடுகளில் தொழிலாளருக்குப் பரிந்து பேசி வந்தும், ஏன் தற்போதுள்ள அபாயகரமான இடுக்கண்கள தோன்றியுள்ளன? ஏன் கோடான கோடி மனிதருக்கு வேலை இல்லை? ஏன் இந்த உலகம் பெருத்த நெருக்கடியில் மூழ்கி வரவேண்டும்? ஏன் எங்கும் அதிருப்தியாகவே இருந்து வருகின்றது? ஏன் ஏராளமான உணவுப் பொருள்கள், விற்பனையின்றி நாசமாக வேண்டும்? ஏன் மனிதர் உழைப்பு இவ்விதமாக வீணில் போக வேண்டும்? நமது தலைவர்களின் மடத்தன்மையால் உலகம் இக்கேட்டுக்கு வந்துழல்கின்றது. இனியாகிலும் உழைப்போரைக் கலந்து கொண்டு உலகம் நடைபெறுமாகின், தனியுடைமைத் திட்டத்தால் நிகழ்ந்து வரும் தீமைகள் பலவும் ஒழியுமென அறிக.]

# 14

## தேசியமும் - அகில தேசியமும்.

தேசியமும், அதாவது ஒரு தேசத்தில் வாழும் மக்களின் தங்கள் தேசத்தின் மேல் வைத்துள்ள அபிமானம், எந்தக் காலத்திலும் உலக மக்களுக்குக் கெடுதியை விளைவித்து வந்திருக்கின்றது. இன்றைக்கும் "உன் தேசம்," "என் தேச"மென்று போட்டி போட்டுக்கொண்டு, உலகைக் கெடுத்து வருவதும் தேசியமே.

உலகம் பற்பல தேசங்களாகப் பங்கிடப்பட்டிருக்கின்றன. அந்தந்த தேசத்தில் வாழ்கின்றவர்கள் தங்கள் தங்கள் சுகதுக்கத்தைக கருதி நடக்கின்றார்களே ஒழிய உலகில் வாழும் மக்களின் வாழ்வைப் பொதுவாக நடத்துவதில்லை. தன் தேசம் செல்வத்திலும், ஆதிக்கத்திலும், செல்வாக்கிலும், மேம்பட்டு இருக்க வேண்டுமென்ற கோரிக்கை பல சங்கடங்களில், அந்தந்த தேசத்தாரை உட்படுத்துகின்றன. சாமான்ய ஜனங்கள் "என் பொருள்,"

"உன் பொருள்" என்று வழக்கு (நடத்தி) வருவது போலவே, தேசமக்களும், "உன் தேசம்," "என் தேசம்"என்று வழக்கிடுகின்றார்கள். சாமான்ய ஜனங்கள் தங்கள் சொத்துக்குப் போர் புரிவது போல், தேச மக்களும், மற்றொரு தேச மக்களோடு போர் புரிகின்றனர். பண்டைக் காலமுதல், நாளது வரை நடந்த சண்டைகள் யாவும், இந்தத்தேசிய அபிமானத்தால் உண்டாயின. கோர்ட்டு, கச்சேரிகளில் தங்களுடைய சண்டையைத் தீர்த்துக்கொள்வது போய், ஆயுத சண்டையால், தேச மக்கள் தங்கள் சண்டையைத் தீர்த்துக்கொள்கின்றார்கள். இந்த சண்டைக்காகவே அந்தந்த தேசத்துக் குழந்தைகளைத் தத்தம் தேசத்தை உயர்வாக நினைக்கும்படி கற்பிக்கப்பட்டு வருகின்றார்கள். "நமது பூமி ஆரியநாடு. வளம் பொருந்திய நாடு; நமது நாடு ஆங்கில நாடு, வீரர்கள் இரத்தம் சொரிந்த நாடு; நமது நாடு ஜெர்மன் நாடு, கல்வி கேள்வியில் (Culture) உயர்ந்த நாடு" இவ்விதமாக ஒவ்வொரு நாட்டாரும் தங்கள் தங்கள் நாட்டை, துதித்தும், மற்ற நாட்டை இகழ்ந்தும், தங்கள் நாட்டைத் தவிர மற்ற நாட்டின் மேல் விரோதத்தைச் சிறு வயதிலிருந்தே பாராட்டக் கற்பிக்கின்றார்கள். இதுதான் தேசியமென்பது. தன்னுட்டைப் புகழ்வது அயல் நாட்டை இகழ்வதே, தேசியத்தின் லட்சணமாகும்.

தேசியம், தேசிய சுயநலத்தை வளர்க்கத் தூண்டுகிறது. சுதேசியமும், தேசிய சுயநலமென அறிக. ஒருவன் தன் சுயநலத்திற்குப் பாடுபடுவது போல், ஒரு நாடும் தன் சுய நலத்திற்கே பாடுபடு

கின்றது. தன் தேச சுயநலத்திற்குப் பாடுபடுவதை நாட்டுப்பற்று (Patriotism) அதாவது தான் வாழும் தேசத்தின் மேல் வைததுள்ள அன்பென்பார்கள். தேச நட்பு, தேச விசுவாசம, தேச சேவை, என்பவை களெல்லாம் ஒருவன் தேசமென்று அழைக்கும் நாட்டின் சுயநலமே/

உலகம் தற்போது அடைந்துள்ள மாறுதல் களால், ஒருவன் தன் சுயநலத்தையே கருதி, பிறரை வஞ்சிப்பானேயாகில், அல்லது பிறருடன் சண்டை செய்வானேயாகில் அல்லது தனக்கே வாழ்வானே யாகில், அவனை உலகம் சுயநலப்பிரியனென்று அவமதிக்கின்றது. சுயநலம் இகழத்தக்க குண மென்றே சொல்வார்கள். ஆனல தேசியத்தைப் புகழத்தக்க குணமெனக் கூறுகின்றூர்கள். சுய நலம், தேசியம், இவ்விரண்டு மனப்பான்மைகளும் எதார்த்தத்தில் சுயநலங்களாயினும் ஒனறை இகழ்வ தேன்? மற்றொன்றைப் புகழ்வதேன்? பழககமே காரணம். ஒரு காலத்தில் சுயநலப்பிரியர்கள் புகழப் பட்டே வந்தார்கள். இவர்களைத் தகிர்யசாலிகள் என்று வழங்கினூர்கள். ஆனல் சுயநலங்கள் எல்லாம், பிறரைத் துன்புறுத்துவதால் சுயநலம் கெடுதி என்றே மதிக்கப்படலாயிற்று. ஆனல் தேசியமோ, பிரதேசங்களைத் துன்புறச் செய்தாலும் இதுவும் கெடுதி என்ற மனப்பான்மை இன்னும் மனிதர் மனத்தில் புகவில்லை. ஒருவனுடைய செல் வத்தை அபகரிக்க, ஒருவன் அவனைக் கொல்வானே யாகில் அவனைக் கொலையாளி என்ற மனப்பான் மையை உலகம் பெற்றுள்ளது. ஆனல், பலருடைய

செல்வங்களை அபகரிக்க பலரைக் கொள்வானே யாகில் அவனை வீரனென்ன மனப்பான்மையை இன்னும் உலகம் பெற்றுள்ளது. இந்த மனப் பானமை மாறினல்தான், உலகில போர், யுத்தம், சண்டை நிற்கும். அன்றுதான் உலகம் சுகப்படு மென அறிக.

காட்டுமிராண்டி காலத்தில் (Barbarous Age) ஒரு குடும்பத்தார் பிழைத்தால் போதுமென எண்ணி னர்கள். மற்ற குடும்பங்கள் எப்படிக் கெட்டாலும் அவசியமில லாமலிருந்தது. சிற்சில குடும்பங்கள், பங்கு பஙகாளிகளோடு கூடிக் கிராமவாசிகளாகப் பரிணமித்தபோது ஒரு கிராமவாசிகள் வாழ்நதால் போதுமென எணணிவந்தார்கள். மற்ற கிராமங்கள் கெட்டால் அவசியமில்லை என்ருர்கள். சிறு சிறு கிராமங்கள் ஒரு நகரானபிறகு, ஒரு நகரத்தார் போதுமென அயல் நகரங்களின் கதியைப்பற்றி கவனித்தாரில்லை. பல நகரங்கள் கூடித் தேசமான பிறகும், இந்த மனப்பான்மையே மேலிட்டது. ஒரு தேசம் பிழைத்தால் போதும், மற்ற தேசங்கள் கெட்டால் பலனில்லை என்ருர். இந்த மனப்பான்மை யைத்தான் இன்றைக்கும் பலபல தேசங்களில் நிரம்பியுள்ளது. இதைத்தான் தேசியமென்பார்.

சுயநலம் ஒரு காலத்தில் வாழ்த்தப்பட்டது போக, தற்காலம் இகழப்பட்டேயுள்ளது. ஆனல் அங்கிலேக்குத் தேசியம் இன்னும் வரவில்லை. இதன் காரணத்தை விளக்குவோம். சுயநலம் ஏழைக்கு இருந்தாலும், தனவந்தருக்கு இருந்தாலும கெடுதியே விளைவிப்பது கண்கூடு. ஆனல், தேசியம் அப்படி

அன்று. தேசியத்தால் இல்லாதவர்களுக்கு மாத்திரம் கெடுதியேயொழிய, உடையவர்களுககுக் கெடுதியை விளைவிப்பதில்லை. எப்படி எனில், தேசியம் இருப்பவர்களுக்குத்தான் அனுகூலமாக இருந்து வருகிறது. உண்மையில் தேசியத்தைக்கொண்டு இருப்பவர்கள், இல்லாதவர்களை யுத்தத்திற்குத் தூண்டுதல் செய்து வருகின்றார்கள். இருப்பவர்கள் பெரும்பான்மையும் கற்றவர்களாதலால், கல்லாதவர்களை ஏமாற்றுவது சுலபம். எதிராளி இப்போர் கொத்தவன், அப்போர்க்கொத்தவன் அவன் ஜெயிப்பானேயாகில், ஆதிஅந்தமுழுதும் போய்விடும், உங்கள் எல்லோரையும் அடிமைகளாக்கி விடுவான் எனறு பல விருத்தமான விஷமங்களைச் சொல்லித் தூண்டுதல் செயவதுண்டு. இதனல் அறியாதோராகிய பெரும்பான்மையோர், பகுத்தறிவை உபயோகிக்கிற திறமை அற்றவர்களாய் நாய்கள் போல் பகைவன் என்றவனமேல் விழுந்து போர் செய்கின்றார்கள். போர் செய்து வெற்றி பெற்றாலும் தோல்வியுற்றாலும் கடைசியில கஷ்டததை அனுபவிக்கின்றவன் தொழிலாளியே. இருப்பவனுக்கு எந்தக் காலத்திலும் கஷ்டமில்லை. இலலாதவனைத் தான் போர்க்களததின் நாய்களாகிய (Dogs of war) பஞ்சம், பிணி, சாக்காட்டால் அவஸ்தைப்படுகின்றவன். ஆதலின் தேசியத்தால், பலகோடி ஏழைத்தொழிலாளர்கள மோசத்துக்காளாகின்றார்கள். இதற்குத் திருஷ்டாந்தம வேண்டுமெனறல் நேற்று நடந்த மகாயுத்தத்தின் பயனை யார் அனுபவிக்கின்றார்களென்று பார்ககலாம்? ஏழைத் தொழிலாளர் பெரும்பான்மையாக, லட்சங்களாக

மாண்டதுமல்லாமல், பஞ்சம், பிணி வேலை இன்மை, வாழ்வு குறைவு முதலிய கஷ்டங்களை இன்றைக்கும் அனுபவிப்பதைக காண்க.

எந்த நாடும் தேசியத்தால் சுகப்பட்டதைக் காணோம். இந்த அவசரத்திற்கு மாத்திரம் தேச மக்களுடைய எழுச்சி, அவசியமாகத் தோன்றி னலும், அமெரிக்கையாக விசாரித்துப் பார்க்கு மளவில், (இது) கற்பித அவசரமென்றே ஏற்படும். ஒரு தேசம் இன்னொரு தேசத்தை, தோல்வி செய்தாலும் ஜெயித்தாலும் ஒரு பலனையும் அடையப்போவதில்லை. ஜெயத்தின் பலன் என்ப தெல்லாம் கற்பிதமென அறிக. ஏதோ சிலர் பணக் காரர்களாகவும், ஆதிக்கம் வளரப்பெற்றவர்களாக வும் ஆகலாமேயொழிய பெரும்பான்மையோருக்கு லாபமொன்றுமில்லை. இவர்கள் உயிரோடு மீண் டால் துன்பத்தைக் கையாள வேண்டியதே.

தேசியத்தைத் தூண்டுதல் செய்வதில் முதலாளி முதன்மையாக நினருலும் அவர்களுக்கு மதாபிமானி களும், மதகுருக்களும துணையாக இருந்து வரு கினறுர்கள். எந்த நாட்டுச் சண்டையிலும அந் தந்தக் கடவுளைத் தங்களுக்கு ஜெயமளிக்கவேண்டு மென்று பிரார்த்திக்கின்றுர்கள். இருப்பது ஒரே கடவுளானல், எந்த ஊர்சசண்டை நியாயமான சண்டை என்று தெரியக்கூடும். நேற்று நடந்த பெரும் யுத்சத்தில் அந்தநத தேசக்கோவில்களில் எங்களுக்கு ஜெயத்தை தாருமெனத் தத்தம் கடவுளை வேண்டினர்கள். உலக சண்டைகளுக்கு மதங் களும் துணைகேடாக இருப்பதைப் பார்க்கலாம்.

மதங்களும தேசியத்தின் பேரால் சண்டைகளை ஆதரிககின்றன. சுதேசியமும தேசியத்தை அடிப் படையாக வைத்துள்ளது. தங்கள ஊர் பிழைத் தால் போதுமெனப் பிற தேச சாமான்களை வாஙகா மலும், அந்தச் சாமான்களைத் தங்கள் ஊரில் செய்து வரும் விஷயம் சுதேசியமெனபது. சுதேசியத்தால் உலகம் சுகமுறுது. வேண்டிய சாமானகளெலலாம் அந்தந்த ஊர் செய்யுமேயாளுல், யார் வாங்குவது? அந்தந்த ஊர்களே வாங்கடடுமென்ருல், மீதியை யாகிலும் யார் வாங்குவது? இரண்டாவது, சீர் செய்ய வேண்டிய பொருள்கள் ஓர் ஊரில் இல்லா விட்டால் அதாவது பஞசு, காப்பி, இரும்பு, மரம், மண்ணெண்ணெய, இன்னும் பல பொருள்கள் ஓா ஊரில் இல்லாவிட்டால் அது வேண்டிய பொருளுக்கு என்ன செய்வது? பஞ்சு விளையாத ஊர் ஆடைக்கு என்ன செயயும? இரும்பு இல்லாதவூர் இரும்புச் சாமானகளுககு என்ன செயயும்? மூன்ருவது ஓர் ஊரில் செயயும பொருள பல காரணங்களால் அவ்வளவு மலிவாக மற்ருேர் ஊரில் செய்யமுடியாது. மலிவாய் கிடைககும் பொருளைவிட்டு, தனனூரில் செய்கினருர்களென்று அதிக விலை கொடுத்து வாங்குவது மூடத்தனமாகும். நான்காவது உலகம் பண்டமாற்று தர்மத்தில் வந்து கொண்டிருப்பதை யாராலும் அதை மாற்ற முடியா. ஐந்தாவது இயற்கை அனுகூலஙகளைக் கொணடு ஓர் ஊர் செய்யும் சாமான்களை எவ்வித அனுகூலமில்லாத ஊரில் அந்தச் சாமான்களைச் செய்ய எத்தனிப்பது அதர்மமாகும. ஆதலின் சுதேசியம் ஏகதேசமாக

உபயோகிக்கலாமேயொழிய, போட்டி செய்வதால உலகிற்கு நஷ்டமேவொழிய லாபமில்லை.

சுதேசியமும், ஏகாதிபத்தியமும், கைகோத்துக் கொண்டு உலகை பாழ்படுத்துகின றனவென அறிக. சுருங்க உரைக்கில தேசிய மனப்பான்மை காட்டு மிராண்டித் தன்மைகளை அடுத்தது. உலகில் உண் டான போர்கள் எல்லாம் இந்தத தேசியத்தால் நேர்ந் தன. இனியும் நடக்கப்போகும் சண்டைகளுக்கு இதுவே முதற்காரணமாக இருக்கும. இதனுல் சிறு பான்மையோருக்கே லாபமேயொழிய பெரும்பான் மைத் தொழிலாளர்களுக்குத் துன்பததை விளைவிக் கின்றது. தேசியம் இனிவரும் சந்ததியாரைச் சண் டைக்குப் பழக்குகிறது. அயல் நாட்டாரை நேசிப் பதை விட்டு விட்டு அருவருக்கச் செய்கின்ற தேசி யத்தில் பிறந்த சுதேசியமும் உலகை ஒன்று படுத்த முடியாமல் செய்கிறது. உலகத் தொழி லாளர் ஒற்றுமைககுத் தேசியமும், சுதேசியமும இரண்டும் கலந்தே நேர் விரோதிகளாய் இருந்து வருகின்றன. ஆதலின், தொழிலாளிகளும் மற்று முள்ளோரும் தேசியததைக் கூடுமானவரை வொதுக்கி, சர்வதேசக் கூட்டுறவை நாடவேண்டும, இந்தக் கூட்டுறவால்தான், இனிவரும் மாந்தர் துன்ப மற்று இன்புற்று வாழ முடியும, இதைக்கோரியே கார்ல் மார்க்ஸ் **(Karl Marx)** என்னும் பெரியார் "உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்" என்ருர். இதையே நமது இந்தியத் தொழிலாளர் யாவரும் பல்லவியாகப் பாடல் வேண்டும்.

# 15

# விவசாயத் தொழில்

உலகில் செய்துவரும் தொழில்களில விவசாயம முதன்மையானது. இந்தப் பயிரிடும் தொழில், புராதனத் தொழிலாகும.)எந்தக் காலத்தில் மனிதன் இந்தத் தொழிலைக் கண்டுபிடித்தான என்பதை நிர்ணயிக்கத் தகுந்த ஆதாரமில்லை. மரங்களில் வாசஞ்செய்தவன், தரைமேல் நடக்க ஆரம்பித்ததும் வேட்டை ஆடி பிழைக்க ஆரமபித்தான. இதன் மத்தியில் தான் விதைவூன்றி தானியம் விளைவதைக் கண்டு, விதை விதைதது தானியத்தை அறுத்து உணவுக்கு வைத்துக் கொண்டான். இது முதல் தான் நாகரிகம் ஆதி மனிதனுக்கு உண்டாகியிருக்க வேண்டும, வேட்டையாடிப் பிழைப்பது நிச்சய மில்லா வாழ்வு. இதன் பாலும உணவைத் தேடி அலைய வேண்டிவரும். ஓய்வு நேரம் கிடைப்பது அபூர்வம. மனிதனுக்கு ஓய்வு இல்லாவிடில் கல்வி, கேள்வி, நினைவு யோசனைகளுக்கு இடமில்லை. சதா காலமும் வயிற்றுக்கே பாடுபட வேண்டி வந்தால் கல்வி கேள்வி பெற கால அவகாசம் ஏது?

சாவகாசம இல்லாத வாழவு கேவலத்திலேயே இருந்து வரும். ஆகையால் மனிதனுக்கு உணவை அன்றுடம் தேடும் கவலை ஒழிந்திருக்க வேண்டும். அந்தக் காலம் விவசாயம், அதாவது பயிரிட்டு உணவை உண்டாக்கிவுண்ட காலமாகத்தான் இருக்கவேண்டும்.

வருஷா வருஷம் மழை முழுக்கப் பெய்து வரும் காலங்களில், பயிரை ஒழுங்காக விளைய வைத்து, வருங்காலத்திற்கு அறுத்துச் சேர்த்து வைக்கக் கூடுமாதலால், அறிவை, கல்வி கேள்வி களால வளர்க்கச் சாவகாசம் ஏற்படும். இந்தச் சாவ காசத்தால் தான் மனிதன் நாகரிகமடையப் பெற்ருன். ஒரு விஷயத்தில் விவசாயத் தொழிலே ஆதி மனிதனுக்குக் கல்வி கேள்வியென சகாயமாய் இருந்தது. இந்தத் தொழில் உயிரை ஒழுங்குபடுத்து வதற்கு அனுகூலமாய் இருந்ததோடு, மனிதன் நாகரிகமடையவும் அனுகூலமாய் இருநதிருக்க வேண்டும. இத்தொழிலை புரிவோராய் உலகில முக்கால் வாசி மாந்தர் இருக்கின்ருர்கள். கிராம வாசிகள், ஏறக்குறைய இந்த வேலையால்தான் சீவித்து வருகின்ருர்கள்.

இவர்களுடைய சுக, சுகாதார, பொருளாதார நிலைமை மிகக் கேவலமான இவர்களுடைய வாழ் வைத் தீர்க்க விசாரித்தவர்கள் தெரிவிக்கின்ருர்கள்.

பயிரிடும் குடியானவர்களை மூன்று விதமாகப் பிரிக்கலாம். முதலில் நிலமுள்ளவர்கள். இரண்டா வது நிலமில்லாமல் வாரததிற்குப பயிரிடுவோர்.

மூன்ருவது, நிலமில்லாமலும், வாரத்திற்குப் பயிரிட முடியாமலும், கூலிக்கு வேலை செய்வார், நிலங்களைப் படைத்து உழுது பயிரிடும் குடிகள். நமது சென்னை ராஜதானியில் அனேகர் இருக்கின்ருர்கள். அவர்களில் நேரிட சர்க்காருக்குத் தீர்வை கட்டுகிறவர்களும், இருக்கின்ருர்கள். அல்லது சமீனதாருக்கு, சுரோத்தியதாருக்கு மிராசுதாருக்குத் தீர்வை கட்டுவோருமுள்ளனர்.

சொந்தமாகப் பயிர் செய்யும் குடிகள் கடனில்லாமலில்லை. இந்தக் கடன்கள் பல வித காரணங்களால் உண்டாகிருக்கின்றன. வழக்கில் கடன்படுவோர் சிலர். ஜாதிமத சம்பந்தமான துர்பழக்கங்களுக்காகக் கடன்படுவோர் சிலர், மழையில்லாமையாலும் அல்லது வெள்ளப் பெருக்காலும் விளைவு குறைவதினுலோ அல்லது நெல் விலை சரிவாலோ நிலத்தை அடமானம் வைத்துச் சீவிப்பர் சிலர். ஒரு தடவை கடன்பட்டவன் கடன்காரர்களிடமிருந்து மீளுவது கஷ்டம். வட்டி மேல் வட்டி சுமந்து நிலங்கள கடனில் மூழ்கிப் போகின்றன. இந்தக் காரணத்தினுல், ஒரு காலத்தில் நிலம படைத்து சொந்தமாகப் பயிர் செய்தவன், வாரத்திற்கோ, கூலிக்கோ உழைக்கும் நிலைக்கு வந்து விடுகிருன். இந்தக் கூட்டத்தார் வருஷா வருஷம அதிகரித்துக் கொண்டே வருகின்றனர். இவ்விதம இன்னும் சில வருஷம நடந்தேவரின் நிலம் படைதத குடிகள் யாவருமே கூலி வேலைக்கு வர நேரிடுமென்று பயப்படுகின்ருர்கள், இதற்கு முதல் காரணமாய் உள்ளது கடனேயாகும். கடன் கொடுககும்

கோஷ்டியார் பரிதாபமில்லாதவர்கள். குடியானவன் இளைத்தவுடன் அவன் மேல் பலவித கஷ்டங்களைச் சுமத்தி கடைசியில் நிலத்தைச் சப்தி செய்து சொந்தமாக்கிக் கொள்கின்றான். நமது ஊரில் இருக்கும் பெருங்குறை என்னவென்றால் இந்தக்கடன் கொடுக்கும் மனிதக் கழுகுகளை **(Human Vultures)** அடக்குவார் யாருமிலர். சுளுவான வட்டிக்குக் கடன் கொடுத்து, குடியானவன் தன் அடமான சொத்தை மீட்கும்படியான வசதிகள் கொடுக்கும் கூட்டுறவுச் சங்கங்கள இல்லாமையே பெருங்குறை. சர்க்காரால், சில கூட்டுறவுச் சங்கங்கள் நியமிக்கப்பட்டு இலகுவான வட்டிக்குக்கடன் கொடுக்கப்படுகின்றன. ஆனால் அதன் விதிகள் கரூராய் இருப்பதாலும்,கடன் வாங்கக் காலதாமதமாவதாலும் குடிகளின் அறியாமையாலும், இந்தச் சபைகள் அதிக உபயோகமாகவில்லை. இத்தியாதி காரணங்களால குடிகள் பட்டிருக்கும் கடன் மாத்திரம் 500ல் இருந்து 1000 கோடி ரூபாய் வரையில் இருக்கிறதாம. இம்மாபெரும் கடனைச் சிலரே கொடுத்திருக்கின்றார்கள். இவர்கள் வயித்தில் தான் இந்தியாவிலிருக்கும் குடியானவர்களுடைய நிலங்கள் யாவும் மூழ்கிக் கிடக்கின்றன. இநதக் கடன் சந்ததி, சந்ததியாகவே வளர்ந்து வருகிறது. செலுத்திய வட்டியே கடன்களை மீட்கலாம். ஆனால் ஆட்சியும் நியாயமும் இந்தக் கடன் கொடுப்போர் கூட்டத்தாரிடமே இருப்பதால் கடன்களை நிவர்த்திகுச் செய்ய முடியவில்லை. குடிகளுடைய கடன் ஒழிந்தாலொழிய நமது நாட்டு மக்கள் முன்னேற்றம் அடையப்போவதில்லை.

இந்தக் கடனால் வருந்தீமை ஒரு பக்கம இருக்க, நமது குடிகளின் துன்பங்கள் இவர்களை மீளச் செய்வதாகக் காணோம். சரியான உணவும்,வைத்தியனும் இல்லாமையால் மரண விகிதம் அதிகமாகின்றது. குடும்பங்கள் சீரழிந்து கிடக்கின்றன. குடியானவர்களுடைய குடும்பங்களில் செய்யும் அனேகவித உபயோகமில்லாத நிசி, பூசை, கழிப்பு முதலிய கருமங்களாலும் சீர் கொடுக்கும் பழக்கத்தாலும், வீண் பெருமைக்குக் கல்யாணம், சாவு, பாலு, கருமாதிகளில் செய்யும் வீண் செலவுகளாலும் குடிகள் தரிதத்திரம் மேலிட்டு வருகிறது. மூன்ருவதாகக் குடிகள் வருமானமும் வருஷா வருஷம் குறைந்தே வருகிறது. குடிகளுக்குப் பயிரிட்டுப் பிழைக்கப் போதுமான நிலமில்லை. 150 வருஷத்திற்கு முந்தி பயிரிடும் குடியானவனுக்கு 30 காணி விகிதம் இருந்து வந்தது. இன்றைக்கோ 5 காணி கூட இல்லை. இந்த 5 காணியும் குடும்பப் பிரிவினையால் இன்னும் குறைந்து ஒருவனுக்கு ஒரு காணி கூட வழியில்லாமல் போகின்றது. எந்தக் குடும்பம் ஒரு காணியிலும், அரைக் காணியிலும் பிழைக்க முடியும். ஆனல் மேல் நாடுகளிலோவெனில், ஒவ்வொரு குடியானவனுக்கும் 15 காணிக்குக் குறையாமல் இருந்து வருகின்றன.

நான்காவது, பயிரிடும் வழியோ, பண்டைக்கால மார்க்கமே. வருஷா வருஷம் பயிரிடும் நிலம் அதிகரித்து வந்தும், விளைவு அதிகப்படுவதாகக் காணோம். உழவும் எருவும், காளை மாடுகளும் சக்தியற்றவை. நவீன முறைகளால் பயிரிடும் மேல் நாடுகளில்

ஒன்றுக்கு 100 பங்கு அதிகமாக விளையும்படி செய்யப்படுகின்றது.

ஐந்தாவது, வருஷா வருஷம் பயிரிட்டுப் பிழைக்கும் குடிகள் அதிகரித்தே வருகின்றார்கள். சென்ற 30, 40 வருஷத்திற்குள் 10-12 பங்கு விவசாயிகள் அதிகரித்தனர். இவர்கள் யார்? கைத்தொழில்புரிந்தோருக்கு ஜீவனம் கட்டாமையால், பயிரிட்டுப் பிழைக்க வந்தவர்களென்று அறிக. நாட்டுப் புறங்களில் கைத்தொழில் புரிந்தோர் பலர் பட்டறைகளுக்குச் சென்றாலும் மொத்தத்தில், பயிரிட்டு பிழைக்க வந்தவர்கள் அதிகரித்தே வந்திருககின்றனர். பயிரிடும் குடியானவர்களின் தொகை பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1881ல் | 100க்கு பயிரிடும் குடிகள் | 61 |
| 1901ல் | ,, | 66 |
| 1911ல் | ,, | 72 |
| 1921ல் | ,, | 73 |
| 1931ல் | ,, | — |

இவ்விதமாகப் பயிரிடும் குடிகள் அதிகரித்து வருவதாலும் சாகுபடி செய்ய போதிய நிலமில்லாமையாலும், பண்டைக்கால முறையால் விளைவு குறைந்து வருவதாலும், ஜாதிமத துர்பழக்கவழக்கங்களால் நேரிடும் வீண் செலவுகளாலும், பஞ்சம் வழக்கு முதலிய அகால சம்பவங்களால் நேரிட்டு வரும் கடன்களாலும், வரி, வாரம், சங்கம் முதலிய கட்டணங்கள் அதிகரிப்பதாலும், இருபது கோடி மக்கள் வதைந்தும், தரித்திரம மேலிட்டும்,

குடும்பங்கள் நசிந்தும் வருகின்றனர். ஆனால் நிலங்களைப் படைத்து, ஒரு வேலையும் செய்யாது, இந்த 20 கோடி மக்கள் உழப்பைக் கொண்டு வரி, வாரம், சுங்கம் முதலிய கட்டணங்களால் பிழைத்து வரும், இரண்டு கோடி மக்கள் பசி, பட்டினி அறியாது உலக சுகபோகங்களை அனுபவித்து வருகினறுர்கள். இச்சிறுபான்மையோரால் பெருமபான்மையோர்கள் சதா துக்கிப்பதா? அல்லது சகலரும் சுகமுறுவதா? இந்தக் கேள்விகுத்தான் சரியான விடை பகர வேண்டும. ஆனல நமது தேசிய காங்கிரஸ் இதனைக் கவனிக்காத தோஷத்தால் தனது சுயராஜ்யத்தில் கவனிக்கலாமென்பது சந்தேகம்.

குடியானவர்கள் படும் நஷ்டங்களும் சர்ககாவை ஓட்டி, நூலை நூற்று நாளொன்றுக்கு அணு ஒன்றிரண்டு சம்பாதித்தால் துக்க நிவாரணமாகுமென்று கூறுகிறுர் காந்தியார். "அனுதரட்கா" எனறு வழங்கும காந்தியார் தன்னுடைய குடும்பத்திற்கு ஒன்றுக்கு ஒரு ரூபா போதுமாவெனத் தானே சிநதித்துப் பார்க்கட்டும். இவ்வித விளையாட்டுப் பேச்சுசகளால் நமது நாட்டில் பசியால் வாடி வரும் மக்களுக்கு யாதொரு சுகமும் ஏற்படப் போவதில்லை.

பொதுவுடைமையோர் கூறும் வழிதான் துக்க நிவாரண மார்க்கமாகும். அது யாதெனில், நிலமில்லாதோருக்குப் போதிய நிலம் அளித்தல் வேண்டும். சாகுபடிக்குத் தகுதியான நிலங்கள் இன்று 15 கோடி ஏக்கராக்கள் இருக்கின்றன. இந்த மாபெரும் நிலங்களை முதலில் நிலமில்லாதாரைக் கொண்டு செய்நேத்தியில் (பயிரிடும் நிலைக்கு)க்

கொண்டுவரவேண்டும். இரண்டாவது மற்றுமுள்ள நிலங்களையும் குடியானவர்களைக் கொண்டு நவீன முறைப்படி பயிர் செய்ய வேண்டும். மூன்ருவது சோம்பித் திரியும் நிலச்சுவான்களிடமிருக்கும் நிலங் களைச் சர்க்கார் கைப்பற்றிக் கொண்டு வந்து, பொது வாக விசேஷப் பயிர் செய்யவேண்டும். ஏழைக் குடி யானவர்களுடைய கடன்களைத் தள்ளிவிட ஏற்பாடுகள் செய்ய வேண்டும். ஆருவது குடியான வர்கள், மத ஜாதியால் நேரிடும் வீண் செலவு செய் யாதிருக்குமாறு வற்புறுத்த வேண்டும். இத்தியாதி ஆழ்ந்த சீர்திருத்தங்களால் பயிரிடும் குடிமக்களின் துயரம நீங்குமேயொழிய மற்றபடி அபாய வழி களால் விவசாயி தொழிலாளர் துக்கம் அதிகப்படு மென்பதற்கு சந்தேகமே இல்லை.